205

புதுமை

197686

செப்டம்பர் 1 1957

25 நயா

ANIL AMORCES
MADE IN INDIA.

அணில்

கேப்புகள் முதல்தரமானவை.

சேதாரமன்னியில் சப்தம் அதிகமாகவும்
எண்ணிக்கை கூடுதலாகவும் இருக்கும்.

இவைகளையே கேட்டு வாங்குங்கள்.

★

தயாரிப்பவர்கள் :

அணில் பேப்பர் கேப்ஸ் பேக்டரி,

தபால் பெட்டி நெ. 36 — போன் : 89 — தந்தி : அணில்

சிவகாசி.

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்களாக்குவோம்"

மணி 1 | செப்டம்பர் 1, 1957 | ஓசை 2

		பக்கம்
அரசியல் :		
மொழிக்கமிஷன்	...	3
சம்பளக் கமிஷன்	...	5
ராஜாஜியைப் பாராட்டுகின்றோம் !	...	7
பண்டாரநாயகா மாறவில்லை !	...	7
படாஸ்கர் தீர்ப்பு !	...	8
நடிகர் சங்கம் நடித்தது	...	9
உலகைச் சுற்றி	...	12
செய்திக் கதிர்	...	13
ஆசிரியருக்கு	...	14
அட்டைப்பட விளக்கம்	...	15
கதைகள் :		
அன்பின் அழைப்பு	கௌசிகன் ...	23
உறவு	பாண்டியன் ...	35
நண்பனின் தியாகம்	பால்வண்ணன் ...	41
வாழ்வின் எல்லை	எம். எஸ். கமலா ...	51
பணமும் பாவையும்	ஏ. வி. எஸ். ரமணி ...	61
சந்திப்பு	ஜி. சதாசிவம் ...	89
பெண்ணே ! ஓடிப்போ	"சுகி" ...	104
கட்டுரைகள் :		
நீலகண்ட பிரும்மசாரி	சகுந்தலா பாரதி ...	21
முத்து வீராயிப்பாட்டு	எஸ். டி. எஸ். யோகியார் ...	75
கவிதைகள்		
புதுமை செழிக்க வேண்டும்	கொத்தமங்கலம் சுப்பு ...	16
புதுமை வாழ்க	பாசொலி ...	81
கிளிப்பிள்ளை	தமிழழகன் ...	87
மனத்திற்கு !	கவி பாரதி ...	113
சிறுவர் பகுதி		
விறகு வெட்டியும் கிளியும்	கலைச்செல்வி ...	83
கலைப்பகுதி		
முத்தமிழ் கலைஞர்கள்	...	97
தமிழ் முழக்கம் செய்த கலைஞர்கள்	...	98
படவிமர்சனம் "பத்தினித் தெய்வம்"	...	99
,, "இரு சகோதரிகள்"	...	100

புத்தகப்பண்ணை
தேவகோட்டை

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கடைசிப் போராட்டம்!



197616

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம்.

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி, B.A.,

சென்னை — 1—9—57 — செப்டம்பர்

மொழிக் கமிஷன்

சபாஷ், டாக்டர் சுப்பராயன்!

1955-ல் நியமிக்கப்பட்ட அரசாங்க மொழிக் கமிஷனின் அறிக்கை சென்ற வாரம் வெளியாகியிருக்கிறது. அறிக்கை தயாரித்தவர்களே 1965-க்கு முன் ஹிந்தியை அரசாங்க மொழியாக்குவது சாத்தியமில்லை என்றும், அடுத்துவரும் கமிஷன் தான் தீர்மானிக்க வேண்டுமென்றும் கூறிவிட்டு, அவர்களால் நிர்ணயிக்க முடியாத சில யோசனைகளையும் அரசாங்கத்திற்குக் கூற முன் வந்திருப்பது தான் இதில் வேடிக்கையாக இருக்கிறது.

ஆனால் அதிர்ஷ்டவசமாக கமிஷனின் அங்கத்தினர்களான டாக்டர் சுப்பராயனும் டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜியும் ஆட்சேபக் குறிப்புகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளை அரசாங்கம் உன்னிக் கவனித்திருக்க வேண்டும். அல்லது இப்பொழுதாவது கவனிக்க வேண்டும். அதற்கு மாறாக மந்திரி ஸ்ரீ தத்தார் "1965-க்குள் எல்லா அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அரசாங்க வேலையில் ஆங்கிலத்திற்குப் பதில் ஹிந்தியை உபயோகிக்க பயிற்சியளிக்கப்படுவார்கள்; ஹிந்தியை அரசாங்க மொழியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்று பாராளும் மன்றத்தில் கூறியிருக்கிறார். இம்மாதிரி பாராளும் மன்றத்தில் பல சமயங்களில் ஹிந்தி வெறியர்களும், மற்றும் பொறுப்புள்ளவர்கள் என்று கூறுபவர்களும் பொறுப்பற்ற தன்மையில் பேசியிருப்பதை, பிரதமர் நேரு வன்மையாகக் கண்டித்து வருவதை நினைக்கும் போது ஒரு வித ஆறுதல் உண்டாகிறது. மந்திரி ஸ்ரீ. தத்தார் சொல்வது போல் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆங்கிலத்திற்குப் பதில் ஹிந்தியில் பயிற்சியளிக்கப்படுவார்கள்.

ஆனால் நமது ராஜ்யத்திலும், இதர சில ராஜ்யங்களிலும் இன்னும் ஹிந்தி கட்டாயப் பாடம் ஆக்கப்படவில்லை. இந் நிலையில் ஸ்ரீ. தத்தாரின் பேச்சுக் கேற்ப மத்திய அரசாங்கத்திற்கு ஊழியர்கள் பொறுக்கப்படுவதில் ஹிந்தி கட்டாய யோக்யதாம்சமாகக் கருதப்பட்டு அமுல் நடத்தப்படுமென்று அறிகிறோம். இதனால் பல்வேறு மொழி பேசி ஆங்கிலத்தைப் பொது மொழியாகப் படித்திருக்கும் பல பட்டதாரிகள் மத்திய அரசாங்கத்தில் இடம்பெற முடியாமல் பாதிக்கப்படுவார்கள். அதே சமயத்தில் ஹந்தியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள ராஜ்யத்தவர்கள் தான் அங்கு அமர்த்தப்படுவார்கள் என்று நினைக்க இடமிருக்கின்றது.

இங்கு ஒன்றைக் குறிப்பிட்டு காண்பிக்க விரும்புகின்றோம். மொழிக் கமிஷன் தனது அறிக்கையை ஒரு வருஷத்துக்கு முன் சமர்ப்பித்து இருந்தும் அதை அரசாங்கம் வெளியிடாது தேர்தல் முடிந்தபின் வெளியிட்டிருப்பது மக்களின் மன நிலையை அரசாங்கம் நன்கு அறிந்திருக்கிறது.

நவ இந்தியாவை நிர்மாணிப்பதற்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றுவதில் முழு மூச்சுடன் நம் சக்தியை செலவிட வேண்டியதிருக்கும். இச் சமயத்தில் வீணாக சக்தியை விரயமாக்க சிறிதும் இடம் கொடுக்கக்கூடா தென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மிகவும் நிதானமாக, அல்லல்பட்டு, தேசத்தில் ஒரு நல்ல சுமூகமான சூழ் நிலையை உருவாக்கிக் கொண்டு வரும் பொழுது இவர்களுடைய விபரீத வெறிப் பேச்சுக்களினால் என்ன விளைவுகள் ஏற்படுமோவென அஞ்சுகிறோம். இந்தியப் பிரதமர் இதில் உடனடியாகத் தலையிட்டு, ஸ்ரீ தத்தார் போன்றவர்கள் எதிர்காலத்தில் இவ்விதம் பொறுப்பற்ற முறையில் பேசாதிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

இந்தியாவில் பாதிக்கு மேலுள்ள மக்களால் பேசப்படும் ஹிந்தியைத் தேசீய மொழியாக்க வேண்டியதுதான்; ஆனால் ஹிந்தி அரசாங்க மொழியாவதற்குரிய முறையில் இன்னும் வளம் பெறவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தவிரவும் பல ராஜ்யங்களில் இதுவரை ஹிந்தி கட்டாயப்பாடம் ஆக்கப்படவில்லை. இந்நிலையில் ஹிந்தியை அரசாங்க மொழியாக அமுலாக்கும் விஷயத்தில் அவசரக்கோலம் கூடாதென்றும், டாக்டர் சுப்பராயன், டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜி போன்றவர்களின் அரிய யோசனைகளையும் எடுத்துக் கொண்டு, இந்த பிரச்சனையை அடுத்த மொழிக் கமிஷனுக்கு விட்டுவிடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம். இதற்கு அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தயங்காமல் மாற்றியே தீரவேண்டும் என்றும் கூறுகின்றோம்.

சம்பளக் கமிஷன்

சென்ற இதழில் கமிஷன் கவனிக்குமா என்ற தலைப்பில் மத்திய சர்க்கார் ஊழியருக்கும், ராஜ்ய சர்க்கார் ஊழியருக்கும் வெவ்வேறு விகிதங்களில் ஊதியமளிப்பது அநீதி என்றும், என். ஜி. ஓ. களின் குறைகளை கமிஷனின் விசாரணைக்கு விட வேண்டுமென்றும் வற்புறுத்தி யிருந்தோம். அதற்கேற்ப தென் ராஜ்யங்களின் என். ஜி. ஓ. களின் தூதுகோஷ்டி பிரதமர் நேருவையும், நிதி மந்திரி ஸ்ரீ டி. டி. கே. யையும் சந்தித்து, மத்திய, ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கிடையே சம்பள விஷயத்தில் ஏற்றத் தாழ்விருப்பதை கூறியதையும் விளக்கினார்கள். இவ்வேற்றத் தாழ்வு கூடாது என்று நாம் கூறியதையும், என். ஜி. ஓ. களின் வேண்டுகோளையும் பிரதமர் நேரு ஏற்றுக்கொண்டதை நாம் பாராட்டுகிறோம்.

இதே நேரத்தில் ஆந்திர முதலமைச்சர் ஸ்ரீ சஞ்சீவிரெட்டி என்.ஜி.ஓ. களின் சம்பள விஷயத்தை மத்திய அரசாங்கம் உடனே கவனிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். அதே போல் சென்ற முறை முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் சீக்கிரத்தில் இடைக்கால நிவாரணம் அளிப்பதாகச் சொல்லும் பொழுது நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் ஒன்றும் செய்ய முடியாதென்றும் கூறி குழப்பம் உண்டு செய்ததுபோல் அல்லாமல், மத்திய அரசாங்கத்திடம் என். ஜி. ஓ. களின் குறைகளை ஸ்ரீ காமராஜ் எடுத்துக் கூறுவார் என்று நம்புகிறோம்.

சென்ற முறை என். ஜி. ஓ. களின் நியாயமான குறைகளைத் தெரிந்து கொண்டிருக்கிற நிதி மந்திரி ஸ்ரீ டி. டி. கே. கொள்கையளவில் அவர்கள் கோரிக்கையை பிரதமர் ஒத்துக் கொண்ட பின்னுல் செயலளவில் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையிருக்கிறது. நேருஜி சொல்வது போன்று கமிஷன் அவசரத்தில் நியமிக்கப்பட்டதினுல் ராஜ்ய ஊழியர்களின் குறைகளை சேர்க்க முடியவில்லையென்று சொல்லுகிறுர்கள். நாம் அதை ஒத்துக்கொள்கிறோம். ஆயினும் இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்வதற்கு இந்த கமிஷன்தான் சகல விஷயங்களிலும் தகுதி வாய்ந்தது. ஏன்? கமிஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தில் ராஜ்ய ஊழியர்களின் சம்பள நிலையையும் கவனத்தில் கொண்டு, மத்திய ஊழியர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. இந்நிலையில், ராஜ்ய ஊழியர்களைப் பற்றியும் அவர்கள் ஓர் அளவிற்கு பரிசீலனை செய்துதான் ஆகவேண்டும். ஆகவே இக்கமிஷனை இவர்கள் விஷயத்தையும் ஆராய்ந்து தனியாக ஒரு அறிக்கை கொடுக்கும்படி கேட்டுக் கொள்வதுதான் நியாயமும் நேர்மையுமாகும். இந்தப் பொறுப்பை நிறைவேற்ற, தனக்கு சரியெனப்படும் எதிலும் எதற்கும் அஞ்சாத தீரம் படைத்த ஸ்ரீ டி. டி. கே. யினுல்தான் முடியும். அதை அவர் செய்து முடிப்பார் என்பதும் நம் துணிபு.

வாசகர்கள் கவனத்திற்கு!

மத்திய, ராஜ்ய அரசாங்கங்களில் நிலவும் சம்பள, பஞ்சப் படி விகிதங்களின் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டி ருக்கின்றன :—

சம்பள விகிதம்

கீழ்த்தர குமஸ்தாக்கள்

1. சென்னை அரசாங்கம் ரூ. 45-3-60-2-90
2. மத்திய அரசாங்கம் ரூ. 60-3-80-4-125-5-130

மேல்தர குமஸ்தாக்கள்

1. சென்னை அரசாங்கம் ரூ. 80-3-95-5-110
   (ii) ரூ. 80-3-95-5-125
2. மத்திய அரசாங்கம் ரூ. 80-5-120-8-200-10/2-220

மேற்பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள்

1. சென்னை அரசாங்கம் ரூ. 140-5-190 (ii) 190-10-240
2. மத்திய அரசாங்கம் ரூ. 250-15-400.

பஞ்சப்படி

மத்திய அரசாங்கம்	பஞ்சப்படி	ராஜ்ய அரசாங்கம்	பஞ்சப்படி
ரூ. 50-வரை	ரூ. 40	ரூ. 39 வரை	ரூ. 25
		,, 40-க்கு	,, 26
		,, 41-60	,, 27
ரூ. 50-100	ரூ. 50	ரூ. 61-100	,, 29
ரூ. 100-150	,, 55	ரூ. 100-200	,, $17\frac{1}{2}$% ,, + ரூ. 13 (ரூ. 31—48)
ரூ. 150-200	,, 60		
ரூ. 200-300	,, 65	ரூ. 200-300	ரூ. $17\frac{1}{2}$% ,, + ரூ. 11 (ரூ. 48—63)

குறிப்பு :— கடை நிலை சிப்பந்திகளின் சம்பள விகிதத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வோ மிகவும் அதிகம்.

ஊக்கமும் உழைப்பும் அஞ்சா நெஞ்சமும் அன்பும் உடையார் கோசல்ராம். உலகம் என்னும் விளையாட்டு மேடையில் அவர் ஒரு விளையாட்டு வீரர் ஆவார். புதுவாழ்வு வாழ்ந்து 'புதுமை பொங்கி வாழ்க'

கொத்தமங்கலம் சுப்பு.
26-8-57.

அன்புள்ள ஆசிரியர்
கோசல்ராம் அவர்களுக்கு,

தங்களால் நடத்தப்படும் புதுமை என்னும் தமிழ் மாதப் பத்திரிகையைக் கண்டேன், மகிழ்ந்தேன்- அது சகல வசதிகளையும் பெற்று வெற்றியோடு வாழ வாழ்த்துகின்றேன்.

கே. சந்தானம்,
நிதிக்கமிஷன் தலைவர்.

ராஜாஜியைப் பாராட்டுகின்றோம்!

சுதந்திர விழாவும், சுதந்திரப் போரின் நூற்றுண்டு விழாவும் இமயம் முதல் குமரிவரையுள்ள பாரத மக்களால் குதூகலமாகக் கொண்டாடப்பட்டன. நாட்டின் தலைவர்களும் மக்களின் மட்டற்ற மகிழ்ச்சியில் பங்குகொண்டு அவர்களை வழி நடத்தும் வகையில் அருமையான சொற்பொழிவுகள் பல செய்தனர்.

அதே சமயத்தில் தமிழ் நாட்டில் இரண்டு பெரியார்கள் பேசினார்கள். ஒருவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி, மற்றொருவர் பெரியார் ராஜாஜீ. நாட்டின் சுதந்திர நன்னாளைத் துக்க நாளாகக் கொண்டாடும்படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் ஈ. வே. ரா. இதை எந்தத் தமிழனும் உயிருள்ளவரை மறக்க மாட்டான்.

அதே நாளில் சிறந்த அறிவாளிகளிலொருவரான ராஜாஜீ நாட்டில் பலமுள்ள வலதுசாரி கட்சியொன்று இருப்பதின் அவசியத்தை திட்டவட்டமாக, எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி எடுத்துக் கூறியிருக்கிறார். வலதுசாரி கட்சி என்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டு இன்றிருக்கும் நிலைதான் என்றும் நீடித்திருக்க வேண்டுமென்று கூறும் கட்சி என்பது யாவர்க்கும் தெரிந்ததே.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக ராஜாஜி அரசியலில் மித வாதக் கொள்கையையே கடைப் பிடித்து வருகிறார். இக் கொள்கையைத்தான் சென்ற பதினைந்து ஆண்டுகளாக நாம் மக்களுக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். அன்று மக்களுக்கு ராஜாஜியின் அரசியல் கொள்கை விளங்காத புதிராக இருந்தது. ஆனால் பதினைந்து ஆண்டு கழித்தாவது சமயத்திற் கேற்றபடி பேசியும், திடீரென சில பேர்களை ஆதரித்தும் வந்த அவர் சுதந்திரப் போர் நூற்றுண்டு விழா கொண்டாடப் பெற்ற புனித நாளில் தமது மிதவாதக் கொள்கையைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டதற்கு அவரைப் பாராட்டுகின்றோம்.

பண்டார நாயகா மாறவில்லை!

சென்ற இதழில் ஈழ நாட்டுத் தமிழர்களைப் பற்றி எழுதும் போது திரு. பண்டார நாயகா, திரு. டட்லி சேனநாயகா போன்று உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர் அல்லவென்று அவரைப் பாராட்டியும், ஈழநாட்டுத் தமிழர்களுக்குக் கிடைத்த முதல் வெற்றியைப் பற்றியும் எழுதினோம்.

ஆனால் நாம் எழுதியதற்கு மாறாக குழப்பம் தரும் செய்தி வந்தது திரு. பண்டார நாயகா பல்டி அடித்துவிட்டார் என்றும், மீண்டும் சத்தியாக்கிரகப் போர் என்ற செய்தியும் கிடைக்கப் பெற்று மனம் வருந்தினோம். ஆனால் திரு. பண்டார நாயகாவைப் பற்றி நாம் எழுதியது சரியே என்பதை அவர் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். அவரும், பெடரல் கட்சித் தலைவரும் விடுத்துள்ள கூட்டறிக்கை நம்மை மகிழ்ச்சியுறச் செய்கின்றது.

ஆயினும் மனிதனின் இழந்த உரிமையை மீண்டும்பெற நினைக்கும்போது போராட்டமின்றி அடையமுடியாது- அதை ஈழத்தின் சரித்திரம் பொய்ப்பித்திருக்கிறது. போராடித் தியாகங்கள் செய்த பின் இந்தியா சுதந்திரமடைந்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தின் விளைவால் தான் ஈழநாடு போராட்டமின்றி விடுதலையடைந்தது. இதை ஈழநாட்டுப் பிரதமர் நினைத்து, ஈழத்தைத் தாயகமாகக்கொண்டு சிங்களத்தை சிங்காரப் புரியாக்கிய தமிழர்களுக்கு கேட்கும் உரிமைகளைத் கொடுத்து விடுவார் என்று எதிர்பார்க்கலாமோ என்றும் தோன்றுகிறது. ஏன்? இந்தியப் பிரதமரின் அயல் நாட்டுக் கொள்கையை அப்படியே ஒப்புக்கொள்கின்ற ஈழநாட்டுப் பிரதமர் இதில் மட்டும் பின் வாங்கக் காரணமில்லை- ஈழநாட்டிற்கும் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் போராடிய தமிழன் பரம்பரையினர் தான் இந்த உரிமைப் போராட்டத்தை நடத்துகிறவர்கள்!

சேனநாயகா—நேரு ஒப்பந்தத்தை முன்னுள் பிரதமர் காற்றில் பறக்க விட்டார். அதன் விளைவு சிங்கள மக்கள் அவரைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார்கள் என்பதைத் தேர்தலில் கண்டோம். ஆகவே ஒப்பந்தங்களுக்கு எத்தகைய மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டுமென்பதை திரு. பண்டார நாயகா உணராமலிருப்பாரா?

படாஸ்கர் தீர்ப்பு

செங்கற்பட்டு மக்களின் பரிதவிப்பு!

படாஸ்கர் தீர்ப்பு, அதை எதிர்பார்த்து ஏங்கியிருந்த தமிழர்களைச் சோதனையில் ஆழ்த்தியிருக்கின்றது. திருத்தணியிலே முருகனைத் தரிசிக்க வேண்டுமென்பதற்காக பக்த கோடிகள் திருத்தணி தமக்கு வேண்டுமென்றுர்கள். தமிழன் வாழும் பிரதேசம் தங்களுக்கு வேண்டும் என்று சொன்னுர்கள் வேறு சிலர். அதற்கென போராட்டங்கள் பல நடந்தன. திருத்தணி நமக்குக் கிடைத்தது மகிழ்ச்சியே!

ஆனுல் நம் போன்றவர்கள் இந்த எல்லைப் பிரச்சனையை ஆந்திர அரசாங்கத்துடன் சுமூகமாகப் பேசித்தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னேம். நண்பர் கிராமணியார் "மத்தியஸ்தம்" வேண்டுமென வாதாடினுர்; போராடினுர். சென்னை அரசாங்கமும் அதற்கு இணங்கியது. மத்தியஸ்தரின் தீர்ப்பை ஒப்புக்கொள்வதாக இரு சாராரும் கையெழுத்திட்டனர். செங்கற்பட்டு ஜில்லாவில் திருவள்ளூர்-பொன்னேரித் தாலுகாகளில் வாழும் ஒரு லட்சம் தமிழர்கள் தங்களைப் பெட்டி படுக்கையுடன் பார்சல் செய்து அனுப்பும் இத்தீர்ப்பு வருமென்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்! அது மட்டுமா! ஆரணி ஆற்று அணைக்கட்டைக் கட்டி செங்கற்பட்டு மாவட்ட மக்களைச் செழிப்புறச் செய்ய சென்னை அரசாங்கம் ஒரு கோடி ரூபாய் செலவும் செய்தது.

அந்தோ! ஆரணி ஆற்றுத் திட்டமும் தமிழர்களிடமிருந்து கை நழுவி விட்டது. தமிழகத்திற்குத் தண்ணீரைக் கொண்டு வருவதற்காக கேரளத்திலும் ஆந்திரத்திலும் தருமம் கேட்கிறது தமிழகம். இச் சூழ்நிலையில் தன்னிடமிருந்த தண்ணீரையும் கொடுக்க சென்னை அரசாங்கம் சம்மதிக்க முடியுமா?

"மொழி, இனம்" என்ற குரல்கள் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்காது என்ற உண்மையை இந்நிலையிலாவது இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? அதுதான் இல்லை. நண்பர் கிராமணியார் "இனம், மொழிக்காகப் போராடிய எனக்குத்திருத்தணி வந்தால் போதும். ஆரணி ஆற்றையும் செங்கற்பட்டு தமிழர்களையும் பெட்டி படுக்கையுடன் அனுப்பும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லுகிறாராம்.

மேலும் படாஸ்கர் தீர்ப்பின்படி ஆந்திராவுக்குச் சேர விருக்கின்ற கிராமங்களிலே தெலுங்கு பேசுகிறவர்கள் அதிகம் என்று சொல்லுகிறாராம். ஆனால் அவர்களோ தமிழர்களுடன் தமிழர்களாய் வாழும் நாங்கள் ஐதராபாத்துக்குப் போகமாட்டோம் என்று சென்னைக் கோட்டையிலே வந்து குமுறிக்கொண்டிருக்கிறார்கள். கட்டபொம்மனை "மறத்தமிழன்" என்று நண்பர் கிராமணியார் வர்ணிக்கிறார். நாம் அதை ஆட்சேபிக்கவில்லை. கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட இடத்திலே அவ்வீரனுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப நாம் உறுதி கொண்டுள்ளோம். தமிழன் என்பதற்காகவல்ல, வெள்ளையனை எதிர்த்த வீரன் என்பதற்காக. கட்டபொம்மன் யார்? கம்பளத்து நாயக்கர்; ஆந்திரத்திலிருந்து விரட்டப்பட்டு ஓடி வந்து நெல்லையில் குடியேறிய கட்டபொம்மனை, தமிழே பேசத் தெரியாத கட்டபொம்மனை, "மறத் தமிழன்" என்று சொல்லும்போது, பொன்னேரி மக்கள் தெலுங்கும் பேசுகின்றார்கள் என்ற காரணத்தால் அவர்களை ஆந்திரத்திற்கே அனுப்பிவிடலாம் என்பது நேர்மையாகுமா வென்று நெஞ்சில் கை வைத்து கிராமணியாரே முடிவு கூறட்டும்!

தமிழர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்துக் குரியதாய் இருக்கின்ற இவ் வேளையில் நமது முதலமைச்சர் காமராஜ் இரண்டுங்கெட்டான் நிலைமையில் இருக்கிறார் தீர்ப்பை ஒத்துக் கொள்வதாகக் கையெழுத்திட்டதை நினைப்பாரா? சென்னை ராஜ்யத்தின் எதிர்காலப் பொருளாதார நிலையை நினைப்பாரா?

நடிகர் சங்கம் நடித்தது!

இவ்வருட சுதந்திர விழா, சுதந்திரப்போர் நூற்றாண்டு விழாவுடன் சேர்ந்து கொண்டதால் மக்கள் பன்மடங்கு உற்சாகத்துடன் விழாவைக் கொண்டாடினர். இலவசக் கலை நிகழ்ச்சிகள் கவர்ச்சிகரமாக அமைந்திருந்தன. திருவல்லிக்கேணி கடற்கரையிலும், தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலும், நகர சபை ஸ்டேடியத்திலும் ஒரு வாரமாகத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நகர சபை ஸ்டேடியத்தில் முதல் நாள் எம். ஜி. ராமச்சந்திர னின் 'இன்பக் கனவு' நாடகமும், அடுத்த நாட்களில் கலா க்ஷேத்திர மாணவிகள் நடனம், சீர்காழி கோவிந்தராஜன் இசை விருந்து, நடிகை ராஜசுலோசனாவின் நடனம், எஸ். வி. சகஸ்ர நாமத்தின் 'நாலு வேலி நிலம்' நடைபெற்றன. அத்துடன் தென்னிந்திய நடிகர் சங்கத்தாரின் "சுதந்திரப் போர்" குறித்த கலை நிகழ்ச்சிகள் காண்பிக்கப்பட்டன.

வெள்ளையரை எதிர்த்து வீர முழக்கம் செய்த கட்ட பொம்ம னாக சிவாஜி கணேசன் வீராவேசத்துடன் பேசினார். நடிகர் முஸ்தாபா கப்பலோட்டிய தமிழனாக மிகவும் உருக் கமாக நடித்தார். தேசக் கொடியைக் காத்த திருப்பூர் குமரனாக தசரதன் நன்கு நடித்தார்.



அங்கோர் பகத்சிங்! இங்கோர் வாஞ்சிஐயர்! பகத்சிங்கின் தியாகத்தை மேடையில் நன்கு சித்தரித்துக் காண்பித்தார்கள். ஆனால் வாஞ்சி ஐயர் மீது நம்மவர்களுக்கு ஏன் வாஞ்சையில்லாது போயிற்று? அவர் செய்த தியாகத்தை தென்னகம் அவ்வளவு சீக்கிரத்திலா மறந்து விட்டது! 1942-ம் வருஷப் புரட்சியில் இமயம் முதல் குமரி வரை குமுறிக் கொந்தளித்த சமயத்தில் தென்னாட்டில் இரு வீரர்கள் தூக்கு மேடை சென்று, புத்துயிர் பெற்று திரும்பி வந்தார்களே அவர்களைப் பற்றி கலைவிழா நடத்தினவர்களுக்கு ஞாபகம் இல்லா மற் போனது வருந்தத் தக்க விஷயம்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தாரை நாம் பாராட்ட வேண்டும். கட்சி பேதமின்றி கலைஞர்கள் எல்லோருமே விழாவில் பங்கெடுத் துக் கொண்டது போற்றற்பாலது. உண்மையிலேயே தேசபக்தர் கள் எவ்விதம் தங்களைத் தாமே தியாகம் செய்வார்கள் என்பதை யெல்லாம் நாடகத்தில் எவ்விதம் நடித்துக் காண்பிக்க முடியும் என்பதை வெகு நன்றாக நடித்துக் காண்பித்தார்கள்.

இவ்விழாவை கோலாகலமாக பொது மக்கள் கொண்டாட வேண்டுமென்பது அரசியலாரின் ஆசை. எத்தனையோ விஷயங்களில் அரசியலார் நினைப்பதை நடைமுறையில் கொண்டு வருவதில் நம்பிக்கையற்ற அதிகாரிகளும் இங்கு இருக்கிறார்கள். அதற்கு மாறாக நமது அரசாங்க செய்தி இலாகா அதிகாரியாக இருக்கும் கே. திரவியம் அரசியலாரின் விருப்பத்தைச் செயலிலே காட்ட பல நோக்கங்கள், கொள்கைகள் கொண்ட நடிகர்களையும் மற்றும் கலைஞர்களையும் ஒன்று சேர்த்து சென்னை நகரத்திலே கண்கொள்ளா காட்சி விருந்தாக சுதந்திர விழாவை அமைத்துக் கொடுத்தார். அதற்காக நாம் கே. திரவியத்தை மனதாரப் பாராட்டுகிறோம்.

அன்று நமது முதலமைச்சர் காமராஜ் கலைஞர்களை பெரிதும் பாராட்டி அவர்களுக்கு மலர்மாலை சூட்டினர். அதே போல் கலைஞர்களும் முதலமைச்சருக்கு மாலை போட்டு மகிழ்ந்தனர். இவ்விழாவில் நடிகர்கள் எம்.ஜி. ராமச்சந்திரன், எஸ். எஸ். ராஜேந்திரன், முதலமைச்சர் கே. காமராஜ் முதலியோர் பேசினர்கள்.

நமது முதலமைச்சர் கே. காமராஜ் "மக்களிடையே உண்மையான தேச பக்தி இருக்க வேண்டும். தேசத்தின் நலமே பிரதானமாகக் கொண்டு மக்கள் தொண்டு செய்ய வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக எவ்விதக் காரியமும் செய்யலாகாது. மேலும் பழமையிலிருந்து நாம் புதுமையில் பல பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். அன்று சிறு சிறு பிரதேசங்களாகப் பிரிந்திருந்து அந்நியர்கள் கையில் சிக்குண்டது போலல்லாமல் எதிர் காலத்தில் நாம் யாவரும் 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்ற பாரதியின் வாக்கை மனதில் வைத்துக் கொண்டு நம் நாட்டின் சுபீட்சப் பாதையில் முன்னேறுவோமாக" என்று கூறினர்.

உலகைச்சுற்றி

கலைவாணர் மறைவு

—

சென்னை—ஆகஸ்டு 30.

நகைச்சுவை நடிகர் ஸ்ரீ. என். எஸ். கே. இன்று காலமான செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

ஆ-ர்.

ஐஸன்ஹோவர் வெற்றி
அயல் நாடுகளுக்கு உதவியில் வெட்டு ரத்தாயிற்று

வாஷிங்டன், ஆக. 26— அயல் நாடுகளுக்கு ஐஸன்ஹோவரின் திட்டத்தில் 50 கோடி டாலர் குறைக்க வேண்டும் என்று அமெரிக்கப் பிரதிநிதிகள் செய்த முடிவை இன்று செனட் நிதி ஒதுக்கல் கமட்டி மாற்றி யமைத்து, ஜனாதிபதி திட்டத்தில் குறைப்பு ஏதும் செய்ய வேண்டியதில்லை என தீர்மானித்தது.

எகிப்து தலைநகரில் ஜெனரல் திம்மையா
நாஸருடன் சந்திப்பு

கெய்ரோ, ஆக. 26—இந்தியப் படைத் தலைவர் ஜெனரல் திம்மையா இன்று நாஸருடன் சிற்றுண்டி அருந்தினர். அவருடன் கூட கெய்ரோவிலுள்ள இந்திய ஸ்தானிகர் அலியாவர் ஜங்கும் விஜயம் செய்தார்.

எகிப்தில் நான்கு நாள் தங்க திட்டமிட்டுள்ள திரு. திம்மையா கெய்ரோவுக்கு 10 மைல் வெளியே உள்ள மாதி ஆயுதத் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டார். கவசமணிந்த ராணுவ மோட்டார் படையின் சில பகுதிகளையும் பார்வையிட்டார்.

இந்திய படைத் தலைவருக்கு இன்றிரவு எகிப்திய ராணுவ உத்யோகஸ்தர்கள் சங்கம் ஒரு வரவேற்பு அளிக்கும்; திரு. திம்மையா புதன் கிழமை அன்று இந்தியாவுக்குப் பயணமாவார்.

ஏமன் மீது பிரிட்டிஷ் படைகளின் திடீர் தாக்குதல்
இத்தாலியிலுள்ள ஸ்தானிகர் அறிவிப்பு

ரோம் ஆக. 26— ஏமனைச் சேர்ந்த பிராந்தியத்தை பிரிட்டிஷ் படைகள் விமானம், நெடுங்குறி பீரங்கிகள், டாங்கிகள் சகிதம் தாக்கி வருவதாக ரோம் நகரிலுள்ள ஏமன் ஸ்தானிகராலயத்திற்கு உத்யோக ரீதியில் தகவல் கிடைத்திருக்கிறது.

செய்திக்கதிர்

தமிழில் அரசாங்க அலுவல்கள் :

சென்னை, ஆகஸ்ட் 20—
ரெவினியு இலாகாவில் உத்தியோக சம்பந்தப்பட்ட அலுவல்களெல்லாம் இனிமேல் தமிழிலேயே நடைபெறும். அக்டோபர் மாதம் 2-ந்தேதி இந்த மாறுதல் கையாளப்படும்.

ஒரு ரூபாய் 'செக்'

புதுடில்லி ஆகஸ்ட், 23—
இவ்வருஷத்தின் முடிவில் பிரயாணிகளின் ஒரு ரூபாய் 'செக்' ஸ்டேட் பாங்க் ஆங் இந்தியா வெளியிடப் போவதாக உதவி நிதி மந்திரி பி. ஆர். பகாட் லோக் சபையில் கூறினார்.

டாமனில் அந்நிய துருப்புகள்

புது டில்லி. ஆகஸ்ட் 24—
இந்தியாவிலுள்ள போர்ச்சுக்கீஸியருக்குச் சொந்தமான டாமன் பிரதேசத்தில் நீக்ரோ, வெள்ளையர்கள் கலந்த படையொன்று வந்திறங்கியதாகக் கூறப்படுகிறது. ஆகஸ்ட் 15ல் ஊரடங்குச் சட்டம் டாமனில் போடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி குழந்தைகள் படத்தை ஆரம்பித்து வைத்தார்

திருவனந்தபுரம், ஆகஸ்ட் 15-
'ஹம்பஞ்சி ஏக் டால்கே' என்ற குழந்தைகளுக்கான (ஏ. வி. எம். தயாரித்தது) ஹிந்தி சினிமாப் படத்தை திருவனந்தபுரம் சென்டிரல் சினிமாக் கொட்டகையில் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் ஆரம்பித்துவைத்தார்.

திரு. வி. க. நகரை முதலமைச்சர் காமராஜ் திறந்து வைத்தார்.

சென்னை, ஆகஸ்ட், 16—
செம்பியத்தில் அரசாங்கத்தின் உதவியால் 486 வீடுகள் கொண்ட திரு. வி. க. நகரம் என்னும் தொழிலாளர் காலனியை முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் திறந்து வைத்தார்.

அடுத்த இதழில்......

'சுகி' எழுதும்

'காமனை வென்ற கண்'

என்ற தொடர் கதை ஆரம்பம்!

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

ஆசிரியருக்கு..

அன்புடையீர், வணக்கம், 'புதுமை' புது அழகுடன் மிளிர்கிறது. மிக்க மகிழ்ச்சி. தங்கள் முயற்சிக்கு என் ஆசி.

அன்புள்ள,

தொ. மு. பாஸ்கரன்,

(செங்கற்பட்டு, சப்-கலெக்டர்)

அட்டையுடன் நூறுபக்கம் அளித்துள்ளீர். அதேபோல் விஷயத்தையும் அளித்திருந்தால் பெருமைப்படலாம்...சாதாரணமாக சஞ்சிகைகளுக்குரிய எழுத்துக்களை நீங்கள் உபயோகித்தலவசியம்.

சென்னை, **எச். எம். ஏ. பாஷா.**

நேயர்களுக்குத் தோன்றும் அரசியல் சம்பந்தமான சந்தேகங்களைத் தீர்க்க கேள்வி-பதில் பகுதி ஆரம்பித்தால் நலமாயிருக்கும்.

திருநெல்வேலி, **ம. சேர்மன்துரை.**

மாதத்திற்கு ஒரு பத்திரிகை என்றால் மிகவும் வருந்தத்தக்க செய்தியாகும். கூடிய விரைவில் மாதம் இரு முறையாகவாவது மாற்ற முயற்சி செய்யுங்கள்.

சென்னை, **கோ. சுந்தரவடிவேலன்**

முதல் ருசி வாசகர்களை முற்றும் சுவைத்து வாழ வைக்கிறது.

பாளையங்கோட்டை,

எம். சௌந்தர பாண்டியன்.

'புதுமை' தமிழக மக்களுக்கு புது ஒளி வீசும் புனித இதழாக விளங்கக் கூடிய அறிகுறிகள் பல பரவிக் கிடக்கின்றன.

சேந்த மங்கலம், **ப. குட்டியப்பன்.**

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதைப் போல் 'புதுமை' வீர நடை போட்டு சிறக்கும்.

கோவை, **மூ. வேந்தன்.**

'புதுமை'யில் போதிய அளவு தமிழ் மணம் கமழவில்லை. அதனால் பெரும் வருத்தம்.

திருச்சி, **எம். தேவசகாயம்.**

''நாட்டின் முதுகு எலும்பும் கவனிப்பார் அற்றுக் கிடக்கும் நடைபிணங்களுமான சர்க்கார் உத்தியோகஸ்தர்களின், பரிதாப நிலையை நன்குணர்ந்து முதல் இதழிலேயே அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டி, அவர்களின் கண்ணீரை துடைக்க முயலும் 'புதுமை,' நம்முடைய சொந்தப் பத்திரிகை.'' என்று ஒவ்வொரு கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தரும் உரிமை கொண்டாடும்படி எடுத்த எடுப்பிலேயே செய்து விட்டதானது பாராட்டத் தக்கது.

கடலூர், **என். எஸ். மணி.**

''சிறிய கருத்துத்தான் காணிக்கை. ஆனால் சிருங்காரங்களைக் கொண்டு சித்தரித்து, சாலச் சிறப்போடு செய்திருக்கிறார் ஆசிரியர். அன்னவர் பெற்ற எதுகைமோனை என்னும் இலக்கிய விருந்தை யாவர்க்கும் வாரி வழ்ங்கியிருக்கிறார்''

மதுரை, **எஸ். எம். அப்துல் காதர்**

''புதுமை'' வளர்பிறை போல் வளர்ந்து வான் புகழ் வள்ளுவன் வழியில் வளம்பெற வாழ்த்துகிறேன். தமிழர் கரங்களில் தருவது தவழக் கூடிய பொன்னேடு ''புதுமை''. வாழ்க 'புதுமை'!

பாம்பன்மலை,

தாயம்மாள் சீனிச்சாமி.

அட்டைப் பட விளக்கம்



காலை. இளம் பரிதி எழும் வேளை. பின்னுல் அது விரிக்கும் பொன் கதிர்கள். முன்னுல் நீலக் கடல். நீலமணி போன்று நெருப் பெதிரே மாய ஒளி செய்கிறது. ஒரு மாஞ்சோலை. ஓங்கி வளர்ந்த மரக்கிளை யொன்றில் ஒரு பேடைக் குயில் பெருமையுடன் வீற்றிருக் கிறது. இன்னிசைத் தீம்பாடல் ஒன்றை இசைக்கிறது. அக்காட் சியை "நெட்டைக்கனவின் நிகழ்ச் சியில்" கவி காண்கிருர்.

"காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்"

என்று குயில் உருக்கமாகப்பாடு கின்றது. கவி குயிலின் பக்கம் சென்று "பேடே, திரவியமே, பேரின் பப் பாட்டுடையாய்! ஏழுலகும் இன்பத்தீ ஏற்றுந்திறனுடையாய்! பீழையுனக் கெய்தியதென்!" எனக் கேட்கிருர்.

குயில் கவிஞரிடம் தன் உள்ளத் தைத் திறந்து கூறுகின்றது. அதன் விளைவாகக் கவிஞர் பரவசமாகி தனக்கு "மனிதவுரு நீங்கிக் குயிலு ருவம் வாரோதோ" என்று குயில் மீது காதல் கொள்கிருர். அவரை நான்காம் நாளில் வந்தருள வேண்டுகின்றது குயில்.

கவி வருகிருர். குயில் ஒரு ஆண் குரங்குடன் ஏதேதோ கூறி இரங்கும் நிலை காண்கிருர். தன் கைவாளை எடுத்துக் குரங்கின் மீது வீசுகிருர். குயிலும் குரங்கும் தப்பி மறைகின்றன. இன்னெரு நாள். அதே சோலையில் குயில் ஒரு கிழக் காளை மாட்டுடன் கொஞ்சிக் குலா விக் கொண்டிருப்பதைப் பார்த்த கவிஞர் வெகுண்டு, கலக்கமுற்று நெஞ்சில் அனல் கொண்டு வாளை எடுத்துக் காளை மீது வீசுகிருர். குயில் எங்கோ பறந்தோடுகிறது.

கவிஞர் மற்ருெரு தடவையும் குயிலைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. அப்போது குயில் தன் பூர்வ ஜன்மக் கதையை உரைத்த பின் அவரது கையில் வீழ்கிறது. இன்ப வெறி கொண்டு அதனை முத்தமிடுகிருர். கோகிலத் தைக் காணவில்லை.

பெரியவிந்தை! பெண் ஞெ ருத்தி அங்கு சற்றே தலை குனிந்து தெய்வீகக் காட்சியாக நிற்கிருள். கவிதை மிதக்கும் விழிகள். தூய சுடர் முத்தையொத்த பற்கள். "அப்பெண்ணரசின் மேனி நலத் தினையும், வெட்டினையும், கட்டினை யும், தேனில் இனியாள் திருத்த நிலையினையும், எற்றே தமிழில் இசைத்திடுவேன்" என்று கவிஞர் அவள் அழகை வர்ணிக்க முடியா மல் திணறுகிருர்.

ஆனுல் அட்டைப் படத்தில் நமது ஓவியர் அப்பெண்ணரசின் அழகை வர்ணிப்பதில் வெற்றி பெற்றிருக்கிருர் அல்லவா?

x x x x x x

செப்டம்பர் 11-ந் தேதி மகா கவி பாரதியின் நினைவு நாள். நாட்டிற்கு அவர் செய்த சேவையை நினைந்து அவருக்கு அஞ்சலி செய்வோமாக!

புதுமை செழிக்க வேண்டும்!

(கொத்தமங்கலம் சுப்பு)

புதுமை செழிக்கவேண்டும்
பொன்னுக விளைய வேண்டும்
முதுமை தொலைய வேண்டும்
மூச்சினில் வீரம் வேண்டும்
பதுமைகள் என்று வாழ்ந்த
பண்டையக் காலம் மாரி
புதுமையாய் மக்கள் வாழ
பொங்கிய சுதந்திரத்தால்
எண்ணத்தில் புதுமை வேண்டும்
எழுத்தினில் புதுமை வேண்டும்
திண்ணமாய் நடத்தல் வேண்டும்
திரவியம் தேடல் வேண்டும்
திரவியம் தன்னைச் சேர்த்து
தேசத்து மக்க ளோடு
உறவுகள் பூண்டு நாமும்
ஒருகுலம் ஆக வேண்டும்
செல்வத்தில் தலையாம் செல்வம்
தேசம் நமதென் றெண்ணல் வேண்டும்
கல்வியில் தலையாம் கல்வி
கலந்து நாம் வாழ்வதாகும்
நல்லவை தனியார்க் கில்லை.
நாட்டுக்கே புகுத லாகும்
வல்லமை கூடி வாழி
மா காளி! வாழ்த்துவாயே.

உலகப் பிரசித்தி பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்

பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 5200/48—5டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.

பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க

தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு

அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட்.

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

சுந்தரம் காபியின் சேவை உங்களுக்கு.

SUNDARAM'S.

100% பியூர்

COFFEE

100% சுத்தமானது

Best Quality

&

Flavour & Taste

AIR. No. 152692.

சுந்தரம் காபி பொது மக்களின் ஆதரவினுல்
சென்ற ஒன்பது ஆண்டுகளாக
வளர்ந்து வரும் ஸ்தாபனம்

**இந்திய சர்க்கார் கலப்பட
சட்டத்திற்குட்பட்டது.**

விஞ்ஞான முறைப்படி மின்சார யந்திரத்தினுல்
சுகாதார முறைப்படி உயர்தரமான காப்பிக்
கொட்டையினுல் தயாரிக்கப்படுகிறது.

சுந்தரம் காபி & ஜெனரல் சப்ளேஸ்

தி. நகர். : : சென்னை—17

நீலகண்ட பிரும்மசாரி

சகுந்தலா பாரதி

மக்கள் கவிஞர் பாரதியாரின் புதல்வியார் தன் தந்தையின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சியை எழுத்தோவியமாக்கிக் காட்டுகிருர்.

எந்தையாரின் நண்பர்களில் நீலகண்ட பிரும்மசாரி ஒருவர். நாங்கள் புதுச்சேரியிலிருந்து திரும்ப வந்த பிறகு திருவல்லிக்கேணியில் குடியிருக்கும் போது எங்கள் வீட்டுக்கு அவர் அடிக்கடி வருவார். தான் சிறைச்சாலையில் பட்ட துன்பங்களையும் தமது தற்கால நிலையையும் அப்பாவிடம் சொல்லி வருத்தப்பட்டார்.

வேலை தருவார் யாருமிலர். கட்டுரைகள் எழுதிப் பிழைக்கலா மென்ருல் அவர் எழுதும் உணர்ச்சியுள்ள கட்டுரைகளைப் பிரசுரிக்க ஒரு பத்திராதிபரும் ஒப்பவில்லை. முதலாளித்வம் தாண்டவமாடிய காலத்தில் பொதுவுடமைக் கட்சி பேசத் துணிந்தவர்கள் நிலமை யாவரும் அறிந்ததே.

ஸ்ரீ நீலகண்டன் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். பங்கிம்சந்திரர் எழுதிய 'ஆனந்த மடம்' என்ற அற்புத நவீனத்தில் வரும் சன்யாசிக் கூட்டத்தாரின் தலைவரைப் போல 'பிரும்மசாரி' என்று தன் பெயருடன் இணைத்துக் கொண்டார்; மறைந்து வாழும் தேசபக்தர்கள் தியாகிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

நீலகண்ட பிரும்மசாரியும் அவரது நண்பர் ஒருவரும் வெங்கடரங்கம்பிள்ளைத் தெருவில் ஒரு சிறிய வீட்டு மாடியில் குடியிருந்தார்கள். என் தந்தை தம் கையில் பணமிருந்தால் அதை உடனே நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வார். ஆனல் திருவல்லிக்கேணியில் வசித்த நாட்களில் அதாவது அவரது கடைசி நாட்களில் தினமடிராம் சார்ஜுக்காக அவரிடம் நான் காலையில் கொடுக்கும் ஒரு ரூபாயைத் தவிர வேறு பணமிருக்காது. அந்த நாளில் அப்பாவுக்கு மாதம் எண்பது ரூபாய் சமபளம். அதில வீட்டு வாடகை ரூ 25; கட்டில் பேழை வகையரா வாடகை ரூ 12; பாக்கி மற்ற செலவுகள் நடக்க வேண்டும்.

இந்த நிலையிலே நீலகண்ட பிரும்மசாரியும் அவரது நண்பரும் வந்து சேர்ந்தார்கள். (அந்த நண்பர் பெயர் எனக்கு மறந்து போய் விட்டது) நண்பரின்

நிலை ஸ்ரீ நீலகண்டன் நிலையை விட கஷ்டமானது. எனவே என் தந்தை அவருக்குத் தன்னிடம் மாதம் பதினெட்டு ரூபாய் சம்பளத்தில் 'செகரட்டரி' வேலை போட்டுக் கொடுத்தார். வீட்டில் சாப்பாடு போடுவது சாத்யமில்லை. ஏற்கனவே வீட்டில் அடிக்கடி வரும் விருந்தாளிகளுக்குக் குறைவில்லை. நிரந்தரமாக ஒரு விருந்தாளியை வைத்துக் கொள்வது இயலாதென்று என் தாயார் சொல்லி விட்டார்களாம். அதற்காகத் தான் செகரட்டரி வேலையும் சம்பளமும். அப்பாவுக்கு நாள் முழுவதும் சுதேசமித்திரன் ஆபீஸில் எழுத்து வேலை. வீட்டில் ஸெகரட்டரிக்கு என்ன வேலை கொடுப்பது? வேலையுமில்லாது போதிய சம்பளமுமில்லாது எப்படி செகரட்டரி உத்தியோகம் பார்ப்பது?

நீலகண்ட பிரும்மசாரி ஒரு நாள் காலையில் வந்தார். தந்தை வீட்டிலில்லை. ஏதாவது காசிருந்தால் கொடுக்கும்படி கேட்டார். என் கையிலிருந்த இரண்டணாவையும் கொடுத்தேன். அன்றிரவு பத்துமணிக்கு மறுபடி எங்கள் வீட்டுக்கு வந்தார். என் தந்தையிடம் தன் குறையைச் சொல்லி முறையிட்டார். "சுவாமி, இனிமேல் தாங்க முடியாது. பத்து நாளாக எழுதிய வேலைக்குப் பணம் கிடைக்கவில்லை! எப்படிப் பிழைப்பது? கடையில் கணக்கு எழுதும் வேலைக்கு மாதம் ஏழு ரூபாய் கிடைக்கும். என்னை எவன் வேலைக்கு வைத்துக் கொள்வான்? யாராவது நல்ல பணக்காரர் வீட்டுக்குப் போய் பய

சட்டம்

ஆயுதங்களுக் கிடையே சட்டம் ஊமையாகி விடுகிறது.

—சிசரோ.

சட்டம் ஏழையை மடக்குகிறது; பணக்காரன் சட்டத்தை மடக்குகிறான்.

—கோல்டுஸ்மித்

மனிதனுக்காக சட்டமே அன்றி சட்டத்திற்காக மனிதனில்லை.

—ருசோ.

சாவதைத் தடுக்கும் சட்டம், மனிதன் சாகாதிருக்க வழி காட்டுவதில்லை.

—காந்தியடிகள்.

முறுத்தித்தான் பணம் சம்பாதித்து வயிறு வளர்க்க வேண்டும். இன்று காலையில் பாப்பா இரண்டணா கொடுத்தது. இரண்டணாவுக்கு வயிறு நிரம்ப சாப்பிட முடியுமா? இனி பொறுக்க முடியாது. உத்திரவு கொடுங்கள். போகிறேன்" என்று சொன்னார்.

என் தந்தை மனம் குமுறினார்.

"அட என்ன உலகம்! ஒரு பணக்காரன் சுகமாயிருப்பதற்காக ஆயிரம் ஏழைகள் அவதிப்படுவதா?

தனி யொருவனுக் குணவில்லை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம், தம்பி. நீலகண்டா, கவலைப்படாதே! பரா

சக்தி காப்பாற்றுவாள்'' என்று சொல்லி பக்கத்தில் குடியிருப்பவர்களிடம் ஐந்து ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்து ஸ்ரீ நீலகண்டனை அனுப்பினார். உடனே 'பாரத ஸமுதாயம் வாழ்கவே' என்ற பாடலுமியற்றினார்.

நீலகண்ட பிரம்மசாரி குடியிருந்த வீட்டுக்கு என்னைப் பல தடவை அழைத்துப் போயிருக்கிறார். அப்பா பாட்டுக்கள் பாடச் சொல்லிக் கேட்பார். அவருக்குப் பிரியமான பாடல்கள் 'நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்,' என்ற நொண்டிச் சிந்து மெட்டில் பாடும் பாட்டும், 'மண்வெட்டிக் கூலி தின்னலாச்சே, எங்கள் வாள் வலியும், வேல் வலியும் போச்சே' என்ற தெம்மாங்கு மெட்டில் பாடும் பாட்டும். மேற்படி பாட்டுக்களைக் கேட்கும் போது ஸ்ரீ நீலகண்டன் மனம்வெதும்பிக் கண்ணீர் வடிப்பார்.

என் தந்தை கடைசியாக எங்களை விட்டுப் போகும் போது நீலகண்ட பிரும்மசாரியும் எங்களுடன் வீட்டிலிருந்தார். சில நாட்களுக்குப் பின் அவரை அரசாங்கத்தார் கைது செய்து விட்டார்கள் என்ற செய்தி தெரிந்தது. பின் எங்கு போனார்—யாது நேர்ந்தது, என்ற விவரம் தெரியாது!

LAKSHMI CYCLE & MUSICAL WORKS

(Estd. 1939)

Dealers :

CYCLE, SPARE-PARTS, TYRES & TUBES

Repairers :

CYCLE, GRAMAPHONE

PETROMAX LIGHT & STOVE.

6/28, THEYAGRAYA ROAD

PONDY BAZAR.

(Opp. Corporation Market)

T. Nagar : : Madras-17.

வீட்டிற்கும தோட்டத்திற்கும்
வேண்டியமட்டும்
தண்ணீர் எடுக்க

ஒரு

டெமிங் "மார்வெல்"

வாட்டர் ஸிஸ்டம்

அமைத்துவிடுங்கள்.



இந்த பம்பு செட்டுகளை தற்போது உங்கள் வீட்டிலுள்ள கிணற்றிலும் அல்லது குழாயக் கிணற்றிலும் சுலபமாய் அமைக்கலாம். நீளமான குழாய் மாட்டுவது, உயரத்தில் டாங்கிகள் கட்டுவது முதலியவை தேவையில்லை. அவை முழுவதும் தானாகவே (ஆட்டோமாட்டிக்) வேலை செய்வதுடன் வருஷக் கணக்கில் திருப்திகரமாக சேவை புரியும்.



குழாயைத் திறந்தால் தண்ணீர் கிடைக்கும்

டெமிங் "மார்வெல்" வாட்டர் ஸிஸ்டம்

விசாரிக்குமிடம் :

ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்.,

அன்பின் அழைப்பு

-கௌசிகன்-

கோமாளி தான்—ஆனால் கோமள வல்லியை காதலித்தான். அவள் அவனை நினைக்கவில்லை. இருந்தும் அவனே அவளை அடைந்தான்...எப்படி?

கந்தர்வா சர்க்கஸிலே மாதவன் எடுபிடி வேலைக்காகத் தான் எடுத்துக் கொள்ளப் பட்டான். ஆள் அழகன். கம்பீரமான தோற்றம். உறுதியான உடல். அவன் அந்த சர்க்கஸில் சேர்ந்ததிலிருந்து பலர் பலவிதமாக அவனைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். தனக்கு சர்க்கஸிலே பல வருஷ அனுபவம் உண்டு என்று மாதவன் சொல்லிக் கொண்டதுதான் அவர்கள் பேச்சுக்களுக்கு வித்தாக அமைந்தது.

சிங்கம் புலிகளை அடக்கி ஆட்டி வைப்பதிலே அசகாய சூரன் என்றும் இதற்கு முன்பு இருந்த சர்க்கஸ் கம்பெனியில் ஒரு சிங்கம் அடங்காமல் இவன் மீது பாய்ந்து காயமுண்டாக்கி விடவே அதிலிருந்து தனக்கும் தோல்வியா? என்ற மனத் தாங்கலில் காட்டு விலங்குகளை ஆட்டி வைக்கும் கலையை உதறி விட்டு ஒன்றிலும் பற்றில்லாமல் வாழுவதாகவும் மாதவனைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அதற்கு ஆதாரமாக அவன் வலக்கரத்திலே உள்ள பெரிய தழும்பு உதவிற்று. குற்றேவல் புரிய வந்திருக்கும் மாதவனை வியப்புடன் ஏதோ ஒரு அதிசயத்தைக் காண்பது போல கந்தர்வா சர்க்கஸிலே உள்ளவர்கள் பார்க்கலானார்கள்.

கந்தர்வா சர்க்கஸின் பெயருக்கும் புகழுக்கும் முக்கிய காரணம் சரோஜாவின் சாகஸம் தான். சிங்கம் புலிகளை அடக்கி ஆட்டி வைக்கும் சிங்காரி அவள். பெண் இனத்தின் எழிலரசியாக விளங்கிய அவளிடம் ஆண்களின் துணிவும் கலந்திருந்தது ஒரு விசேஷ அம்சம். கட்டமைந்த உடல் இளமை எதிர்நீச்சுப் போட்டுக் கொண்டிருக்கும். உடலோடு ஒட்டிய ரோஜா நிற காலுறை, இடையிலே பளபளக்கும் சல்லடமும், மேலே கச்சமும் அணிந்து ஒரு கையிலே பிரம்பு நாற்காலியும் இன்னொரு கையிலே சவுக்குமாக மைதானத்திலே அவள் தோன்றும் அழகிலே கூடாரத்

திலே கூடியிருப்போர் சொக்கிப் போவார்கள். சரோஜாவுக்கு அவள் சவுக்கின் சொடக்கிலே சிங்கமும்புலியும் மட்டுமா நடுங்கும்! அவளைப்பார்க்கும் உள்ளங்களும் அல்லவா தவிக்கும்! சரோஜா சர்க்கஸின் ஜீவநாடி— அதாவது முதலாளி கஜபதியின் அருமை மகளும் அவளேதான்.

சரோஜாவின் கவனமும் மாதவன் மீது விழுந்தது. ஆனால் அது காதலாகக் கனியும் என்று கோபி எதிர்பார்க்கவில்லை. கோபி அந்த சர்க்கஸிலே கோமாளி. ஜனங்களின் சிரிப்பை சிந்த வைக்கும் பபூன். சரோஜாவிடம் உயிரையே வைத்திருப்பவன். தவழ்ந்து, தத்தி நடந்து, தாவி ஓடிவந்து, ஓடிவிளையாடி, இன்று ஒய்யாரமாக நடைபோடும் அவளுடைய ஒவ்வொரு பருவத்து வளர்ச்சியையும் கண்டு மகிழ்ந்து தன் உள்ளத்துக்குள்ளேயே அவள் நினைவிலே காதலை வளர்த்துக் கொண்டவன். ஆனால் கோமாளியான தனக்கு கொடி முந்திரிப் பழம் போன்ற தன் மகளைக் கொடுக்க மாட்டார் முதலாளி என்பது அவனுக்குத் தெரியும். ஆகவே தன் காதலை அவன் யாரிடமும் வெளியிடவில்லை. தன் உள்ளத்தின் ஒரு மூலையிலேயே ஒளித்து வைத்து வளர்த்து வந்தான்.

சரோஜாவும் கோபுவிடம் தான் சகஜமாகப் பேசிப் பழகுவாள். அவன் தன்னைக் காதலிக்கிறான் என்ற சிந்தனையே இல்லாமல் சிரித்துச் சிரித்துப் பேசுவாள். அவள் இப்படித் தன்னுடன் சிரித்துப் பேசிப் பழகும் பாக்கியமாவது தனக்குக் கிடைக்கிறதே என்று மகிழ்ந்து போவான் கோபி.

“கோபி, அந்த மாதவன் கையிலே இருக்கே அந்தத் தழும்பு. அது சிங்கத்தின் கால் நகம் கிழித்ததினால் ஏற்பட்ட தழும்புதான். அது அறைந்து இழுக்கும் போது அப்படித்தான் காயமுண்டாகும்.” என்றாள் சரோஜா. “இன்னொரு விஷயத்தைக் கவனித்தாயா? நான் சிங்கம் புலிகளை ஆட்டிவைக்கும் ஆட்டத்தை அவன் வந்து பார்ப்பதே இல்லை. ஏன் தெரியுமா?” என்று கேட்டாள். பாவம்! கோபிக்கு இதைப்பற்றி எல்லாம் என்ன தெரியும்? அவன் அவளைத் தவிர வேறு எவரையும், எதையும்தான் பார்ப்பதில்லையே!

கந்தர்வா சர்க்கஸ் முதலாளி தன் மகளை ஒரு சாதாரண வேலைக்காரனுக்கு மணம் வியாக்க மாட்டார் என்பது அவனுக்கும் தெரியும். வீரமும் தீரமும் அசகாய சூரத்தனமும் தன் சர்க்கஸ் தொழிலுக்கு புகழ் தேடித் தரும் திறமையுடைய ஒருவனைத்தான் கஜபதி எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சரோஜாவின் மனமோ மாதவனின் அழகிலே மயங்கி விட்டது. ஆகவே தன் தகப்பனாரின் முன்னிலையில் மாதவன் திறமைசாலி, வீரன் என்பதை வெளிப்படுத்தி அவன் மீது நல்லபிப்பிராயம் கொள்ளும்படி செய்ய வேண்டுமென்று தீர்மானித்துவிட்டாள். அதற்காக அவள் வகுத்த திட்டம் அவள் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் ஒரு விஷப்பரீட்சை!

கோபியிடம் அவள் தன் எண்ணத்தைத் தெரிவித்த போது அவன் திடுக்கிட்டுவிட்டான். இதென்ன அசட்டுக்காரியம் என்று அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

"கோபி, அவர் சிங்கம் புலிகளை ஆட்டி வைத்தவர்தான். அதில் சந்தேகமே இல்லை. தன்னை ஆட்டிவைப்பவனை என்றைக்காவது அறைந்து கொல்லவே அவை தன் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். சிங்கம், புலிகளுடன் பழகும் எங்களுக்கு என்றோ ஒரு நாள் அவைகளினுல்தான் முடிவும். அவர் ஏமாராத ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சிங்கம் இவர் மீது பாய்ந்திருக்கிறது. அதிலிருந்து அவர் மனம் மாறி போய்விட்டது" என்று தவிப்புடன் சொல்லிக் கொண்டிருந்தாள் சரோஜா கோபியிடம். கோபி இமையா விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்தான். ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனுல் அவன் உள்ளத்திலே மட்டும். "சரோஜா சொல்வது போல மாதவன் மிருகங்களை ஆட்டிவைக்கும் சிங்க நெஞ்சனுக இருந்திருக்கலாம். ஏதோ ஒரு சம்பவம் அவனை மாற்றியிருக்கலாம். ஆனுல் சரோஜாவினுல் அவனை எப்படி மாற்ற முடியும்? அவனுள் உறங்கிக் கிடக்கும் அவன் வீரத்தை, திறமையை அவளால் எப்படி தட்டி எழுப்ப முடியும்?" என்ற கேள்வி எழுந்தது.

"நான் மறுபடி அவரை சிங்கங்களின் முன்னுல் கொண்டு போய் நிறுத்தப் போகிறேன், கோபி"

"அவனுல் அந்தக் காரியம் ஆகாது, சரோஜா" என்றுன் கோபி படபடப்புடன்.

"ஏன் ஆகாது?" என்றுள் சரோஜா. அவள் உதட்டோரத்தில் ஒரு உல்லாசமான புன்னகை நெளிந்தது. "கோபி, உனக்குக் காதலின் சக்தியைப் பற்றி ஒன்றுமே தெரியாது. காதலுக்காக மனிதன் எத்தனையோ அதிசயமான காரியங்களைச் செய்வான்" சரோஜா அவனிடம் தன் திட்டத்தைத் தெரிவித்தாள். அசட்டுத் துணிச்சல். அவள் நினைப்பது போல நடக்காவிட்டால் சிங்கங்கள் கட்டுக்கடங்காமல் ஆத்திரங் கொண்டு அவள் மீது பாய்ந்துவிட்டால்? யாரோ முன் பின் தெரியாத ஒருவன்மீது கொண்ட காதலில்—அவனிடம் ஏதோ சக்தி மறைந்து கிடப்பதாக நம்பி இத்தகைய ஆபத்தான காரியத்தில் இறங்கப் போகிருளே' என்று அடித்துக் கொண்டது அவன் மனது. அதே சமயத்தில் அன்றொரு நாள் நடந்த சம்பவமொன்றும் அவன் நினைவுக்கு வந்தது.

சரோஜா சிங்கங்களை ஆட்டி வைத்து வேடிக்கை காட்டுவதற்கு முன்னுல், சிங்கங்களைக் கூண்டிலிருந்து விடுவித்து கூடாரத்தின் மத்தியில் அமைந்துள்ள கம்பி வேலியிட்ட இடத்துக்கு அழைத்து வருவதற்குமுன்னுல் கோமாளிகள் தமாஷ் செய்து ஜனங்களைச் சிரிக்க வைப்பது வழக்கம். ஒரு கோமாளி சிங்கத்தின் தலையோடுகூடிய தோலை மேலே போர்த்திக் கொண்டு சிங்கம் போல கர்ஜித்தபடி

வருவான். மற்ற கோமாளிகள் அந்தப் போலிச் சிங்கத்தின் வாலை முறுக்கி ஓட ஓட விரட்டி தமாஷ் செய்வார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் பயங்கரமான கொடிய நிஜ சிங்கங்களை சரோஜா ஆட்டி வைக்கும் ஆற்றலை மூச்சைப் பிடித்துக் கொண்டு பார்ப்பதற்கு முன்னால் பொது மக்களை வயிறு குலுங்கச் சிரிக்கச் செய்வதற்காக செய்யப்படும் இந்த வேடிக்கையில் அன்று கோபி போலிச் சிங்கமாக நடித்தான். நடித்துவிட்டு உள்ளே வரும் போது அங்கு மாதவன் கயிற்றுச் சுருணையைச் சுற்றிக் கொண்டு நிற்பதைக்கண்ட கோபி, அவனிடம் வேடிச்கை செய்ய நினைத்து சிங்கத்தோலை கழட்டாமல் பூனை போல அருகில் சென்று சிங்கம் போல கர்ஜித்தான் அவ்வளவுதான்! மாதவன் பயந்து நடுங்கி அலறித் துள்ளி விழுந்து உருண்ட அந்தக் காட்சியை நினைத்துக் கொண்டாலும் கோபிக்கு சிரிப்பாக வந்தது. இப்படி பயத்தினால் உடல் நடுங்கி உளறிய மனிதனை இதற்கு முன் அவன் பார்த்ததே இல்லை. சிங்கங்களிடம் இப்படி நடுங்கும் ஒருவனை சிங்க நெஞ்சனாக்க முடியுமா? ஆனால் அவள் காதலன் துணிவில்லாதவன் என்றோ அவள் இத்தகைய அசட்டுக் காரியத்தில் இறங்க வேண்டாம் என்றோ அவனால் சொல்ல முடியுமா? அவள் அவனைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டால்? இருந்தாலும் சொல்லாமலும் இல்லை.

"கவலைப்படாதே, கோபி.... நான் சமாளித்து விடுவேன். நீ மட்டும் எப்படியாவது மாதவனை நான் சிங்கங்களை ஆட்டி வைக்கும் இடத்தினருகில் கொண்டு வந்து நிறுத்திவிடு. மற்றவைகளை நான்கவனித்துக் கொள்ளுகிறேன்" என்றாள்.

கோபி அவள் முடிவுக்கு முரண்டு பிடித்தான். ஆனால் சரோஜா கெஞ்சும் பார்வையுடன் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு "கோபி, இந்த என் திட்டம் கட்டாயம் நல்ல பலனளிக்கும் என்று எனக்குத் தெரியும். என்னை ஆபத்து சூழ்ந்திருக்கிறது என்பதை அவர் அறிந்ததும் அவரிடம் படிந்துள்ள பயம் பறந்துவிடும் இமைக்கும் நேரத்தில் என் அருகில் கூண்டுக்குள்ளே— என்னைக் காப்பாற்ற வந்து நிற்கப்போவதை நீ பார்க்கப் போகிறாய் பார்!" என்றாள். அவள் முகத்தில் புன்னகை பூசி இருந்தது.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
யந்திரங்கள் வகுத்திடுவீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே!
கடலில் மூழ்கி நன் முத்தெடுப்பீரே!

—பாரதி

கோபியினால் அதற்குமேல் என்ன சொல்ல முடியும்? அவள் மனது அவனை விரும்பும் போது......?

திட்டமிட்டபடி அன்றிரவு.... சிங்கங்களை ஆட்டிக் காட்டுவதற்கு கூட்டத்தின் நடுவே இரும்பு கிராதிகளை இணைத்து பெரிய கூண்டு அமைத்தாகி விட்டது. ஜனங்கள் தவிப்புடன் கர்ஜித்து வரும் சிங்கங்களை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருநதார்கள்.

எங்கோ ஒரு மூலையில் ஏதோ செய்து கொண்டிருந்த மாதவனிடம் போய், "உன்னை இன்னொரு பிரம்பு நாற்காலியை எடுத்துக் கொண்டு சிங்க ஆட்டம் நடக்கும் இடத்துக்குப் போகச் சொன்னார் முதலாளி" என்றான் கோபி.

இதைக் கேட்ட மாதவனின் முகம் வெளுத்து, "என்னையா? எனக்கு வேறு வேலை இருக்கிறதே" என்றான்.

"உன்னைத்தானப்பா. சீக்கிரம் போய் கூண்டுககு வெளியே நாற்காலியுடன் போய் நில்லு, போ! சரோஜா விடமுள்ள நாற்காலியை சிங்கம் அறைந்து உடைத்து விட்டால் சமயத்துக்கு உடனே உன்னிடமுள்ள இதை அவளுக்குக் கொடு—வா—" என்று அவன் கையில் ஒரு சுமையற்ற பிரம்பு நாற்காலியைக் கொடுத்து தள்ளிக் கொண்டு வந்து கிராதிக்குப் பக்கத்தில் நிறுத்தினான் கோபி. சரோஜாவுக்கும் சமிக்ஞை செய்தான். அவளும் திருப்தியுடன் சிங்கங்களை திறந்து விடும்படி உத்திரவிட்டாள். நிசப்தமான அந்த அரங்கிலே கம்பீரமான சிங்கங்கள் பயங்கரமாக உறுமிக் கொண்டு ஓடி வந்தன. சரோஜா கூண்டின் நடுவில் கையிலுள்ள சாட்டையை, அலட்சியமாகச் சுற்றியபடி அவ்வப்போது அதை சொடுக்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். ஜனங்கள் மூச்சு விடுவதைகூட மறந்து அவளையே—இல்லை, சிங்கங்களையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிங்கங்களின் உறுமலும், சாட்டையின் சொடுக்கலும் தவிர அத்தனை பெரிய கூட்டத்தில் வேறு சப்தமே

பொன்னையா சுவாமி துணை.

TRADE MARK
Regd. No. 161859

மதுரை நாடார் கடை

M. N. P.

லிங்க மார்க்

சுருட்டுகள்

M. N. P. லிங்க மார்க் பட்டணம் பொடி, துண்டு, நைஸ், சிவபுரிபானை தயாரிப்புகளை உபயோகித்து இன்புறுங்கள்.

M.N.P.N. & M.N.P.T.

மதுரை.

இல்லை. சிறிதும் பெரிதுமான பல ஸ்டூல்களைக் கொண்டு பிரமிட் கோபுரம் போல அமைத்திருந்தார்கள். அதில் பக்கத்துக்கு இரண்டாக நான்கு சிங்கங்களை நிற்க வைத்து உச்சியில் ஒரு சிங்கத்தை ஏற்றி உட்கார வைக்க வேண்டும். மிகவும் சிரமமானது. ஐந்து சிங்கங்களும் அடங்காமல் ஆர்ப்பாட்டம் செய்யும்; அதுவும் உச்சியில் உட்காரும் 'ஹரி' ரொம்பப் பொல்லாத சிங்கம்; லேசில் அடங்காது.

இருந்தது. அதன் பளபளக்கும் கண்களில் ஒரு வெறி—பார்க்கப் பயங்கரமாக இருந்தது.

தன் அருகில் நின்று கொண்டிருந்த மாதவனைப் பார்த்தான் கோபி. மனோவசியத்தால் கட்டுப்பட்டவனைப் போல அவன் அந்த பூதாகாரமான மிருகங்களையே வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். இடது கை நாற்காலியை முறைப்பாகப் பிடித்துக் கொண்டிருந்தது. அதன் உறுமலுக்கு

"ஹரி... ஹரி—ம். மேலே—மேலே-ம்—உட்காரு" என்று தன் முன்னுள்ள சிங்கங்களை ஒழுங்குபடுத்தி வரிசைப்படுத்திக்கொண்டிருந்தாள் சரோஜா. வழக்கத்தைவிட அன்று ஹரி அடங்காமல் கர்ஜித்து அடிக்கடி முன்னால் கால்களை ஆட்டுவதும் வாயைப் பிளப்பதுமாக

ஏற்றபடி அவன் கை அவனையறியாமலே இப்படியும் அப்படியும் அதை அசைத்துக் கொண்டிருந்தது.

'சரோஜா சொன்னது சரிதான்...மாதவன் ஒரு காலத்தில் சிங்கங்களை ஆட்டி வைத்திருக்கலாம்,' என்று எண்ணிய கோபியை கூட்டத்தினரின்

தவிப்பான பெருமூச்சு சரோஜாவின் பக்கம் திருப்பி வைத்தது.

சரோஜாவின் கையிலிருந்த சவுக்கை ஹரி அடித்துக் கீழே தள்ளிவிட்டிருந்தது. கேடயத்தைப் போல் நாற்காலியை முன்னால் பிடித்துக் கொண்டு மண்டியிட்டபடி கீழே கிடந்த சவுக்கை எடுக்க முயன்று கொண்டிருந்தாள். பார்வை ஹரியின் மீது பதிந்திருந்தது. கைகள் சவுக்குக்காகத் துழாவின. சரோஜா இப்படி தடுமாறியது வேண்டுமென்றா அல்லது நிஜமாகவே அவளுக்கு நிதானம் தவறி விட்டதா என்பது கோபிக்குப் புரியவில்லை. ஜனங்களிடையே பீதியும் பரபரப்பும் ஏற்படலாயிற்று. ஹரியின் கர்ஜனை பயங்கரமாக, ஆக்ரோஷமாக ஒலிக்க ஆரம்பித்தது. பின்னங்கால்களைக் கீழ் ஸ்டூலிலும் முன்னங்கால்களை உயர்ந்த பீடத்திலுமாக வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்த மற்ற சிங்கங்களும் நிதானமிழந்து கர்ஜிக்கலாயின. சர்க்கஸ் கலைஞர்களிடையேயும் ஒரு பரபரப்பு ஏற்படலாயிற்று.

கோபியின் அருகில் நின்று கொண்டிருந்த மாதவன் தேக்கி வைத்திருந்த மூச்சை அவிழ்த்து விட்டான். அவன் நெற்றியில் வியர்வை முத்துக்கள் ஜ்வலித்துக் கொண்டிருந்தன.

"மாதவா–" என்றான் கோபி.

"பேசாமல் இரு.." என்று கூண்டிலிருந்து பார்வையை நீக்காமலேயே மெதுவாகச் சொன்னான் மாதவன். கூடாரத்திலே கூடியிருந்த ஜனங்களின் கலவரம் அமைதியை அழித்துக் கொண்டிருந்தது.

ஒரு குறிப்பிட்ட ஒழுங்கிலே கட்டுப்பாட்டுடன் பழக்கப்பட்ட காட்டு விலங்குகள் சர்க்கஸிலுள்ளவை. வழக்கத்துக்கு மாறாக ஏதாவது நடந்து விட்டாலோ, அவைகளின் முறையிலே மாறுதல் ஏற்பட்டாலோ மேலே என்ன செய்வது, எப்படி நடந்து கொள்ளுவதென்று அவைகளுக்குத் தெரியாது. உடனே மூர்க்கத்தனத்துடன் தாக்கத் தொடங்கிவிடும்.

சமாளித்து எழுந்த சரோஜா தன் சவுக்கை அன்று வழக்கத்துக்கு விரோதமாக 'சுளீர் சுளீர்' என்று சொடுக்கினாள். அது கம்பெனிக்காரர்களுக்குப் புதுமையாக இருந்தது. அவள் மனதிலுள்ள மர்மம் அவர்களுக்குத் தெரியுமா? சிலர் முதலாளியிடம் நிலைமையை விளக்க ஓடினார்கள். சிங்கங்களின் கர்ஜனை கூடாரத்தை கிடுகிடுக்க வைத்துக் கொண்டிருந்தது. வேறு சிலர் ரப்பர் டியூப்பைக் குழாயுடன் இணைத்துத் திருகிக் கொண்டிருந்தார்கள். நிலைமை மோசமாகி சமாளிக்க முடியாது போகும்போது அதிக அழுத்தம் கொண்ட நீர்க் குழாயின் மூலம் தண்ணீரை சிங்கங்களின் மீது பீச்சி கூண்டினுள் சிக்கி இருக்கும் மனிதரை விடுவிப்பது வழக்கம். ஜனங்கள் மீதும் தண்ணீர் பாய்ந்து அவர்கள் உடை நாசமாக நேருமாதலால் இந்த முறையை கடைசியாகத்தான் கையாளுவார்கள்.

கஜபதி ஓடோடி வந்தார். தந்தையைக் கண்ட சரோஜாவின் முகம் மலர்ந்தது. அவள் விரும்

பியதும் அதுதான். தன் காதலன் திறமையை நிரூபிக்க தந்தையை சாட்சியாக்க நினைத்திருந்தாள். கோபி மறுபடி மாதனைத் திரும்பிப் பார்த்தான். மாதவனின் முகம் பயத்தினால் லக்ஸ் சோப்புக் கட்டிபோல் வெளுத்திருந்தது.

சரோஜா சாட்டையை சொடுக்கி சிங்கங்களை கோபுரம் போல நிற்கும்படி கட்டளையிட்டுக் கொண்டிருந்தாள். வழக்கமான சூழ்நிலை. பயப்பட்டவர்களின் மனதிலே கூட கொஞ்சம் அமைதி பிறந்தது.

கோபியின் கண்கள் எதையோ பார்த்து பீதியடைந்தது. தவிப்புடன் இங்குமங்கும்பார்த்தான். சிங்கங்கள் ஏறி நிற்க அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஸ்டூல்களில் ஒன்று நிலைகுலைந்து சரிந்து நின்றது. சரோஜா கீழே விழுந்த போது சிங்கங்கள் தங்கள் நிலைகளைவிட்டு கீழே குதித்து ஆர்ப்பாட்டம் செய்த போது அந்த ஸ்டூல் அப்படி நகர்ந்திருக்க வேண்டும். இப்போது மறுபடி அவைகள் ஏறினால்—ஐந்து மிருகங்களின் கனத்தையும் அந்த ஸ்டூல் தாங்காது. அப்படியே சரிந்து சாயும்...சாய்ந்தால் — சரோஜாவின் நிலை—? கோபியின் உள்ளம் தவித்தது; உடல் நடுங்கிற்று. இந்த அபாயத்தை யாருமே பார்க்கவில்லை. ஏன் உள்ளே உள்ள சரோஜா கூட கவனிக்கவில்லை.—ஒரு வேளை அவள்தான் வேண்டுமென்றே இப்படி—? வீணாக மனச்சாட்சியுடன் விவகாரம் பேசிக்கொண்டிருக்கப் பிடிக்கவில்லை கோபிக்கு. கஜபதியோ கூண்டில் மறுபக்கத்தில் இருந்தார். அவரிடம் ஓடிப்போய் சொல்லுவோம் என்றால் அதற்குள்... சரோஜா ஹரியை உச்சியிலே போய் உட்காரும்படி உத்திரவிட்டு விட்டால்...?

யோசிக்க நேரமில்லை கோபிக்கு...மாதவா...... என்று அவன் கரத்தைப் பற்றினான். "சீக்கிரம்உள்ளேபோய்அவளை எச்சரித்துக் காப்பாற்று" என்று அவசரப் படுத்தினான். அவனுடைய தவிப்பில் ஆபத்தின் தன்மையைக்கூட அவனுக்கு விளக்க மறந்துவிட்டான்.

மாதவன் பித்துப்பிடித்தவன் போல் கோபியை வெறித்துப் பார்த்தான், பதில் பேசவில்லை.

"அதோ பார்! ஹரி ஏறப் போகும் அந்த ஸ்டூலின் கால்கள் சரியானபடி..." கோபி வார்த்தையை முடிக்கவில்லை.

"இல்லை—இல்லை என்னால் எதுவும் முடியாது" என்று பின் வாங்கினான் மாதவன். அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"ஒரு காலத்தில் நீ சிங்கங்களை ஆட்டி வைத்திருக்கிறாய் மாதவா...இன்னமும் உன்னால் அது முடியும்—முடியும் என்பதைக் காட்டு மாதவா.. இதோ பார். உன் கையிலுள்ள காயம் சிங்கத்தின் நகம் கிழித்ததினால் ஏற்பட்டது தானே?'" என்று அவன் வலக் கையை தூக்கித் தழும்பைக் காட்டினான். அவனிடமுள்ள பயத்தை விரட்டி துணிவை உண்டாக்கலாம் என்று.

ஆனால் மாதவன் பீதியுடன் விழிகளை அகல விழித்து "இல்லை-நீ சொல்வது தவறு...

நான் சிங்கக் கூண்டைக் கழுவும் வேலைக்காரனாகத்தான் இருந்தேன். எனக்கு சிங்கங்களைக் கண்டாலே பயம்...பிடிக்காது. ஒரு தடவை அதைக் கொடுமைப்படுத்தி இம்சித்த போது கூண்டுக்கு வெளியே அஜாக்கிரதையாக இருந்த என்னை அறைந்துவிட்டது ஆக்ரோஷத்துடன்.''

கோபியின் மூளை தெரித்து விடும்போல நெத்திப் பொட்டு துடித்தது. 'அடப்பாவி' என்ருன். சரோஜாவின் உத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுத்த சிங்கங்களின் கர்ஜனை பயங்கரமாக, பிரமாண்டமாக அவன் காதுகளில்'ஹோ' என்றுஓலமிட்டது. 'இந்தக் கோழையை நம்பியா... என் சரோஜா...ஐயோ-சரோ... கத்தினன் கோபி. ஆனல் அதற்குள் ஹரியை உச்சிக்கு ஏறும்படி முடுக்கி விட்டாள் சரோஜா.....உறுமியபடி ஹரி மேல் ஸ்டூலிலே கால் வைத்ததும், கோபி எதிர் பார்த்தபடியே அது நடந்து விட்டது. ஸ்டூல் நிலைகுலைந்து ஆடி அசைந்ததும் ஹரி குபீரென்று மேலிருந்து கீழே தாவிக் குதித்துவிட்டது. ஹரி குதித்ததும் மற்ற சிங்கங்களும் கீழே இறங்கி விட்டன.

கீழே குதித்த ஹரி சரோஜாவை நோக்கிப் பாய்ந்தது. ஒரே அறையில் அவள் கையிலுள்ள நாற்காலியை தூள் தூளாக்கியது.

சரோஜா சவுக்கை சொடுக்கியபடி பரிதாபமாக பின் வாங்கியபடி கூண்டின் கிராதி மீது சாய்ந்து இன்னமும் அவைகளுக்கு உத்திரவு இட்டுக் கொண்டிருந்தாள். ஆனல் அவைகள் அதை லட்சியம் செய்யாமல் அவளை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன.

'தண்ணீர்க் குழாய் — தண்ணீர்க் குழாய்' என்று மறுபக்கத்திலிருந்து கஜபதி கத்துவதை கோபி கேட்டபின் இந்த சமயத்தில்தான் தன் காதலனை எதிர்பார்த்தவள்போல் சரோஜா அவன் நின்று கொண்டிருந்த பக்கம் பரிதாபமாகத் திரும்பினுள். அந்தப் பார்வையில் ஒரு பெண் ஒரு ஆணிடம் கொண்டுள்ள நம்பிக்கை, காதல், அத்தனையும் கலந்திருந்தது. ஆணுகப் பிறந்த யாராலும், உதவி வேண்டி பரிதாபமாக அவள் பார்த்த அந்தப் பார்வையை நிராகரித்திருக்க முடியாது.

ஆனல் மாதவன் அசையவே இல்லை. கல்லாக நின்ருன். கோபியினுல் அப்படி யிருக்க முடியுமா?

> சிலர் எதையோ பேசி எதையோ செய்கிருர்கள். இன்னும் சிலர் எதையோ செய்து எதையோ பேசுகிருர்கள். ஆனல் சொன்னதைச் செயலில் தொடர்ச்சியாக காண்பவர்கள் மிகவும் குறைவு.
>
> —ஜவாஹர்லால் நேரு
>
> உண்மையைப் போன்ற தர்மம் வேறில்லை. உண்மையைவிட உயர்ந்தது ஒன்றுமில்லை. இந்த உலகில் பொய்யைவிடக் கசப்பானது எதுவுமில்லை.
>
> —மகாபாரதம்

அவனுக்கு அதன் பிறகு என்ன நடந்தது என்பதே தெரியாது—சிங்கங்களின் கர்ஜனை—ஜனங்களின் ஓலம்—தோளிலே பலமான ஒரு அடி. பிறகு எல்லாம் ஒரே குழப்பம்.

மறுபடி கோபி கண் விழித்த போது சரோஜாவின் முகம் அவன் முகத்துக்கு மேலே கவிந்து கொண்டிருந்தது. அவள் க்ண்களில் கண்ணீர் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. பட்டுபோன்ற தன் கைகளால் அவன் நெற்றியை வருடிக் கொண்டிருந்தாள் சரோஜா... அவன் இதயராணி.

'கோபி' உனக்குக் காதலின் சக்தியைப்பற்றி ஒன்றுமே தெரியாது. காதலுக்காக மனிதன் எத்தனையோ அதிசயமான காரியங்களைச் செய்வான், என்ற சரோஜாவின் வார்த்தைகள் அவன் செவிகளில் ரீங்காரமிட்டது.

காதலுக்காகப் பெண்களும் தான் பல அதிசயமான காரியங்களைச் செய்வார்கள். ஆபத்து வேளையில்தான் அன்புக்குப் பாத்திரமான மனிதனை ஆவலோடு, ஆசையோடு பரிதாபமாகப் பார்ப்பார்கள்.

அப்படிப் பார்க்காவிட்டால், கூப்பிடாவிட்டால் கோபியைப் போலுள்ள ஒரு கோமாளி தன் காதல் உள்ளத்தை சரோஜா போன்று ஒரு பெண்ணிடம் எப்படித் திறந்து காட்ட முடியும்?

"கோபி,கோபி" என்று விம்மினுள் சரோஜா, அவன் அகன்ற மார்பிலே தன் வெல்வெட் கன்னத்தைப் புதைத்துக்கொண்டு. இதைவிட அவன் மீது தனக்குள்ள அன்பை அவள் எப்படித் தெரிவிக்க முடியும்? அவள் சூடான கண்ணீர் அவன் மார்பிலே விழுந்து அவன் நெஞ்சத்தைக் குளிர்வித்தது.

Authorised Distributors for

B & C

&

METTUR MILL GOODS

★

Stockists of :—

HIGH CLASS ENGLISH FABRICS, HAND-LOOM CLOTHS AND READY MADE GOODS.

★

PANDIAN STORE,

34, VILLAGE ROAD,

NUNGAMBAKKAM : MADRAS-6.

Telegrams : "THIYAGAM"   H. O. Phone No. 55101

P. B. No. 551, Madras-13.   B. O. Phone No.: 2238

★

S. S.

&

M. MAYANDI NADAR

GUNNY MERCHANTS

&

COMMISSION AGENTS,

★

BRANCH OFFICE :	HEAD OFFICE :
110, AUDIAPPA NAICKEN ST.,	24, KALMANDAPAM ROAD,
MADRAS-1.	MADRAS-13.

பீடி சக்கரவர்த்தி
கு.பி. சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
RAMSAIT BEEDI
கு.பி. சொக்கலால்
ராம்சேட் பீடி
முக்கூடல்
INDIA No.5901
CEYLON No.5929
BY
RAJAN & Co. SVKS.

உறவு

பாண்டியன்

“காத்தப்பா”

“ஐயா,”

“நீ இந்த தேயிலைத் தொழிற் சாலைக்கு வந்து எத்தனை வருஷம் ஆகிறது தெரியுமா?”

“ஞாபக மில்லை, ஐயா”

“சரியாக நான்கு வருஷம்”

“ஊம்”

“உன்னையும் வைத்துக் கொண்டு நான்கு வருஷம் நான் சமாளித்து விட்டேன்”

"அதற்கு என் நன்றி. ஐயா"

"யாருமற்ற அனுதையாய் வந்து சேர்ந்தாய். முதலில் தேயிலைக் கொழுந்து மூட்டையைத் தூக்கித் தராசில் வைக்கும் வேலை கொடுத்தேன்"

"ஞாபகம் இருக்கிறது ஐயா"

"ஆனால் ஒரு மூட்டையோடுகூட ஒரு மூட்டையை உன்னுலே தூக்க முடியவில்லை"

"நான் என்ன செய்யட்டும் என் கையில் பலம் அவ்வளவுதான். நான் எட்டு மாதத்திலேயே பிறந்த பிள்ளை என்று எங்கள் பாட்டி சொல்லுவாள். அதைத்தான் உங்களிடம் முன்பே சொல்லி யிருக்கி றேனே, ஐயா"

"நோஞ்சலாக இருக்கிருயே யென்று கொழுந்தை கித்தான் தட்டுகளில் பரப்புகிற வேலை கொடுத்தேன்"

"அதுவுந்தான் கைவரவில்லையே, டீ மேக்கர் ஐயா"

"ஆமாம். மற்றவர்கள் பத்துத் தட்டுப் பரப்பும் நேரத்தில் உன்னுல் இரண்டு தட்டுத்தான் பரப்ப முடிந்தது. அதுவும் திட்டுத் திட்டாய் கொழுந்துகள் முடங்கி கிடக்கும்."

"என்ன ஐயா செய்வேன்? கை லாகவமாக அப்படி இப்படி வளைந்து கொடுப்பதில்லை."

அந்த வேலை லாயக்கில்லை என்று ரோலர்களுக்கு காய்ந்த இலைகளைத் தள்ளும்வேலையில் போட்டேன்.

"அதை நினைத்தால் இன்னும் பயமாக இருக்கிறது, ஐயா."

"இலைகளைத் தள்ளிக் கொண்டே ஒரு நாள் இலைகள் தள்ளப்படும் குழியிலே நீயும் விழ இருந்தாய். நல்ல வேளை குருசாமி வந்து காப் பாற்றினுன்."

"குழியிலே இலைகளைத் தள்ளிக் கொண்டிருக்கும்போது குழிக்குள் பார்த்தேன். அங்கே ரோலர் வட்டமாக ஆடிக் கொண்டிருந்தது. ரோலர் ஆட ஆட என் தலையும் ஆட ஆரம்பித்தது. பிறகு குருசாமி தூக்கி வைத்து தண்ணீர் தெளித்த பின்புதான் நினைவு வந்தது."

"அந்த வேலைக்கும் தகுதி யில்லை யென்று அரைத்த இலைகளை சல்லடை யந்திரத்திற்குத் தூக்கிச் செல்லும் வேலை கொடுத்தேன்."

"தலைக்கும் கழுத்துக்கும் சம்பந்த மில்லாததுபோல, இலைவாளியைத் தலையில் வைத்தவுடன் தலை ஆட ஆரம்பித்துவிட்டது, ஐயா.'

'தலை ஆட ஆரம்பித்தது மட்டு மல்லையே! நாலு வாளி சுமந்தால் ஒரு வாளியோடு இலையைக் கீழே போட்டுவிட்டு நீயும் விழுந்தாய்'

'என் காலுக்கும் ஈரத் தரைக்கும் ஒத்து வரவில்லை, ஐயா'

'பின்பு அரைத்த இலையைப் பத மாக்கும் குளிர் அறை வேலைக்கு அனுப்பினேன்.'

'அந்த குளிர் அறைக்குப் போன வுடனேதான் என்னை மலேரியா பிடித்துக் கொண்டதே ஐயா.'

'பிறகு தேயிலைப் பெட்டி அடிக் கும் வேலையில் போட்டேன். பெட் டியில் அடிசகும் ஆணிகளைவிட உன் கையில் அதிகமாக ஆணிகளை அடித்துக் கொண்டாய்.'

'எல்லா விரல்களிலும் காய வடுக் களைப் பாருங்கள் ஐயா.'

'பிறகுதான் இந்த வேலையில் போட்டேன். வறுத்த தேயிலையில் கிடக்கும் கல்லையும் குச்சிகளையும் பொறுக்குவதற்கு.'

'இந்த வேலையைத்தான் நன்ருகச் செய்துக்கொண்டு வருகிறேனே, ஐயா'

'ஆமாம் செய்கிருய்! எல்லாரும் பத்து ராத்தல் தேயிலை பொறுக்கி ஞல் நீ மூன்று ராத்தல் பொறுக்கு கிருய்.'

'என் பங்கு பத்து ராத்தலும் பொறுக்கிவிட்டுத்தானே, ஐயா, தின மும் வீட்டுக்குப் போகிறேன்'

'நீயா பொறுக்குகிறாய்? அந்தப் பெண் பாக்கியம் அல்லவா பொறுக்குகிறாள்?'

'பாவம், ஐயா, அவளுக்கு ஒரு கால்...'

'அதைத் தெரிந்துதானே அவளைக் காட்டில் கொழுந்து எடுக்க அனுப்பாமல் இங்கே தொழிற்சாலையில் வேலை கொடுத்திருக்கிறேன்.'

'அதற்காக உங்களைக் கும்பிடுகிறேன் ஐயா.'

'நோஞ்சலாக ஒரு வேலைக்கும் லாயக்கற்றவனாக இருந்த உன்னையும் காதல் வியாதி பிடித்திருக்கிறது போலத் தோன்றுகிறதே'.

'அப்படி ஒன்றுமில்லை, ஐயா'.

'உனக்குத் தெரியுமா அது? தூரத்தில் நின்று உங்கள் வேலைகளைக் கவனிக்கும் எனக்கல்லவா தெரியும்!'

'ஒன்றும் தப்பிதமாக நடந்துக் கொள்ளவில்லை, ஐயா...'

'தப்பிதம் நடந்துவிட்டது என்று சொல்ல வில்லையே. உன் வேலையையும் சேர்த்து பாக்கியம் செய்து வருகிறாள். இடைஇடையே இருவரும் ஆழ்ந்த பெருமூச்சு விடுகிறீர்கள். ஊமைப் பேச்சு பேசுகிறீர்கள்.'

'அப்படி ஒன்றுமே யில்லை ஐயா.'

'என்னிடம் மறைக்கக் கூடாது, காத்தப்பா. அவள் உன் பேரில் ஆசையாக இருக்கிறாளா இல்லையா? உண்மையைச் சொல்.'

'இருக்கிறாள், ஐயா. இல்லா விட்டால் என் பங்கு வேலையையும் அவள் செய்ய முன்வருவாளா? ஐயா...'

'கையில் பலமில்லை; தலையில், கழுத்தில் பிடிப்பு இல்லை; உடம்பு நோஞ்சல்; கால் முட்டித் தட்டி தடுமாறுகிறது; பேச நசக்குழறுகிறது; கண்களில் ஒளி யில்லை. இப்படி எல்லாமாகச் சேர்ந்து, இருந்தும் இறந்தவனாகத் திரியும் உன்னையும் ஒரு பொருட்டாக மதித்து, பாக்கியம் ஆசையாக யிருக்கிறாளென்றால் அது ஒரு பெரிய அதிசயந்தான்!'

'அதிசயந்தான், ஐயா. தேயிலையின் கல்லும் குச்சியும் பொறுக்கும் வேலையில்போட்ட முதல்நாள் அவள் என்னைப் பார்த்து இரக்கப் பட்டவள் போல் இருந்தாள்.'

'ஐயோ பாவம்! ஆண் ஜன்மமாகப் பிறந்து பெண்களுக்கு ஒதுக்கியிருக்கும் வேலைக்கு வந்தவன் யார் என்று கவனித்திருப்பாள்'.

'என்னவோ, தெரியவில்லை ஐயா. அவள் பார்த்த பார்வையில் நான் பிறந்தவுடன் என்னைப் பிரிந்து சென்ற என் தாயின் சாயலைக் கண்டேன். நான் சிறு வயதிலேயே பறி கொடுத்த என் தந்தையின் அன்பு உருவைக் கண்டேன். என் மனம் எதையோ காணாததைக் கண்டு விட்டது போல துள்ளிற்று. அவளுடன் பேச்சுக் கொடுத்தேன்.'

'அப்புறம்,'

'என்னுடைய பலவீனம் காரணமாகத்தானோ என்னவோ, அவள் என்னிடம் மிகவும் பற்றுதலோடு பேசினாள்.'

'நொண்டிக் கேற்ற சண்டி வாய்த்தானென்று நினைத்திருப்பாள்.'

'அப்படிச் சொல்லாதேயுங்கள், ஐயா. ஒரு கால் விந்தி விந்தி நடந்தாலும் அவள் நடை எனக்கு எவ்வளவோ களிப்பூட்டுகிறது.'

'உன் குறைகளை மறந்து அன்பாய் இருப்பவளைக்குறை கூறவிடுவாயா? சரி, மேலே சொல்.'

'மறு நாளே என் வேலையையும் அவள்சேர்த்துப் பார்க்க ஆரம்பித்து விட்டாள். நான் ஒவ்வொரு நாளும் அன்றைய பங்கை முடிக்காவிட்டால் நீங்கள் கோபிப்பீர்கள். அவள் அதற்கு இடங் கொடுக்கக் கூடாதென்று இப்படிச் செய்துவருகிறாள். இடை இடையே தாயாகப் பரிந்து பேசுவாள். தந்தையாக நின்று கண்டிப்பாள். நண்பன் போல ஊக்கம் கொடுப்பாள்.'

'இப்பொழுது காதலியாகயிருந்து, அன்பைக் கொட்டுகிருளா?'

'அப்படி ஒன்றுமில்லே யென்று முன்பு சொன்னேனே, ஐயா. என்னையும் ஆளாக மதித்து அவள் உறவு கொண்டாடி எனக்கு உதவி செய்துவருகிருளென்பதை நினைத்து நினைத்து உள்ளம் புளகிதம் அடைகிறேன். எனக்கும் உலகத்துக்கும் சம்பந்தமில்லையென்று நினைத்துக் குப்பைபோல வாழ்ந்து வந்த என்னையும் ஒரு மனிதனுக்கியவள் அவள்தான், ஐயா!'.

'இதெல்லாம் வேண்டாத பேச்சு! உண்மையைச் சொல். அவளை விவாகம் செய்துக்கொள்ள வேண்டுமென்று உனக்கு எப்போதாவது ஆசை பிறந்ததில்லையா?'

'அப்படி ஒரு ஆசை வந்ததாக ஞாபகமில்லே, ஐயா. ஆனுல் தேயிலே முறத்தை அவள் கைக்கு மாற்றும் போது எப்போதாது அவள் கை என் மேல் பட்டு விட்டால், என் உள்ளத்தில் ஏதோ ஒரு விசை அழுத்தப்பட்டு உடம்பில் ஒவ்வொரு அணுவிலும் 'ஜில்' என்று மின்சார வெளிச்சம் போட்டதுபோல உணர்வேன். அந்தக் கணநேர உணர்ச்சியில் அவளும் நானும் கை கோத்துக் கொண்டு உல்லாசமாக வான மண்டலத்தில் பவனி வருவது போல மயங்குவேன்.'

'போதும் காத்தப்பா, போதும். ஆணையும் பெண்ணையும் சந்தர்ப்பங்கள்தான் இணைத்து வைக்கின்றன. நீங்கள் இருவரும் சுகமாய் வாழுங்கள்'.

★

உதவாக்கரையை உயர்த்தும் உத்தமர்கள்.

—✧—

உலகில் ஒரு சாரார் தொண்டு செய்வதற்கென்றே ஜன்மம் எடுக்கிருர்கள். தாம் எடுத்த ஜன்மம் பயன் அடைவதன் பொருட்டே கையாலாகாத ஒருவனுடைய மாயத்துள் கட்டுண்டு அலேகிருர்கள். இவர்களுடைய பலஹீனத்தைக் கண்டு அவனும் தன் முழு பொறுப்பையும் இத்தகையோர் மேல் போட்டுவிடுகிருன். 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடையவர்கள் தம் சொந்த வேலேயில் ஒருவித ஆறுதலும் அடையாது போனுலும் ஒருவனுக்கு மட்டும் அமோகமான நிம்மதியைத் தருகிருர்கள். அவனை சங்கடங்களில் இருந்து மீட்கிருர்கள். உலகத்தவர் கண்முன் உதவாக் கரையை உயர்த்தி வைக்கிருர்கள் அந்த உத்தமர்கள்.

— கவி. தாகூர்.

P.R.A & SONS
அசல் ராமகிருஷ்ண மார்க்
TRADE MARK
REGD NO 6444
பீடி கம்பெனி முக்கூடல்
രാമകൃഷ്ണബീഡി
(TINNEVELLY DISTRICT)
(INDIA (MUKKUDAL P.O.) REGD No 6444)
(RAMAKRISHNA MARK BEEDI)

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க், சிம்கோ லைட் மார்க், சிம்கோ சைகிள் மார்க், மைனர்சைஸ் சீனு லேடி மார்க் 60 வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள்.



கடற்கரை குளிர்ப் பிரதேசங்களுக்கும், மற்றும் மலபார் மலைக்கும் உகந்தது.

★

சிறந்த விதமான சரக்கு உற்பத்தி!

★

சிறப்பான பொதுஜன ஆதரவு!

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ்கள் தீப்பெட்டிகளும் எங்களுடைய டெப்போக்களிலேயே செலவாகின்றன.

சிம்கோ :: :: சிவகாசி S.I.

போன்: 63 — தந்தி: *SIMCO*

நண்பனின் தியாகம்

—பால்வண்ணன்—

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பணம்தான் தருவான் என்று எதிர்பார்த்தான் மணிவண்ணன். பணம் மட்டும்மா தந்தான்—வாழ்வையே தந்தான். வையமுள்ளளவும் அழியாத பெயர் பெற்ருன், அருளப்பன்.

அவள் என்னை வியப்புடன் நோக்கிச் சுற்று முற்றும் பார்த்தாள். பதில் வணக்கமும் கூற வில்லை. எனக்கு லேசாக பயம் கூட தட்டியது. என்னை உற்றுப் பார்த்தாள். நானும் மிக நெருக்கத்தில் அவளுடைய முழுமதி போன்ற முகத்தையும், அதிலே ஒளியுடன் மின்னும் விழிகளையும், பவழ இதழின் அமைப்பையும், பல் வரிசையின் ஒழுங்கையும் கண்டேன். அவள் எழிலை கண்களால் உண்டேன். மிரள மிரள விழித்தாள். நானும் என்னை சமாளித்துக் கொண்டு "உன் கடிதம் கண்டேன்; சாமர்த்தியமாக எழுதி இருக்கிருய்" என்றேன். "சாமர்த்தியமா? அப்படியொன்றும் இல்லையே!" என்ருள். "மரகதம் உன் கடிதத்தில் குறித்திருந்த 'என் வாழ்நாள் உள்ளளவும் மறவாதிருக்க வேண்டியவள்' என்ற வாக்கியத்தின் கருத்து என்ன?" என்றேன்.

"என்னைவிட நன்ருகப் பேசக் கூடியவர்கள் கல்லூரியில் இல்லை என்று கருதி இறுமாந்து இருந்தேன். உங்கள் பேச்சு என் எண்ணத்தைப் பொய்யாக்கி விட்டதுடன், அடக்கமுடமை எவ்வளவு அவசியம் என்ற அறிய பாடத்தையும் கற்பித்தது. அதனை நினைத்து அப்படி எழுதினேன்" என்ருள்.

"உண்மையாகவா? அப்படி என்ருல் நீ என்னை விரும்பவில்லையா மரகதம்? எனது மனக் கோயிலில் உன் உருவம் என்னையும் அறியாமல் புகுந்துவிட்டதே" என்றேன்.

"என்ன பேசுகின்றீர்" என்ருள் எவ்வித உணர்ச்சியும் இல்லாமல்.

"இன்னும் ஒன்றும் புரியாதவள் போல் பேசுகிருய். தேனுக்கில்லாத இனிமை உன் குரலில் காண்கிறேன். மலருக்கில்லாத மலர்ச்சி உன் மதிவதனத்தில் காண்கிறேன்; மயிலிடம் காணுத சாயல் உன் ஒயிலில் காண்கிறேன். நீயே என் காதல் தெய்வமாகவும், நின் நினைவையே அர்ச்சனையாகவும் அமைந்து விட்டது. நான் வாழ நீ வேண்டும். ஆமாம்! நான் உன்னை உளமார காதலிக்கின்றேன்" என்றேன்.

"என்ன காதலா!" என்ருள். இதற்குள் எங்களை நோக்கி மீனு வந்து விட்டாள்.

உண்மையிலேயே எனக்கு அவள் மீது ஏற்பட்ட கோபம் சொல்லி முடியாது. மீனு எங்கள்

இருவரையும் மாறிமாறிப் பார்த்து விட்டுச் சிரித்தாள். "நான் வந்தது உங்கள் பேச்சுக்கு இடையூருக இருக்குமோ" என்ருள் மீனு. "மீனு! என்ன விளையாட்டு இது! வா போவோம்" என்ருள் சற்று கண்டிப்பான குரலில்' இருவரும் விடை பெற்றுக் கொண்டு சென்ருர்கள். அவர்கள் மறையும் வரையில் பார்த்துக் கொண்டே இருந்தேன்.

மரகதம்

பஞ்சு மெத்தையில் படுத்தேன்; அது முள்ளாக குத்தியது. எழுந்தேன்; வியர்வை வழிந்தது; சன்னல்களைத் திறந்தேன். ஆகாயம் தெரிந்தது. அதிலே ஏற்றி வைக்கப் பட்ட ஆயிரக் கணக்கான அகல் விளக்குகள் ஆடி அசைந்து கொண்டிருந்தன.

முழு நிலா மேகத்திரையைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்தது. என் உள்ளத்தில் மணிவண்ணனைப் பற்றிய எண்ணம் எழுந்தது. அவர் இன்று கடற்கரையில் பேசிய வார்த்தைகள் என் காதுகளில் ஒலித்தன. என் மீது அவர் காதல் கொண்டிருப்பதாக கூறினரே! அவருடைய உருவம் எப்படியோ எனது உள்ளத்திலும் பதிந்துக் கொண்டதே! என்றஎண்ணங்கள் எழுந்துவிழுந்துஅடங்கின.

நாளை மாலை கடற்கரையில் சந்திக்கலாம் என்ற நம்பிக்கையுடன் படுத்தேன்; தூங்கவில்லை; புரண்டுக் கொண்டிருந்தேன். வான வில்லில் நிறங்கள் ஏழு இருக்கின்றன, என்று எல்லோரும் சுலபமாகக்கூறி விடுகின்றனர். ஆனல் இந்த மனக் குகையில் எத்தனை நிறங்கள். நிமிஷத்திற்கு ஒரு நிறம் அதன்மீது மற்ரென்று; இப்படியாகப் பல நிறங்கள் காட்சி யளிக்கின்றன. ஈவும், இரக்கமும், கொடுமையும், வஞ்சமும், அன்பும், கோபமும், பெருந்தன்மையும்; அற்பத் தனமும் காதலும் காமமும்—எத்தனைக் கலப்புக்கள் உண்டாகின்றன. மனிதனுடைய உள்ளத்தில் ஏழு நிறங்கள் அல்ல ஏழாயிம் நிறங்கள் கலந்து தோன்றுகின்றன. இல்லையென்ருல் மணிவண்ணனைப் பற்றிய நினைவுகள் இப்படித் தோன்றித் தோன்றி மறையுமா?

அடுத்த நாள் மாலை நான் மீனுவுடன் கடற்கரைக்குச் சென்றேன். அங்கே அவர் வந்திருந்தார். எனக்கு நேற்றில்லாத நாணம் இன்று ஏற்பட்டு விட்டது; ஏன் என்று எனக்கே புரியவில்லை. அவர் என்னைப் பார்த்தார்—நானும் சிரித்தேன்' "மரகதம் இங்கேயே இரு இதோ வந்துவடுகிறேன்" என்றுகூறிவிட்டு அவ்விடம் விட்டகன்ருள் மீனு. நான் உட்கார்ந்ததும் அவர் என்னை நெருங்கி வந்து உட்கார்ந்தார், "அதோ பார்" என்று கடலைக் காட்டினர்! 'அது கடல்" என்றேன். "கடல் மங்கையை பகலெல்லாம் கதிரவன் என்னும் கொடியவன் தந்த துன்பத்திலிருந்து விடுபட்டு தன் காதலன் சந்திரனின் வருகைக்காக உள்ள மகிழ்ச்சியுடன் உருண்டு புரண்டு கொண்டிருக்கிருள்" என்ருர். எனக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை. "பெண்களைக் கண்டவுடன் வர்ணனைச் செய்ய மட்டும் ஆண்கள் எப்படியோ கற்றுக் கொள்கிருர்கள்" என்றேன்.

"இல்லை மரகதம் பெண்கள், தன் மான் விழியாலும் குயில் குரலாலும் ஆண்களை வர்ணிக்கும்படி இயக்குகின்றனர். கிராமபோனை சாவி கொடுத்து ஊசி போட்டு இயக்கி தட்டிலே பொருத்தினல் பாடாமல் என்ன செய்யும். அது போலத் தான்" என்ருர். எனக்கு அவர் பேச்சு மிகவும் பிடித்திருந்தது. இன்னும் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் எனற ஆசை யேற்பட்டது.

என்னென்னமோ பேசினேம். இருவரும் காதலர்கள் ஆனேம்; கடற்கரை எங்கள் காதலை நாளுக்கு நாள்வளர்த்துக் கொண்டே வந்தது.

ஆனல் திருமணத்திற்கு என் தந்தை சம்மதிப்பாரா? நாங்கள் பிறவிப் பணக்காரர்கள்; என் காதலரோ பாவம்! ஏழை! அருளப்பன் தயவால் கல்லூரிச் சம்பளம் கட்ட முடிகிறது

இந்த நிலையில் நான் எப்படி என் தந்தையைச்சரிக்கட்டமுடியும் என்று எண்ணியபோது எனக்கு பயம் தட்டிவிட்டது. எங்கள் கல்லூரிப் படிப்பு முடிந்தது. நான் எங்கள் ஊர் வந்து சேர்ந்தேன். என் தந்தை என் திருமணத்தைப் பற்றி பேசினர். வேண்டாம் என்று தடுத்தேன். கேட்கவில்லை. எத்தனை நாள் மறைக்க முடியும். ஒரு நாள் உண்மையைச் சொன்னேன். அவர் சீறினர்—"ஏதுக்கும் உதவாத ஏழைப் பயலை நீ மணக்கக் கூடாது. உன் அத்தை மகனைத் தான் மணக்க வேண்டும்" என்ருர். "பணத்திற்காகத்தானே" என்றேன். "பணம் மட்டுமல்ல சாதி?" என்ருர்! 'அப்பா, மல்லிகைக் கொடி பளிங்குத் தூணில் படர்ந்தால்தான் மலரும் மணக்கும் என்ற நியதி இல்லை. அது சாதாரண கொம்புப் பந்தலில் படர்ந்தாலும் மலர்ந்து மணக்கும். நீங்கள் என்னைக் பளிங்குத்தூணில் படரச் சொல்கின்றீர்—நான் கொம்புப் பந்தலில் படரவேண்டும் என்கிறேன்' என்றேன். அவர் தந்தையாக இல்லாமல் எதிரியாக மாறினர். என் மனம் மிகவும் வேதனை அடைந்தது. கடைசியாக நான் என் தந்தையையும் அவருடைய பணத்தையும் துச்சமென மதித்து மணிவண்ணனிடம் போய்ச் சேர்ந்தேன்.

நான் கல்லூரிக்குப் போகும் போது என் தந்தை எனக்கு அறிவுறுத்திய உரைகள் எனக்கு நினைவு வந்தன. "கல்லூரிப் படிப்புடன் காதல் படிப்பும் சேர்ந்து படித்துப் பாழாகின்றனர்' என்று கூறினர். நானும் பாழாகி விட்டேனு? அல்லது பாழாகி விடுவேனு? என்ற எண்ணம் தோன்றியது. பின்னர் காதல் புரிவது தவரு? சரியா? என்ற எண்ணம் எழுந்தது. மல்லிகை மலர்ந்தால் மணம் வீசத்தானே செய்யும், இலவம் பஞ்சுகாய் முற்றினல் வெடிக்கத்தானே செய்யும், இது இயற்கை தானே! அது போல் ஒன்றுபட்ட இரு உள்ளங்களில் காதல் தோன்றுவதும் இயற்கைதானே! என்ற முடிவுக்கு வந்தேன்.

மணிவண்ணன்

என்னை நம்பி வந்து விட்டாள் என் இதயராணி மரகதம். என்ன செய்வது என்றே புரியவில்லை. ஏழை நான். எப்படி இவளைக் காப்பாற்ற முடியும்? என்ற பயம் ஏற்பட்டு விட்டது. உடனே என் உயிர் நண்பன் அருளப்பனிடம் சென்றேன். அவன் என்னை அன்புடன்வரவேற்ருன். செய்தியை சொன்னேன். அவன்வாயசைக்கவேஇல்லை ஆழ்ந்த சிந்தனைக்குப்பிறகு 'அதனல் என்ன இங்கே தங்கி விடுங்கள். இது உங்கள் வீடு என்ற உரிமையுடன் நீங்கள் இருக்கலாம்' என்ருன். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்ல முடியாது.

என் அருளப்பன் கண்கண்ட தெய்வமாய் எங்களுக்கு விளங்கினன்! ஆம்! அந்தத் தெய்வத்தின் காலடியில் வீழ்ந்து வணங்க வேண்டும் என்ற ஆசையும் எழுந்தது. பக்கத்தில் மரகதம் இருந்தாள், அதனல் அப்படிச் செய்ய முடியவில்லை.

ஒரு வாரம் வரையில் நானும் மரகதமும், மகிழ்ச்சிக் கடலில் மிதந்தோம். ஆமாம்! அந்த இன்ப அனுபவத்தை எப்படி எழுதிக் காட்டமுடியும்?

திடீரென்று ஒரு நாள் அருளப்பன் 'மணிவண்ணு! என்ன கொஞ்சமும் அக்கரை இல்லாமல் இருக்கிருய்?' என்ருன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்ன" என்றேன் "திருமண விஷயமாய்தான். அடுத்த வாரத்தில் உங்கள் திருமணத்தை முடித்து விடவேண்டும்' என்ருன். என் திருமணத்தைப் பற்றிய நினைவே எனக்கு எழவில்லை ஆனல் அருளப்பன் இதைச் சொன்னவுடன், எனக்கு திகைப்பு ஏற்பட்டு விட்டது திருமணம் என்ருல் சாதாரண விஷயமா? பணம் வேண்டாமா? என்றெண்ணிக் கொண்டிருந்தேன். 'அடுத்த ஞாயிற்றுக் கிழமை நாள் பார்த்து விட்டேன், மற்ற ஏற்பாடுகளும் செய்துவிட்டேன்' என்ருன்.

வாழ்க்கை

—

வாழ்க்கையானது, பார்வைக்கு மாத்திரம் பளபளப்பாக யிருந்து ஸ்திரமில்லாமல் இருப்பதைக் காட்டிலும், அது சாதாரணமாய் இருப்பது எவ்வளவோ மேல் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனல் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். அது போலியாக இல்லாமல் நிலேயாக இருக்க வேண்டும்; இன்பகரமாகவும் இருக்கவேண்டும்.

— ஞானி எமர்சன்

நான் அருளப்பன் வீட்டில் வந்ததுமுதல் அவன் போக்கே மாறியிருந்தது. முன்பெல்லாம் எப்போதும் சிரித்துக்கொண்டும்கேலிமொழிகளைப் பேசிக் கொண்டும் இருக்கும் அவன் இப்போது ஒரு பெரிய சிந்தனையாளனைப் போல் மாறிவிட்டான். அதன் பொருள் எனக்குப் புலப்படவில்லை. அவன் சொன்னா படியே திருமணம் நடைபெற்றது. மிக விமரிசையாக நடந்தது. அதன் பிறகு நானும் மரகதமும் மலர்சோலையில் மான் கன்றுகள் துள்ளிக் குதித்து விளையாடுவது போல வாழ்க்கைச் சோலையிலே குதித்து விளையாடி வந்தோம். வெளி உலகைப் பற்றி நாங்கள் கவலைப் படவே இல்லை. அருளப்பன் இருக்கும் வரையில் என்ன குறை யெங்களுக்கு!

ஒரு மாதம் கழிந்தது. அருளப்பன் அவனுடைய வியாபார நிலையத்திற்கு அழைத்துச் சென்ருன். அங்குள்ள யெல்லா நிலமைகளையும் விளக்கினுன். நிர்வாகியிடம் 'இவர் என் நண்பர், இனிமேல் இவர்தான் இதற்கு உரிமையாளர் போல். எனவே இனிமேல் என்னிடமெப்படி நடந்து கொள்கிறீரோ அப்படியே நடந்துக் கொள்ளவேண்டும்' என்ருன். எனக்கு ஒரே வியப்பு! பின்னர் அருளப்பனுடைய ஆஸ்தி நிலபுலன்கள் முதலியவைகளின்முழுக் கணக்கையும் என்னிடம் ஒப்படைத்தான்; பாங்கியில் இருந்தபணத்தையும்என்பெயருக்கு மாற்றி விட்டான். 'என்ன இது?' வென்று நான் கேட்டபோது 'மணிவண்ணு இரண்டு நாட்கள் பொறு; எல்லாம் தானுக விளங்கிவிடும் என்ருன். நான் அமைதி யுற்ருலும் என் மனம் அமைதி பெறவில்லை. அருளப்பனின் போக்கே எனக்குப் புரியவில்லை. மரகதத்திடம் கூறினேன். அவளும் ஒன்றும் புரியாமல் திகைத்தாள். இரண்டு நாள் எப்படி கழியும் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அடுத்த நாள் காலை. "மணி வண்ணு, வியாபார நிலையம் போ" என்ருன். அவன் வார்த்தைகளை என்னுல் மீற முடியவில்லை. சென்றேன். வீட்டிற்கு வந்ததும் 'அருளப்பன் எங்கே' என்று மரகதத்தை கேட்டேன். 'அறையை விட்டு வெளியே வரவில்லை. பகல் சாப்பாடு கூட வேண்டாம் என்று கூறி விட்டார்' என்ருள். 'உடல் நலமில்லையா?" என்றேன். 'அப்படித் தெரியவில்லை' என்ருள். உடனே மாடிக்கு ஓடினேன். அவன் அறைக் கதவுகளைத் திறந்தேன். உள்ளே ஒரே சிகரெட் புகை நாற்றம். எங்குப் பார்த்தாலும் துண்டு சிகரேட்டுகள் வீசியெறியப் பட்டிருந்தன. அவன் முகக்குறிஏதோஆழ்ந்தயோசனையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதைக்காட்டியது. என்னை 'வா' என்றுகூட கூறவில்லை. 'அருளப்பா என்ன உடம்பு' என்றேன் அவன்'உடம்புக்கென்ன? நான் இந்தஉடம்பைப்பற்றி என்றுமே கவலைப் பட்டதில்லை. இனியும் கவலைப்படப் போவதும் இல்லை' என்ருன். அந்த வாக்கியங்கள் ஒரு தீர்க்கத் தரிசியின் வார்த்தைகள் போல எனக்குத் தோன்றின. 'சாப்பாடு கூட வேண்டாம் என்று சொன்னுயாமே! என்ன இது? ஏன் இப்படி இருக்கிருய்?' என்றேன். 'அவன் என்னைப் பார்த்து புன் முறுவல் பூத்தான். அந்தச் சின்னஞ் சிரிப்பைத் தாங்க—பார்க்க என்னுல் முடியவில்லை. அவன் முகத்தில் ஒரு தேஜஸ் - பொலிவு-இருந்தது.

"மணிவண்ணு! நீ பாக்கியவான். என்னைப் பற்றிக் கவலை வேண்டாம் நான் புதிய தொழில் ஒன்றை ஆரம்பிக்கவேண்டி அதற்கான யோசனைகள் செய்துக் கொண்டிருக்கிறேன்; அவ்வளவுதான்; நீ போ!' என்ருன். நான் வந்து விட்டேன். இரண்டு தினங்கள் கழிந்தன. இரவு அருளப்பன் வீட்டிற்கு வரவே இல்லை. இரவெல்லாம் காத்திருந்தோம், காணவில்லை. மறுபடியும் இரண்டு நாட்கள் கழிந்தன. அருளப்பன் வரவே இல்லை.

மரகதமும் நானும் அடைந்த திகிலுக்கு எல்லை இல்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. பொழுது விடிந்தது. எனக்கு வியாபார நிலயத்திற்குப்போக மனமே இல்லை. எனக்கு 'இந்த உலகத்திலேயே உயர்ந்த பொருளும்,உயர்ந்த மனிதனுமான அருளப்பன் இல்லை என்ருல் என்னுல் எப்படி வாழ முடியும்? என்று எண்ணிக் கொண்டிருந்தபோது என் பெயருக்கு ஒரு பதிவுத் தபால் வந்தது. அதை வாங்கிப் பார்த்தேன். அருளப்பனிடமிருந்து வந்திருந்தது. ஆசை அலை மோத படிக்கலானேன்; மரகதமும் அக்கரையுடன் கேட்கலானுள் அதில்:—

பெரியோன்

—:o:—

உலகில் மக்கள் விருப்பப்படி நடப்பது மிக எளிது. மக்களே இல்லாத இடத்தில் சொந்த விருப்பப்படி நடப்பதும் எளிது. ஆனுல் உலகத்தின் மத்தியில் இருந்துகொண்டு தனிமையில் அனுபவிக்கக் கூடிய சுயேச்சையை எவனெருவன் முழு அமைதியுடன் அனுபவிக்கின்ருனே அவன்தான் பெரியோன்.

— ஞானி எமர்சன்

அன்புள்ள மணிவண்ணு!

நான் காணுதது குறித்து நீயும், மரகதமும் என்ன பாடு படுவீர்கள் என்று அறியாத வன் அல்ல நான். இருந்தும் உங்களை விட்டுப் பிரிய வேண் டியவனுய் விட்டேன். நண்பா! உன்னையும் மரகதத்தையும் மறந்து வாழமுடியவில்லைதான் என்ன செய்வது? வாழவே பிறக்கின்றனர் சிலர், வாழ வழி இருந்தும் மனம் அமைதியுடன் இருக்க முடிவதில்லை சிலரால். இப்படிப் பட்டவர்களில் இரண் டாம் இரகத்தைச் சேர்ந்தவன் நான். என் தந்தையை இழந் தேன்; தாயற்ற அனுதையா னேன்; என் பதினுருவதுவயதி லேயே குடும்பப் பொறுப்பை யும்,வியாபாரப் பொறுப்பையும், ஏற்று நடத்தவேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டு விட்டது. அப்போது என்னை சூழ்ச்சி செய்து ஏய்க்க எத்தனைப் பேர் முயன்றனர் என்பதை இன்று நினைத்தாலும் பயம் தட்டுகிறது. அறிவின் துணை யால் எல்லாவற்றையும் மீறி என் எதிரிகளை அடக்கி விட் டேன்.

நான் கல்லூரியில் நுழைந்த போது உன்னை நண்பனுகப் பெற்றபின், என் மனம் அமைதி யுற்றது. நல்ல நண்பன் கிடைத் தான் என்பதே மன அமைதிக் குக் காரணம். என் வாழ்க் கைத் துணைவி ஒருத்தி என் மனம்போல் கிடைக்க வேண் டும் என்ற எண்ணமிருந்தது.

மனம் என்பது ஒரு கூர்மை யான ஆயுதம். அது பல முனை களையும் உடையது. எல்லா பக்கத்திற்கும் குத்திக் காயப் படுத்தும் தன்மையே இருக்கி றது. இல்லையென்ருல் என் வாழ்வு விஷயமாய் என் மனம் என்னை இப்படிக்குத்திச் சித்திர வதை செய்திருக்குமா?

கல்லூரி மாணவி ஒருத்தியை நான் காதலித்தேன். ஆம்! அவள் அழகு, அந்தஸ்துஇவை களை எல்லாம அப்போது வரு ணித்தேன்; இப்போது அப்ப டிச் செய்யக் கூடாது. அவள் விழி பேசிய மொழியிலும், ஒயிலிலும், என் மனம் சென்று இலயித்து விட்டது. அவள் யார் என்று ஆராய்ந்தேன். அவள் என் மாமன் மகள் என்று தெரிந்ததும் முதலில் வருந்தினேன். என் மாமன்

'வாய்வு சூரணம்'

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கை கால் அசதி, பசியின்மை, செரி யாமை, வயிற்றுவலி, பித்தமயக் கம், பித்தசூலை, சோம்பல் முத லான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்ப தற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகை களினுல் தயாரிக்கப்பெற்றது. (பத்தியமில்லை)

5 பலம் டின் ரூ. 3-0-0

தேவைக்கு :—

சம்பு இண்டஸ்ட்ரீஸ்

சேலம்–2 (S. R.)

குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் பரம்பரைப் பகை. ஆனால் அந்த மலர்க் கொடி—மயிலனையாள் என் மனதில் புகுந்து கொண்டாள். எனவே முயன்றேன். சில பெரியவர்கள் மூலம் நானே சமரசம் பேசினேன். அவர் மனதை மாற்றினேன். ஆனால் இந்தச் செய்தியெல்லாம் அவளுக்குத் தெரியாது. என் குறுகிய நெஞ்சம் நான் யார் என்பதை சொல்லாமல், காதல் லீலைகள் புரியாமல், மாமன் மகள் என்ற ஒரே ஓர் உரிமையைக் காட்டி அடைந்து விடலாம் என்று எண்ணியது. என் பெரு முயற்சியால் அவள் தந்தை சம்மதித்தும் விட்டார். கல்லூரிப் படிப்பு முடிந்ததும் கல்யாணம் என்றார். நான் களிப்புக் கடலில் மூழ்கினேன்.

நண்பா! என் எண்ணம் ஈடேற வில்லை. ஆமாம்!

சின்னஞ் சிறு பிள்ளைகள் தும்பியைப் பிடிக்க மெல்ல—ஓசை செய்யாமல் அதன் அருகில் நெருங்குவர். நெருங்கிக் கையை நீட்டி அதைப் பிடிக்கும் சமயத்தில் அது 'விர்' என்று எழுந்து ஆகாயத்தில் பறந்து விடும். அது போலத்தான் என்னால் காதலிக்கப் பட்டவள் பறந்து சென்று விட்டாள். நான் ஏமாற்றம் என்னும் மதுவருந்தி மயங்கி வீழ்ந்தேன்.

மணிவண்ணா! யார் அவள்? என்று சொல்லவில்லையல்லவா? சொல்கிறேன் வருத்தப்படாதே அவள் தான் மரகதம்! ஆம்! அதிர்ச்சி யடையாதே! நான் மாலை யிட்டு மனைவியாக்கிக் கொள்ள எண்ணியமரகதத்தை தான் நீ மணந்துக் கொண்டாய்.

நீ முதன் முதல் மரகதத்தைக் காதலிப்பதாய் சொன்னபோது நான் உன்மீது அடைந்த ஆத்திரம்—வருத்தம் சொல்ல முடியாது. நான் மனக் கலக்கத்துடன் இருந்தபோது நமது கல்லூரி தமிழாசிரியர் வந்தார், அவரிடம் இதனை விளக்கினேன். உனக்குத்தான் நன்கு தெரியுமே! நமது தமிழாசிரியர் நம்மிடம் தோழமையுடன்பழகியது. அதனால்தான் நானும் துணிந்து கேட்டேன். "ஆசிரியரே! நான் என்ன செய்வது? காதலை மறப்பதா? நண்பனை மறப்பதா?" என்று. அவர் "அருளப்பா! வேறொருவனை காதலிக்கும் மரகதத்தை நீ நினைப்

மூத்த மனைவிக்காரர்கள்

உலகப்பெரியார் காந்தியடிகளின் துணைவி, கணவருக்கு ஐந்து மாதங்கள் மூத்தவர்!

ஆங்கில இலக்கியத்திலே நிலையான இடம் பெற்றுவிட்ட டாக்டர் ஜான்ஸன் தனது 26-ம் வயதில் தனக்கு 20 வயது மூத்த விதவையை மணந்து கொண்டார்!

ஷேக்ஸ்பியர் தனது 19 வயதிலே 27 வயதுடைய அன்னா ஹார்த்தவேயை கடி மணம் புரிந்தார்!

பதே குற்றம். எனவே அவளை மறந்து விடவேண்டும். ஆமாம்! உன் காதலை தியாகம் செய்தாக வேண்டும். அதுதான் மிகவும் சிறந்தது'' என்ருர். அது ''எப்படி முடியும்?'' என்றேன். அருளப்பா! பொருளைத் தியாகம் செய்வார்கள் சிலர்—உயிரைத் தியாகம் செய்வார்கள் சிலர்—ஆனால் தன் வாழ்நாள் முழுவதும் தன்னுடனிருந்து இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டு இல்லறம் நடத்தத் தன்னால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருத்தியைவேறொருவன் பால் ஒப்படைத்துவிட்டு அவர்கள் வாழ—உன் வாழ்வையே தியாகம் செய்வது சாதாரணத் தியாகம் அல்ல! மிகமிக உயர்ந்தது. எனவே நீ மணிவண்ணன் காதல் கதையில் வில்லனாகத் தோன்றி அவர்கள் வாழ்வைப் பாழாக்கக் கூடாது. உங்கள் நட்பும் வளர வேண்டும்—அவர்கள் காதலும் வளர வேண்டும்'' என்ருர். நான் மிக ஆழ்ந்து சிந்தித்தேன். ஒரு நல்ல நண்பனுக்காக என் வாழ்வு கெட்டால் என்ன? என்று எண்ணியே உன்னை என் வீட்டிலேயேவைத்துக் கொண்டேன். திருமணம் செய்து வைத்தேன். என்ன இருந்தாலும்: மனம் என்ன அவ்வளவு சீக்கிரம் கட்டுப் பட்டு விடுகிறதா? அடிக்கடி சே! சே! வேண்டாம்...... எண்ணங்கள் எழுகின்றன. நான் அங்கேயே இருந்து கொண்டு என்னால் மரகதத்தை மறக்க முடியவில்லை. உங்கள் வாழ்வுக்கு மாசு உண்டாக்கக் கூடாது என்பதற்காக, நான் உங்களை விட்டுப் பிரிந்து விட்டேன். ஆம்! மிக தூரத்தில் வந்து விட்டேன். நான் மரகதத்தின்மேல் வைத்திருந்த ஆசை—காதல் எல்லாவற்றையும் நாட்டின்மீது வைத்து விட்டேன். இந்த நாட்டில் ஏழைகள்தான் வாழ முடிவதில்லை—இதனை மாற்றிஅமைக்கப்போகிறேன் நாட்டு முன்னேற்றத்திற்காகநான்உழைக்க தீர்மானித்து விட்டேன், ஆம் நண்பனுக்காக காதலைத் தியாகம் செய்யப் போகிறேன். நண்பா! என் ஆஸ்தி முழுவதும் உன் பெயருக்கும், மரகதத்தின் பெயருக்கும் எழுதி வைத்து விட்டேன். அதுவும் இக் கடிதத்துடன் கிடைத்திருக்கும். நல்லபடி வாழுங்கள். இறப்பதற்கு முன் ஒரு தடவை நிச்சயம் உங்களைப் பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்புள்ள,

அருளப்பன்.

எனது இலட்சியம்

என்னுடைய கடன் என்ன என்பதுதான் எனக்குப் பொருளே ஒழிய, மக்கள் என்ன நினைக்கிருர்கள் என்பதன்று. ஜட உலகத்திலாகட்டும். மனோ லோகத்திலாகட்டும், இதை விதியாகக் கொண்டு நடப்பது கடினம்; ஆனால் பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் உள்ள வித்தியாசம் அனைத்தும் இதுதான்.

—ஞானி எமர்சன்.

வியாபாரிகளுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும்
மற்றும் ஆதரவாளர்களுக்கும் எங்களது
சுதந்திர எழுச்சி நூற்றுண்டு விழா
வாழ்த்துக்கள்

சண்முகம் டிரான்ஸ்போர்ட்
பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை

போன் : 203 தந்தி : "TRANSPORT"

எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்கு தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.



1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொதுஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

போன் : 512 - பிராஞ்சு: மதுரை - தந்தி : "TRANSPORT"

ஜெகம் புகழும்

செடி மார்க் பீடிகள்

සේඩි මාර්ක් බීඩි

197686

செடி மார்க் பீடி

உரிமையாளர்கள் :—

P. முகம்மதுமைதீன் அன் பிரதர்

செடி மார்க் பீடி தொழிற்சாலை,

மேலப்பாளையம்.

(நெல்லை ஜில்லா)

வாழ்வின் எல்லை

எம்.எஸ்.கமலா

ஊரே புகழும் 'பியாஸா' படத்துக்கு மூன்றாவது காக்ஷிக்கு சென்று இரவு இரண்டு மணிக்குத் திரும்பிய போது எதிரில் வந்த ரிக்ஷா ஒன்றில் ஏறி "டௌனுக்கு விடு" என்றேன். ரிக்ஷாக்காரன் வெகு வேகமாய் ஓடிக் கொண்டிருந்தான். சினிமாவில் பார்த்த சில கட்டங்கள் என் மூளையில் சுழன்று கொண்டிருந்தன. ஓடிக்கொண்டிருந்த ரிக்ஷாக்காரன் 'நல்ல இடமாய் ஏற்பாடு செய்யட்டுமா?" என்று என்னை நிமிர்ந்துப் பார்த்தான். சுழன்று கொண்டிருந்த சக்கரம் சட்டென்று நின்றது. ராஜபாட்டையை விட்டு அபாய கூண்டிற்குள் புகுந்து விட்டேனென்று புரிந்து கொண்டேன். மறுபடியும் அதே கேள்வி. என்னையும் அறியாது 'ஊம்' என்றேன்.

சிறிது நேரத்தில் நான் ஒரு அலங்கரிக்கப்பட்ட அறையில் தூய வெண்ணிற உரைகளிடப்பட்ட மெத்தையிலமர்ந்திருந்தேன். மனோரஞ்சித மலர்களின் மனதை மயக்கும் நறுமணம், அம்பர் வத்தியின் மெல்லிய புகை, சுவற்றில் மாட்டப்பட்டுள்ள குழலூதும் கண்ணன் படம், பக்தை ராதையைப் பரவசப்படுத்தும் படம், ஒன்றுமறியாத ஜடப்பொருள் போல் தராசில் துளசிதளத்திற்குச் சமமாய் உட்கார்ந்திருக்கும் கண்ணபிரானின் படம், முதலியவற்றைப்பார்த்தால் அதை ஒரு ஆராதனை இடமாய்த்தான் கருதத் தோன்றியது.

நான் தராசிலமர்ந்து குறும்புப் பார்வையுடனிருக்கும் கண்ணனைப் பார்த்துக் கொண்டிருந்தபோது "வணக்கம்" என்ற குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். ஓர் அழகி இருகரங்களையும் குவித்து நின்றாள். அவள் அழகிய முகத்தில் ஆனந்த ஒளிக்குப் பதில் சோக இருள் கவ்வியிருந்தது. அங்கு ஆழ்ந்த மௌனம் நிலவியிருந்தது. அவள் புது மணப்பெண் போல் குனிந்த தலை நிமிராமல் வாயிலருகில் நின்றிருந்தாள்.

அவள் இடையை ஒட்டிக் கொண்டு தொங்கும் இளம் ரோஜா நிற ஜார்ஜெட் புடவை, கருநீல ஜாக்கெட், அதன்மேல் நெளியும் தங்கத்தாவடத்தை ஏந்திய கர்வத்துடன் நிற்கும் விம்மும் மார்பு, முகப்பூச்சு பூசிக்கொண்டிருந்ததால் மெர்க்குறி விளக்கொளியில் வெண்மதியோனைவிட அழகாய் வெள்ளையாய்த் தோன்றும் முகம், அதில் செதுக்கி வைத்தாற்போல் மூக்கு, அதன் வரம்பைக் காட்டுவதுபோல் விற்புருவங்கள், அதன் கீழ் மையிட்ட வேல்விழிகள்; மலைப்பாம்பைப் பழிக்கும் நீண்ட பின்னல், பின்புற கழுத்தை மறைத்துத்தொங்கும் கட்டு மல்லிகையும், சம்பங்கியும் அவளுடைய அழகை அதிகப்படுத்தின. நான் என் மனத்துள் ரிக்ஷாக்காரனை மெச்சினேன். என் கையிலிருந்த கைக்கெடியாரம் அடிப்

பது என் காதுகளுக்கு நன்ருய்க்கேட்டது. ஆனல் அந்த நங்கை நின்ற இடத்திலிருந்து அசையவில்லை. நானே எழுந்து அவளருகில் சென்று,

"உன் பெயரென்ன?" என்றேன்.

"வீணு" என்று சொல்லி, "உங்களை ஒன்று கேட்கிறேன். கோபிக்காது சொல்கிறீர்களா?" என்று பின்னுக்கு நகர்ந்தாள். அவள் வேல்விழிகளில் நீர் சுழன்றது. குரலில் வேதனையொலித்தது.

"ஏன் பின்னுக்குப் போகிருய்? வேசிக்கும் வெட்கமா? அட..." என்றேன். அவ்வளவுதான், அவள் முகத்தில் ரத்தம் ஜிவ்வென்று ஏறியது.

"ஜன நாயகத்தில் வருங்கால புகழேந்திகளாய் விளங்க வேண்டிய பூமான்களாகிய நீங்கள் வேசியின் வீட்டைச் சுற்றி வலம் வருவானேன்? பண்பாட்டை வளர்க்கும் உங்களுக்கு இம்மாதிரி நீச எண்ணம்... உணர்ச்சி தோன்றுவானேன்? பகலெல்லாம் விபசார ஒழிப்புச் சட்டம், சீர்திருத்த திருமணம், இப்படி அப்படி என்று சொற்பொழிவாற்றுவது, இரவானல் இங்கிதமற்ற பக்தி மிகுந்த பக்தர்கள்போல் பரத்தையர் வீட்டை வலம் வருவானேன்? நீங்கள் நேர்மையைப் புகட்டி, நெறியுடன் வாழ எங்களுக்கு வழி வகுத்துக் கொடுப்பதை விட்டு வீண் வாதங்களைக் கிளப்புவது அர்த்தமற்ற செய்கை என்று அழுத்தம் திருத்தமாய் சொன்னுள்.

எனக்குப் பதில் அளிக்கத் தோன்ருவிடினும் கேள்வியாலேயே எதிர்க்கத் தொடங்கினேன்.

"இத்தனை நேர்மையாய் பேசுபவள் இத்தொழிலை ஏன் செய்கிருய்?" என்றேன்.

அவள் உள்ளத்திலிருந்த வேதனை அவள் உதட்டில் நகைப்பு ரூபமாய் வெளிப்பட்டது. அவள் பற்களால் மேல் உதட்டை இழுத்துப் பிடித்துக் கொண்டு,

"இந்தப் பதிதையின் கதை உங்களுக்கு சுவையுள்ளதாயிருக்காது. நான் எப்படியோ பரத்தையாகி விட்டேன். உங்களைப் போன்றவர்களின் இன்பத்திற்காக என் வாழ்வை வதியாகம் செய்கிறேன். அந்த இன்பத்தைப்பெற நீங்களும் வந்துள்ளீர். இந்த இன்ப வேளையில் என் துன்பக் கதையைச் சொல்லி உங்களைச் சங்கடத்திலாழ்த்த மாட்டேன். ஒரு விஷயத்தைமாத்திரம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த ஜாதி உங்களைப் போன்றவர்களால் உயிருடன் ஒதுக்கப்பட்டு, உள்ளத்தை விலைபேசி கள்ளவழியில்கவர்ந்து கழிசடையாக்கி, பரத்தை என்ற பெயரைச் சூட்டி பாழ்படுத்திய பெண்ணினங்களை... எல்லோரையும் ஒரேமாதிரி எண்ணுதீர்கள்...அவர்களிலும் உண்மையுள்ளவர்கள், உள்ளம் உள்ளவர்கள், நேர்மையாய் வாழ வழியில்லாது வேதனையுடனிருப்பவர்கள் இருக்கிருர்கள்" என்ருள். அவள் கண்ணீர் கரையை உடைத்துக் கொண்டு கன்னத்தில் வடியத் தொடங்கியது.

என் உள்ளம் துடித்தது. உடல் நடுங்கியது. வக்கலாத்து

வாங்கிய சட்ட நிபுணனைப் போல்''உன் கதையைச் சுருக்க மாய் சொல்'' என்றேன்.

வீணு, பாரமான பெருமூச்சு விட்டாள். அவள் நிற்பது என் கால்கள் வலித்தாற் போலிருந் தது. ''உட்கார்'' என்றேன். அவள் அறைக் கதவுக்கு வெளியே அமர்ந்து சொல்லத் தொடங்கினுள்.

0 0

சுமார் பதினைந்தாண்டு களுக்கு முன் என் வாழ்நாளில் வெகு கொடிய நாள். அந்த நாள் என்னை அடியுடன் குல கோத்திர மற்றவளாக்கி விட் டது. என் தாய் தந்தையர் யாரோ, நான் எந்த் ஊரோ அதுகூட சரிவர அறியாத பரு வம். ஆறுவருஷ சிறும். கழுகா சலத்தில் (திருக்கழுக்குன்றம்) திருக்குளத்தில் சங்குமிதக்கும் நாள்.

அன்றையத்தினம் சங்கு தீர்த் தத்தில் நீராடி கிரியை சுற்றிக் கொண்டு வரும் போது ஓரிடத் தில் என்னை கை தவற விட்டு விட்டனர் என் பெற்ருேர்கள். அவர்கள் பின்பே வந்து கொண் டிருந்த நாள் வண்ண வண்ண பலூன்களைக் கோலில் கட்டிக் கொண்டு செல்பவனைப் பார்த் துக் கொண்டே அவன் சென்று நின்ற ரங்கராட்டினத்தருகில் சென்று ராட்டினம் சுழலுவதை யும், அதிலமர்ந்திருக்கும் என் னைப் போன்ற சிறுவர் சிறுமிய ரையும் பார்த்துக் கொண்டிருந் தேன். ராட்டினம் சுழன்று நின்றது. குழந்தைகளின் சொந் தக்காரர் தத்தம் குழந்தைகளை இறக்கிக் கொண்டனர். காத்தி ருந்தவர் தம குழந்தைகளை ஏற் றினர். அப்பொழுது தான்

> இன்று உனக்குத் தோன் றுகிற விஷயங்களை அழுத் தம் திருத்தமாகச் சொல்லு நாளைக்குத் தோன்றுகின்ற விஷயங்களை நாளைக்கு அதேமாதிரி அழுத்தம் திருத் தமாகச் சொல்லு. ''ஆ! அப்படியானுல் ஜனங்கள் என்னைப்பற்றி குறைவாக நினைப்பார்களே!'' என் கிருயா? குறைவாக நினைக் கப்படுகிறது அத்தனை கெடுதலா என்ன? **பித்தா கோரஸ்**, சாக்ரடீஸ், இயேசு, லூதர், கோப்பர்னிக்கன், காலீலியோ, நியூட்டன், ஏன் மனித சரீரத்தை எடுத்த நிரஞ்சனமான ஞானுத்மாக்கள் எல்லோ ருமே அவர்கள் காலத்தில் குறைவாகத்தான் நினைக்கப் பட்டார்கள். பெருமைக்கு உறைகல்லே சாமானிய ஜனங்களால் தூற்றப் படுவதுதான்.
>
> — ஞானி எமர்சன்

என் தாய் தந்தையர் நினைவு வந்தது. ''அம்மா! அப்பா!!'' என்று நாற்புறமும் விழித்துப் பார்த்து அழுதேன். ரங்கராட் டினத்தின் ஆனந்தம், ஆசை அடியுடன் நசித்தது. பயந்து வீறிட்டேன்.

யாரோ வெகு அனுதாபத்து டன் ''யாரம்மா? உங்கம்மா பேரென்ன? எங்கிருந்து வந் தீர்கள்?'' என்று கேட்டார்.

''அம்மா பேருஅம்மா! அப்பா

பேரு அப்பா! ஊரிலிருந்து வந்தேன்''

''உன் பெயர்?''

'' வீணு ''

''பாப்பா, உங்கம்மாவை எனக்குத் தெரியும். நான் அழைத்துப் போகிறேன்'' என்று ஓர் பெண் குரல் வெகு கனிவாய், இனிமையாய் கேட்டது. அத்தனை பயத்திலும் ஓர் சிறு ஆனந்தம். அதற்குள் மற்ருேர் அனுபவக் குரல்:

"அம்மா! உங்களுக்கு அவர்களைத் தெரிந்தால் அழைத்துச் சென்று அவர்களிடம் ஒப்படையுங்கள். இல்லையேல் போலீஸில் ஒப்படைத்துச் செல்லுங்கள்''

''அப்படிக்கூட தெரியாதவர்கள் குழந்தையை அழைத்துச் செல்வேனு? போலீஸும் கிலீஸும் திக்கு திசை தெரியாதவர்களுக்கல்லவோ வேண்டும்'' என்று சொல்லி என்னை அணைத்துக் கொண்டாள்.

''எங்கம்மாவிடம் அழைத்துப் போறயா?'' ஏக்கம் தொனிக்கும் அந்த பிஞ்சுக் குரல். அத்தனை கண்களும் என்னைப்பார்த்தன. அன்று பரிதாபமாய் நோக்கிய கண்கள் இன்று என்னைப்பார்க்க அருவருக்கின்றன; அஞ்சுகின்றன.

எப்படி மறந்தேனே? மெள்ள மெள்ள பெற்ற தாயையும் பிறந்த ஊரையும் மறந்தேன். அன்னையிடம் சேர்க்கிறேனென்று அழைத்து வந்தவள் அன்பாய் வளர்த்தாள், கலைகள் பல கற்பித்தாள். சங்கீதம் நடனம், கல்வி......அனைத்தும் தங்கு தடையற்றுதான் வந்தன. காட்டில் காயும் நிலவில் மலர் மணம் ஒன்றினுலென்ன? மலர்கள் நகைத்தாலென்ன? வானம்பாடி பாடினுல் என்ன? யார் உள்ளத்தைத் தொடும்?

கான்வெண்ட் படிப்பு முடியும் வரை என்னைப் பற்றி நான் சிந்திக்க வேண்டிய சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. கலாசாலையில் புகுந்த பின் தான் என் கவலைகள் என்னைச் சுற்றி வட்டமிடத் தொடங்கின.

இண்டர் இரண்டாம் வகுப்பு படிக்கும் போது கலாசாலையின் வெள்ளி விழா விமரிசையாய் கொண்டாடத் திட்டமிட்டனர். காளிதாசனின் காப்பியமான 'சகுந்தலை' நாடகம் ஒரு நாள். ஷேக்ஸ்பியரின் "ரோமியோ ஜூலியட்' ஒரு நாள். அதைத் தவிர விளையாட்டுப் போட்டிகள், பரத நாட்டியம், மாற்றுடைப் போட்டி முதலியன நடந்தன'' என்று குரல் வளையை பிடித்துக் கொண்டு விம்மினுள். அவள் கண்கள் நீரை வடித்துக் கொண்டிருந்தன. வெகு சுவாரசியமாய் சங்கீதத்லைதக் கேட்டுக் கொண்டிருக்கும் போது நடுவில் யாரோ வீறிட்டு அழுது பாட்டின் சுவையைக் கெடுப்பது போலிருந்தது. சப்பிட்ட என் முகத்தைக் கண்டு தன்னைத் தான் ஆச்வாச படுத்திக் கொண்டு பெருமூச்சு விட்டபடி மறுபடியும் சொல்லத் தொடங்கினுள்.

32 இனிய மணம்கமழும்
302 ஜவ்வாது
3002 பத்திகள்

—: தயாரிப்பவர்கள் :—

S. V. செல்லக்கனி & கோ

மீனுக்ஷி கோயில் தெரு, மதுரை.

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனாமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதராஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4. EVENING BAZAR ..... P.T. MADRAS

BAROOL

“அன்று கலாசாலைநாள். பிற்பகல் கலாசாலை மைதானத்தில் பந்தாட்டத்திலீடுபட்டிருந்த மாணவர்களைப் பார்த்துக்கொண்டு மாணவிகள் நின்றிருந்தனர். ஒரு அழகிய வாலிபன் ஓங்கியடித்த பந்து கோலுக்கு வெளியே வேகமாய் வருவதைப்பார்த்து நான் அதை அனுயாசமாய் கையால் தட்டிவிட்டேன். இமைப்பொழுதில் செய்த காரியத்தின் பலனை எண்ணாது செய்துவிட்டேன். ஆட்டத்திற்கு சம்பந்த மற்றவளான நான் அதை அடித்த

தால் தானே என்னவோ 'அவுட்' என்ற குரல்கள் எழும்பி கலகலவென்று சிரித்தன. நின்று பார்த்தேன். பந்தையடித்த வாலிபனே அதைக் கையிலேந்தி என்னை விழுங்குவதைப் போல் பார்த்து நின்றார். நான் தலை கவிழ்ந்து சென்றேன்.

மாலை சகுந்தலை நாடகத்தில் நான் சகுந்தலை. துஷ்யந்தன் பாத்திரம் அந்த வாலிபன் தான் ஏற்றார். உண்மையில் அவர் பெயர் கலாசாலையில் ஒவ்வொரு விஷயத்திலும் அடிபடுவதைக் கேட்டிருக்கிறேன். அவரைப் பார்த்ததில்லை. காரணம்? என் கலைகள் வளர மணிக் கணக்காய் அந்தந்த ஆசிரியர்கள் என் வீட்டில் காத்திருப்பார்கள். கலாசாலைக்கு குறித்த காலத்திற்கு ஐந்து நிமிடங்களுக்கப்பால் தான் வருவேனே யல்லாது இரண்டு நிமிஷத்திற்கு முன் வந்ததேயில்லை.

நான் சகுந்தலையாய் நந்தவனத்திற்குள் நுழைந்தேன். துஷ்யந்தன்

கண்வரைத்தேடி வரும்காக்ஷி அவர் கம்பீர நடைபோட்டுக் கொண்டு வந்தார். பார்த்தேன். மத்தியானம் விளையாட்டுமைதானத்தில் பந்தையடித்தவர்தான். பரவசமாய் மெய்மறந்து மருண்டு நின்றேன். அந்தக் காக்ஷி வெகு நன்ருயிருந்ததாக நாடகத்திற்கு வந்திருந்தவர்கள் சொன்னார்கள். அந்த துஷ்யந்தன் என் மனதைக் கவர்ந்தார். அவர் மனக்கதவும் திறந்து கொண்டது போலும்.

ரோமியோ ஜூலியட்டிலும் நாங்களிருவரும் தான் நாயகன் நாயகி பாத்திரங்களை ஏற்ருேம். எங்கள் உள்ளத்துள் வீசிய காதல் ஒளியோ அல்லது கருத்து ஒற்றுமையோ பருவச்சந்திப்பின் அறிகுறியோ அறியோம். நாங்கள் ஏற்ற பாத்திரங்களில் ஒன்றிப் போனேம். புகழ்மொழிகளுடன் பரிசுகள் அநேகம் பெற்ருேம்.

மூன்ரும் நாள் மாற்றுடைப் போட்டி. அதில் நான் கலந்து கொள்ளாமல் பார்வையாளர்கள் வரிசையிலமர்ந்தேன். தலை வெளுத்து, உடல் சுருங்கி, உள்ளம் பருத்து,கோல ஊன்றி குலைநடுங்க பிச்சை எடுக்கும் கிழவன் ஒருவன் அனைவரின் முன்வந்து தன் கப்பரையை நீட்டி பிச்சை கேட்டான். என் பணப்பையை போட்டியில் கலந்து கொண்ட நேசி வாங்கிப் போயிருந்தாள்: என் வலது கையிலணிந்திருந்த தங்க வளையல்களில் ஒன்றைக் கழட்டி அவன் கப்பரையில் போட்டேன். போடும் போது என் கூந்தலில் சொருகியிருந்த ரோஜாக்கொத்து அப்படியே நழுவி அவன் முன்னங்கையில் விழுந்தது. அதை எடுத்து நுகர்ந்து கொண்டே அப்பால் சென்ருன். அவன் யாரென்று தெரியாது. அவன் வேஷப் பொருத்தம் அனைவரையும் பிரமிக்கச் செய்தது. மாற்றுடை போட்டியில் பரிசு பெற்றவர்களின் பெயரை படிக்கும் போது முதல் பரிசு பெற்ற பிச்சைக்காரன் என் மனோநாதன் என்றறிந்த போது என் மனம் துள்ளிக் கூத்தாடியதைப் பார்க்க வேண்டுமே!

அதிலிருந்து எம். ஏ. படிக்கும் அவரும், இண்டர் படிக்கும் நானும் வெகு நெருங்கிப் பழகத் தொடங்கினேம். எங்கள் கண்கள் ஒருவரை ஒருவர் பார்க்காவிடில் ஏங்கித் துடிக்கும். பார்த்துவிட்டாலோ உள்ளத்தில் ஏற்படும் குளிர்ச்சியை உற்சாகத்தை ஆனந்தத்தைச் சொல்ல எழுத்துக்கள்...தவறு வாசகமில்லை. அந்த நிலையை உணர்ந்தவர்கள்தான் உணர முடியும்.

தேர்வு பரீக்ஷைகள் நெருங்கி விட்டன. பரீக்ஷை முடிந்ததும் அவர் யாரோ? நான் யாரோ? அதற்குள் எங்கள் அன்பிற்கு அறிகுறியாய் அவர் பெற்ருேர்கள் என் தாயை சந்திக்க செய்யவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

அன்று கலாசாலையிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். வீணு! "என்று பழகிய குரல் அழைப்பது கேட்டு திரும்பினேன். அவர்தான். கையில் கட்டு கடிதங்களுடன் நின்றிருந்தார். ஒருகடிதத்தை என்னிடம்நீட்டி,

"என் எண்ணத்தைத் தடுக்க மாட்டாயென்ற நம்பிக்கையால் என்று குறுநகை செய்தார்...." அவர் கொடுத்த கடிதத்தைப் பார்த்தேன்.

ஹாஸ்டல் நாள் கொண்டாட்டத்தில் என் பரத நாட்டியம் இடம் பெற்றிருந்தது. என்னுடைய தீரா இடையூறுக்கு ஆரம்பநாள்; இன்ப எண்ணங்களின் இறுதிநாள் அதுவாயிற்று.

0 0 0

அன்று பரீக்ஷையின் கடைசி நாள். நான் வீட்டிற்கு ஆனந்தமாய் வந்தேன். என் தாய் காப்பியை கொண்டுவந்து என் உதட்டில் வைத்து அன்புடன் என் தலையைக் கோதியபடி, "கண்ணே! நாளைக்கு உனக்குச் 'சுபதினம்'" என்று ஏதேதோ போதித்தாள். என் மூளை சுழன்றது. நான் அவரைக் காதலித்ததை, அவர் என்னை முழுமனதுடன் விரும்புவதைச் சொன்னேன்.

"பைத்தியக்காரி! நீ யாரென்றறிந்தால் முழுமனதுடன் காதலிக்கமாட்டான். இருமனதுடன் காதல் கொள்வான். சமூகத்தில் நமக்குச் சமதையான இடமளிக்க இன்னும் உலகம் முன்னேறவில்லை. பருவப் பொலிவு மறைவதற்குள் பணத்தை உறிஞ்சி பிரபலமாய் வாழ கற்பதே நம் குல ஒழுக்கம். உனக்கு எல்லா கலைகளும் உரிமையாகி விட்டன. சாகசத் தொழிலான இதை மாத்திரம் நீ சரிவர நடத்தினுயானல் ...."

நான் அழுதேன். வாய்க்கு வந்தபடி அவளை வசைமாரி பொழிந்தேன். ஒன்று, இரண்டு, மூன்று நாட்களாகி விட்டன. பல்லைக்கூட துலக்காமல் பச்சைத் தண்ணீர் வாயில் ஊற்ருமல் பதைபதைத்தேன். அவள் அதை சட்டை செய்யவில்லை. தாயுள்ளம் இத்தனைக் கொடியதாயிருக்குமா?" என்றயுற்றேன்.

அன்று மாலை!

"வீணு! இருக்கிருளா?" என்ற அவர் குரல் கொதிக்கும் என் உள்ளத்தைக் குளிரலைவத்தது. எழுந்திருக்க முயன்றேன். முடியவில்லை, கண்களை மூடிக் கொண்டேன்.

"இந்த அறையிலிருக்கிருள்.....கண்ணே! யாரோ உன்னைத் தேடிகிட்டு வந்திருக்காங்க பாரு" என்ருள் அம்மா என்ற பெயரிலுள்ள அந்த இதயமற்றவள்.

"என்ன உடம்பு, வீணு?" என்று துடிதுடித்தபடி கேட்டு அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார். மெள்ள கண்ணைத் திறந்தேன். அந்தக் கண்கள் தன் வலிவற்ற தன்மையை கண்ணீரால் விளக்கியது. "வீணு! நீ வெகு நன்ருய் எழுதியிருப்பதாய் சாவித்திரி சொன்னுள். இத்தனை மோசமான நிலைக்கு வர உனக்கு வந்துற்ற வியாதி யாது?" என்ருர். அடைத்துக் கிடந்த என் துக்கம் உடைத்துக் கொண்டு வந்தது. நடந்த விஷயத்தை முழுவதும்சொல்லி என்னை மணந்துகொள்ளச் சொன்னேன். அத்தனை நேரம் கம்பீரமும், பெருமையும், காதலும் ஒளிவிட்டுக் கொண்டிருந்த அவர் கண்களில் ஏமாற்ற திரை தொங்கியது. மந்தஹாசமாயிருந்த முகம் மங்கியது. ஒரு பெருமூச்சு விட்டார். மௌனமாய் எழுந்து நின்ருர்.

"வீணு! உன்னை ஏமாற்ற மனமில்லை. சந்ததியற்ற செல்வம் படைத்த சத்தியசந்தர்களின் வளர்ப்புப்பிள்ளை நான். போலி வாழ்க்கையை விரும்புபவனல்ல. வளர்த்தவர்களையும் புண்படுத்தத் தயாராயில்லை. கடவுள் என்னை எப்படிவைக்க நினைத்துள்ளாரோ அப்படியே நடக்கட்டும்; நான் வருகிறேன்" என்றுநடந்தார். அவர் கண்களிலிருந்து இரண்டு நீர் முத்துக்கள் கீழே விழுந்து உடைந்தன.

என் வாழ்வின் எல்லையைக் கண்டுவிட்டேன். மூன்று மாதம் கட்டிலுடன் நோய்க்கு அடிமையானேன். இயற்கையான நிலைக்குவர வருடம் ஒன்ருயிற்று. ஆனுல் என் உள்ளத்திலெழுந்த ஆசைக் கட்டிடம், ஆதர்ச சிகரம் சுக்குநூருய் உடைந்து தரைமட்டமாயிற்று.

வளர்த்த கொடுமைக்கு அவள் கடனைத் தீர்க்க வேண்டி அவள் விருப்பத்துக்கு விருப்பமில்லாது ஆறுமாதங்களுக்கு முன் இணங்கினேன். டதிதையாகி விட்டேன். உணர்ச்சியற்ற கட்டை நான். உள்ள மற்ற பெண் நான். பணத்தைப் பந்தயம் வைத்து இன்பமென்ற பெயருடன் துன்ப விளையாட்டு விளையாடும் உயிர் ஜீவன். அவ்வளவுதான். ஆனுல் ஒன்று...... இனி இந்த வாழ்க்கையை... வாழ்வை விரும்பேன். உங்கள் கடமையை, கடனைத் தீர்த்துக்கொண்டு செல்லுங்கள. காலை இந்த ஜீவப் பறவை இந்தக் கூண்டிலிருந்து பலவந்தமாய் துரத்தப்படும். 'வாழ்வின் எல்லை'க்கப்பாலாயினும் நிம்மதியாய்..." என்று குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

என் உள்ளம் கரைந்து கண்களில் நீர் தேங்கியது. "தங்காய்! செத்து சாதிப்பதென்பது விவேகமற்றத் தன்மை. உன் உயிர் பறவையை விரட்டியடிப்பதைக் காட்டிலும் உலகோர் உய்ய உன் நேர்மையைப் பணயம் வை. உன் கலைகளை நாட்டில் பரப்பு. சிலம்பில் இடம் பெற்ற மணிமேகலையும், மாதவியும் பிறந்த குலத்தைக் காட்டிலும் உன் குலம் குறைந்ததல்ல. பெண்குலம் வாழ, பெண்மை வாழ, பொறுமையைக் கடைபிடி. அறிவற்று அழுது மடியாதே!" என்று எழுந்து அவள் முகத்தைப் பார்த்தேன். தூய்மை ஒளிவீசும் அவள் கண்களில் பயங்கர நிழல் படிந்திருந்தது. பேதமை படிந்த அவள் முகத்தில் சோகமங்கல் நன்கு தெரிந்தது.

"மறுபடியும் சொல்கிறேன். சகோதரி! தற்கொலை செய்து கொள்ளாதே. தைரியத்தை கடைப்பிடி. சாகசத்தை துணை சேர்த்துக்கொள். பெண் குலத்திற்கு மாணிக்கமாய் புதுயுக மணிமேகலையாய் மனநிம்மதியாய் வாழம்மா! உன்னுடன் பிறந்த சகோதரன் போல் சொல்லும் நன்மொழிகளுக்கு இடம் கொடம்மா" என்று வெளியில் வந்தேன்.

"அண்ணு! 'வாழ்வின் எல்லை'யை செத்துத்தான் காண முடியுமென்று நினைத்தேன். தங்களின் நல்லாசியுடன் நல்வழியில் வாழ்வேன்," என்ருள் குரல் தழதழக்க. அருகிலிருந்த மாதாகோயில் மணி நான்கு முறை அடித்து நின்றது. நான் வீணுவின் வீணன வாழ்க்கையை நினைத்தபடியே வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

"கிணிங்......கிணிங்"

அப்போதுதான் வெளியே உலாவிவிட்டு திரும்பிய அலுப்போடு சாய்வு நாற்காலியில் சாய்வதற்குள் டெலிபோன் மணி அடிக்கவே சிவகுமாருக்கு எரிச்சலாக இருந்தது. சென்ற இரண்டு வருடங்களாக அவன் டாக்டர் பட்டம் பெற்றதிலிருந்து ஓய்வு கிடைப்பதே அவனுக்கு அரிதாகி விட்டது. பேசாமல் கண்களை மூடியபடி அவன் அசையாமல் இருப்பதைக் கவனித்த அவன் தாய் தானே சென்று டெலிபோனை எடுத்து கேட்டாள். கேட்டு முடிந்ததும் ரிஸீவரை வைத்த அவள்,

"குமார், யாரோ வெங்கு முதலியாராம், திடீரென்று மயக்கமாகி தன் அறையில் விழுந்து விட்டாராம். அவர் பெண் உன்னை உடனே வரச்சொல்கிருள். போகிருயா?" என்று கேட்டாள்.

"சாதாரண மயக்கம் தானே! எல்லாம் தானுக சரியாய்ப் போயிடும். என்னுல் இனிமேல் ஓரடி கூட நகர முடியாது. இப்போது என்னைக் கவனிக்கவே ஒரு டாக்டர் வேண்டும்" என்று சலிப்போடு கூறிய சிவகுமார் தலையைத் திருப்பிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான்.

மகனின் பிடிவாத குணத்தை அறிந்த தாய் ஒன்றும் கூருமல் போய் விட்டாள். அவள் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் மறுபடியும் டெலிபோன் மணி அடித்தது. சிரமப்பட்டு எழுந்து சென்று ரிஸீவரைக் கையிலெடுத்தான் சிவகுமார்.

"ஹலோ! டாக்டர்தானே பேசுவது?"

"ஆமாம், என்ன விஷயம்?"

"அப்பாவுக்கு மயக்கம் தெளியவேயில்லை. தயவு செய்து வருகிறீர்களா டாக்டர்?"

இனிமையான பெண் குரலிலிருந்து தன் தாய் சற்று முன் கூறிய பெண்தான் என்று ஊகித்தான் அவன்.

"சரி வருகிறேன்" என்று கூறி ரிஸீவரை வைத்த அவன் தோல் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

x x

கல்லூரி படிப்பு படித்திருந் தாலும் ஆபத்து என்றதும் பதறிப் போய் விட்டாள் வாஸந்தி. அதுவும் அவளுடைய உயிருக்கு உயிரான தந்தையே மயக்கமாகி விழுந்திருப்பதைக் கண்டதும் என்ன செய்வ தென்றே அவளுக்குத் தெரிய வில்லை. தனக்குத் தெரிந்த முத லுதவிகளைச் செய்தும் மயக்கம் தெளியாததால் டாக்டருக்கு போன் செய்துவிட்டு அவர் அருகிலேயே கவலையுடன் அமர்ந்திருந்த அவள் தெருவில் கார் நிற்கும் சப்தம் கேட்கவே பரபரப்புடன் எழுந்தாள். வேலைக்காரி பொன்னி அவசர மாக மாடிக்கு வந்து, "டாக்டர் வந்துட்டாரம்மா" என்றாள். 'டக் டக்' என்று பூட்ஸ் சப்திக்க உள்ளே நுழைந்த டாக்டர் சிவ குமாரைக் கண்டதும் வாஸந்தி யின் கண்கள் ஒரு கனம் இமைக்க மறந்தன. பெயரும் புகழும் பெற்றிருந்த சிவகுமார் குறைந்தது முப்பது வயதிற்கு மேற்பட்ட மனிதராகத்தான் இருக்கக் கூடும் என்று எண் ணியிருந்த அவளுக்கு எதிரே சுருள் கிராப்பும் அழகு ததும் பும் முகமும் உடைய இளம் வாலிபனாக நின்ற சிவகுமா ரைக் கண்டதும் ஆச்சரியமாக இருந்தது.

முதலியாரைப் பரிசோதித்து தான் கொண்டு வந்த மருந்தை ஊசி மூலம் அவர் உடலில் ஏற் றிய பின்தான் அவன் தலை நிமிர்ந்தான்.

"மயக்க மடைந்து எவ்வளவு நேரமிருக்கும்?" என்று வாஸந் தியைக் கேட்டான்.

வாஸந்திக்கு துக்கம் நெஞ்சை அடைக்க மெல்லிய குரலில் நடந்ததைக் கூறினாள்

"சுமார் அரை மணிக்கு முன்பு, நான் என் அறையில் எழுதிக் கொண்டிருந்தேன். அப்போது நடையில் செருப்புச் சப்தம் கேட்கவே அப்பா வந்து விட்டிருப்பார் என்று அறிந் தேன். ஆனால் அரைகுறையாக எழுதிக் கொண்டிருந்ததால் முடித்து விட்டுத் தான் போவோம் என்ற எண்ணத்து டன் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். வேலைக் காரி உள்ளே ஏதோ வேலை யாக இருந்தாள். நான் எழுதி முடித்து விட்டு வந்த பொழுது வீடு ஒரே நிசப்தமாக இருந்தது. மாடிக்கு வந்து பார்த்தபோது அப்பா மயக்கமாக இங்கே விழுந்திருந்தார். அப்போதுதான் உங்களுக்கு போன் செய்தேன். தாங்கள் இல்லையென்று கூறி விட்டார்கள். சிறிது நேரம் சென்ற பிறகும் அவர் எழுந்தி ருக்காமல் போகவே மறுபடியும் போன் செய்தேன். நல்லகாலம் நீங்கள் வந்து விட்டீர்கள்" என்று கூறி முடித்த வாஸந்தி, "கவலையொன்றும் இல்லையே டாக்டர்?" என்று கேட்டாள் கவலையுடன்.

"இருதயத்திற்கு அதிர்ச்சி சம்பவம் நடந்திருக்கிறது. என்று தோன்றுகிறது. உங்க ளுக்குத் தெரிந்து என்ன நடந் திருக்கக் கூடும் என்று யூகிக்க முடிகிறதா?" என்று கேட்டான் அவன். சிறிது நேரம் யோசித்த அவள் "இன்று 'செக்' ஒன்றை

மாற்றுவதற்காக பஸ்ஸில் சென்றிருந்தார். மாலைதான் வீடுதிரும்பினார். அவர் மாற்றினாரா இல்லையா என்று எனக்கு விவரம் தெரியாது. அதைத் தவிர அவர் வெளியே எங்கேயும் போகவில்லை,” என்று அவள் கூறி முடிப்பதற்குள் முதலியார் புரண்டு படுத்தார். அவர் அருகில் சென்று நாடியைப் பார்க்க கையை எடுத்தான் சிவகுமார். அவன் பிடிக்க வந்த கரத்தை முரட்டுத் தனமாக தள்ளிவிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார் முதலியார். சுற்றுமுற்றும் நோக்கிய அவர் கண்கள் சிவகுமாரைக் கண்டதும் இமைக்காமல் அப்படியே நிலைத்தது.

“அடேய் ... யாருடா அது! பாக்கெட் காலி! மறுபடியும் நீயுமா கைபோட்டு ஏமாறப் போறே?... அஹ் ஹா......... எதுக்கு இப்படி முழிக்கறே ?”

சிவகுமார் திடுக்கிட்டான். வாஸந்தியின் உடல் நடுங்கியது. அவருக்கு சித்தம் கலங்கிவிட்டது. சிவகுமார் சட்டென்று விலகி நின்று கொண்டான். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவன் பெற்றிருந்த இரண்டு வருட அனுபவத்தில் இது போன்ற ‘கேஸ்’களை அவன் பார்த்ததில்லை.

திகைத்து நின்றிருந்த சிவகுமாரின் பார்வையும் வாஸந்தியின் பார்வையும் சட்டென்று அவருடைய ‘ஷர்ட்’ பாக்கெட்டின் மேல் வந்து நின்றது. அங்கே.........

‘பாக்கெட்’ தைக்கப் பட்டிருந்த இடம் கத்தரிக்கப்பட்டு

தாகூர் பொன்மொழிகள்.

1 படிக்கத் தகுந்த புத்தகங்களைவிட படிக்கத் தகாத நூல்களே உலகத்தில் ஏராளம்.

x x x

2 ஆற்றாமை என்னும் பகையைப் பாராட்டி வளர்ப்பதுதான் அநாகரிகத்தின் முதல் அறிகுறி.

x x x

3 மணப்பந்தலிலே வேம்பாக இருப்பவள் மணல் வெளியிலே கரும்பாகி விடுகிறாள்.

x x x

4 வாழ்வு ஒரு கூட்டுக் கலவை. உண்மையும், கற்பனையும், இல்லாததும் பொல்லாததும் சேர்ந்ததோர் விசித்திரக்கூட்டு.

x x x

5 இந்தச் சிறுமலரை பறித்தெடுத்துக்கொள்! தாமதியாதே. அம்மலர் வாடி மண்ணில் விழுந்து மறையும் என்று அஞ்சுகிறேன்.

x x x

6 சுதந்திரமே எனது தேவை. ஆனால் அதை நம்பியிருக்க வெட்கமடைகிறேன்.

x x x

7 அழகு, அழகு என்று அங்கலாய்க்கிறோம்; ரசித்துப் பேசுகிறோம். ஆனால் அழகுள்ளவை, நாம் எண்ணுவது போல் அவ்வளவு பிரயோஜனப்படுவதில்லை. உதாரணம் வேணடுமா? மயிலையும் தாமரையையும் பாருங்கள்!

கிழிந்து தொங்கிக் கொண்டிருந் தது. அதைப் பார்த்த வுடனே இருவருக்கும் விஷயம் புரிந்துவிட்டது. பணத்தின்மேல் அதிக அக்கறையும் ஜாக்கிரதை யும் உடைய அவர் ஏதோ அதி கத் தொகையான பணத்தை இழந்துவிட்டுத்தான் அந்த பரி தாபக் கோலத்தில் நிற்கிருர் என்று புரிய வெகு நேரம் ஆக வில்லை.

'அப்பா' என்று கண்ணீரு டன் நெஞ்சை அடைக்கக் கூறி தன் கைகளைப் பிடித்துக் கொண்ட மகளை ஏதோ ஓர் சாதாரண பொருளைப் பார்ப் பதுபோல் பார்த்தார் முதலியார். ஒரு நிமிஷம் அப்படியே பார்த் துக் கொண்டிருந்த அவர் மயக்க மாகி கீழே சாய்ந்தார். சட் டென்று தாங்கிக் கொண்டாள் மகள். சிவகுமாரும் உதவி செய்து அவரைப் படுக்கையில் படுக்க வைத்தான். 'இன்ஜெக் ஷன்' ஒன்றை செய்துவிட்டு வீட்டிற்கு புறப்பட்டான் அவன். ஏதோ சிந்தனையுடனே ஒவ் வொரு படியும் கடந்து இறங் கிக் கொண்டிருந்த அவனைத் தொடர்ந்து வாஸந்தியும் இறங் கினுள்.

"டாக்டர், அப்பாவுக்கு உடல் நலம் அடைந்து விடுமா அல்லது இப்படியே இருந்து

அவர்களுக்குப் பிடித்தது !

டாக்டர் சாமுவேல் ஜான்ஸனுக்கு அறிஞர்களுடன் கூடி நன்ருக உணவருந்திவிட்டு, தேனீர் குடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருப்பது என்ருல் மிகவும் பிடிக்குமாம், ஒருநாள் அவர் ஒரே சமயத்தில் 25 கோப்பைகள் தேநீர் குடித்தா ராம் !

எண்பது வயதைத் தாண்டி விட்ட மாஜி இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்ட்டன் சர்ச்சிலுக்கு எப்போதும் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருப்பது ரொம்பப் பிடிக்குமாம் ! குளிர்கால மாணுலும் சரி கோடை காலமாக இருந்தாலும் சரி, சுருட்டு வாயிலே இருந்து கொண்டிருக்க வேண்டுமாம் !

ஆங்கிலக் கவிஞர் வில்லியம் வோர்ட்ஸ் வொர்த்துக்கு எப்போதும் தனிமையாக நாட்டுப்புறங்களிலே—சிறப்பாக ஏரிக்கரைகளிலே சுற்றிக் கொண்டிருப்பதுதான் பிடிக்கு மாம் ! அதனுலேயே அவர் "ஏரிக்கவிஞர்" என்று பெயர் பெற்றிருக்கிருர்.

சிந்தனைச் சிற்பி சாக்ரடீசுக்கு சீடர்களுக்கு கேள்வி எழுப்பி பதிலுரைத்து அறிவூட்டும் போது நடந்து கொண்டி ருப்பது தான் பிடிக்குமாம் ! உட்கார்ந்து சொல்லுங்கள் என் ருல் "உடலிலே உரமில்லாதவன் செய்யும் காரியம் அது" என்பாராம்!

கட்டிட வேலைகளுக்கெல்லாம்
திட்டமாக குறிக்க வேண்டியது..



சூலம் மார்க்
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட்
ஸிமெண்ட்

திடத்திலும், தரத்திலும், தேர்ந்தது

சர்க்கார் சோதனைச்சாலையின் நற்சாட்சி பத்திரம் பெற்றது

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்
தொழிற்சாலை: சங்கர் நகர், திருநெல்வேலி ஜில்லா

"புரு" மார்க் தீப்பெட்டிகள்.

வெண்மையான குச்சிகள் மழை காலத்திற்கும் காற்றுக்கும் உத்திரவாதமுள்ளன.



விற்பனை டிப்போக்கள் :

கோயம்புத்தூர், கடலூர், மதுரை, நாகப்பட்டினம், பாலக்காடு, பன்ருட்டி, பய்யனூர், திருச்சி, திருவாரூர், விழுப்புரம்.

தந்தி : 'LOTUS'

தி லோட்டஸ் மாட்ச் ஒர்க்ஸ்,

த. பெ. நெ. 52 : : சிவகாசி.

விடுமா? டாக்டர்?'' என்று கூறிய வாஸந்தி கண்களில் கசிந்த நீரை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். சிவகுமார் தயங்கி நின்ருன். "என்னல் முடிந்தவரை பார்க்கிறேன். சிகிச்சையினுல் மூளையை சரிசெய்ய முடியாது! சந்தர்ப்பம் அதற்கு உதவி செய்ய வேண்டும்! உயிருக்கொன்றும் ஆபத்தில்லை...... ஆனுல் அவரை ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ளும் பொறுப்பு உன்னுடையது. நாளை காலை வந்து பார்க்கிறேன். மயக்கம் இன்னும் சிறிது நேரத்தில் தெளிந்துவிடும். வருகிறேன்'' என்று கூறிய அவன் காரில் ஏறி அமர்ந்து கொண்டான். கார் அங்கிருந்து நகர்ந்தது.

x x

காரைவிட்டு இறங்கி வீட்டினுள் நுழைந்து சாய்வு நாற்காலியில் 'உஸ் அப்பாடா' என்று சாய்ந்த போதுதான் சிவகுமாருக்கு சட்டென்று ஒன்று நினைவுக்கு வந்தது. பரபரப்புடன் எழுந்து சென்று மாலை உலாவச் செல்லும் போது அணிந்திருந்த ஷர்ட் பாக்கெட்டில் கைவிட்டுத் துழாவினுன். அவன் தேடியது தட்டுப் பட்டது. அதை வெளியே எடுத்து விளக்கருகில் வந்து பார்த்தான். அது ஒரு கவர்! ஆனுல் கனமாக இருந்தது. கவரின் மேல் விலாசமோ முத்திரையோ எதுவும் இருக்கவில்லை. அவன் மாலை உலாவிவிட்டு வீடு திரும்பும் போது நன்ருக இருட்டி விட்டு இருந்தது. வெள்ளிக்கிழமை விடுமுறையை முன்னிட்டு கடைகளெதுவும் இருக்கவில்லை. ஆங்காங்கே எரியும் தெரு மின்சார விளக்கைத் தவிர வேறு வெளிச்சம் இல்லாமல் இருந்தது. சிந்தித்தபடியே நடந்து வந்து கொண்டிருந்த அவன் காலில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. காகிதக் கவர் போல் இருந்தது. அதையெடுத்து பாக்கெட்டில் செருகிக் கொண்டான், வீட்டிற்கு வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன். ஆனுல் வீட்டிற்கு வந்தபின் அதை மறந்து விட்டான். அதுவுமின்றி டெலிபோனில் அழைப்பு வேறு வந்துவிட்டது.

கவரில் கைவிட்டு அதில் கனமாக தட்டுப்பட்ட ஒரு காகிதத்தை எடுத்துப் பிரித்தான் சிவகுமார். அதனுள் ஒரு கட்டு நூறு ரூபாய் நோட்டுகள்! அவைகளை எண்ணினுன். சரியாக இருபது நோட்டுகள் இருந்தன.

பணத்தைக் கண்டதும் வெங்கு முதலியாரின் நினைவு தான் வந்தது அவனுக்கு. அவர் பணத்தை ஜேப்படிக்காரனிடம் அல்லவா தொலைத்திருக்கிருர்!......இந்தப் பணத்தைப் பார்த்தால் தவறி விழுந்துவிட்டிருக்கும் என்றல்லவா யூகிக்க வேண்டியிருக்கிறது என்று யோசித்தான். பாவம்! வெங்கு முதலியாரைப் போல் எந்த கனவான் இந்தப் பணத்தை இழந்துவிட்டு வருந்துகிருனே என்று கவலைப் பட்டான்.

அவனுக்கொரு யோசனை தோன்றியது. அது எவருடையதாக இருந்தாலும் சமயத்திற்கு உதவும்படி கிடைத்திருக்கிறது. அதை உபயோகித்துக் கொண்டபின் அதற்கு உரியவரைத் தேடி ஒப்படைத்து

விடலாம் என்று ஒரு தீர்மானத்துடன் அதை ஜாக்கிரதையாக எடுத்து வைத்துக் கொண்டான்.

மறுநாள் காலை மணி ஏழு அடித்ததும் அந்தக் கவரிலுள்ள பணத்தை அப்படியே எடுத்து பாக்கெட்டில் வைத்துக் கொண்டு காரில் ஏறிக் கொண்டான். கார் லட்சுமண முதலியாரின் வீட்டின் முன் வந்து நின்றது. தாளிடப்பட்டிருந்த கதவை லேசாகத் தட்டினான் சிவகுமார்.

கதவு திறந்தது. சோகமும் கவலையுமே உருவெடுத்தாற் போல் நின்றாள் வாஸந்தி. அவனைக் கண்டதும் அவள் முகத்தில் ஓரளவு மகிழ்ச்சி இழையோடியது.

"வாருங்கள்" என்று வரவேற்று மாடிக்கு அழைத்துச் செல்லாமல் அங்கேயே ஒரு நாற்காலியில் அமரச் செய்தாள். தானும் எதிரிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"டாக்டர், அப்பாவுக்கு உடல் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்துப்போகத்தானே வந்திருக்கிறீர்கள்! ....அவர் அப்படியேத் தான் அடிக்கடி பேசிக் கொண்டும் திட்டிக் கொண்டுமிருக்கிறார். நீங்கள் போனால் ஒரு சமயம் அடித்து விடவும் கூடும். அதனால்தான் உங்களை பார்க்கச் செல்லும்படி கூறவில்லை," என்றாள் அவள்.

"வருந்த வேண்டாம்! எனக்கு நம்பிக்கையூட்டும் ஒரு தீர்மானத்துடன் தான் வந்திருக்கிறேன்."

"பணத்தை இழந்து விட்டதால் உன் அப்பாவுக்கு சித்தம் கலங்கியிருக்கிறது. அதனால் இந்தப் பணத்தை கவருடன் உன் தந்தை தூங்கும்போது மேஜையின் மேலோ வேறு ஓர் இடத்திலோ சட்டென்று அவர் கண்களுக்குத் தெரியும் படி வைக்க வேண்டும். பிறகு நடப்பதைப் பார்ப்போம். உன் அதிர்ஷ்டம் அவர் சரியாகி விடக்கூடும் என்று எனக்கு நம்பிக்கை யிருக்கிறது." என்று கூறிய அவன் கவரை அவளிடம் கொடுத்தான். தயக்கத்துடன் அதை வாங்கிக்கொண்ட அவள் லேசாகச் சிரித்தாள்.

"அப்படிச் சொல்லாதீர்கள்! எனக்கு அதிர்ஷ்டம் என்று ஒன்று இருக்கிறதா என்ன...? அப்படி யிருந்தால் சிறு வயதிலேயே என் தாயை இழந்திருப்பேனா ?......தந்தை சித்தம் கலங்கி தவிப்பதை பார்த்துக் கொண்டிருப்பேனா?...வேண்டுமானால் உங்கள் கைராசி அவர் சரியாகி விடக்கூடும் என்று திருத்திச் சொல்லுங்கள்."

கவரைப் பிரித்து நோட்டுகளை எண்ணிய அவள் ஆச்சரியத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"இதென்ன! பணமென்றதும் கொஞ்சமாக இருக்குமென்று எண்ணினேன். இரண்டாயிரமல்லவா இருக்கிறது! இதை எப்படி திரும்பப் பெற்றுக் கொள்வதாக உத்தேசம்?" என்றாள் திகைப்போடு.

"எல்லாம் வழியிருக்கிறது. நீ எடுத்துவை வாஸந்தி! நான் கூறியதை மட்டும் நினைவாகச் செய்! நான் மாலை வருகிறேன்" என்று கூறிய அவன் வீட்டிற்கு புறப்பட்டான். ரூபாய் நோட்டுகளையே பார்த்துக்கொண்டு திகைத்து நின்றாள் வாஸந்தி.

என்ற கவலையாக வும் இருக்கக் கூடும்!' என்று ஏதேதோ சிந்தனை யில் ஆழ்ந்திருந்த சிவகுமார் தனக் குத்தானேகேள்வி யும் பதிலும் கூறிக் கொண்டான். 'நல்ல நாகரீகம் வந்தது! அவள் கழுத்தில் ஓர் அழ கான முத்துமாலை யும் கைகளிலே இரண்டிரண்டு முத்து வளையல்க ளும் அணிந்து கொண்டால் அவ ளுக்கு எவ்வளவு அழகாக இருக்கும் கைகளில் ஒன்று மே அணியாமல் இருப்பதுகூட ஒரு புதுமையா? 'வாஸ ந்தி' என்ன இனி மையான பெயர்! என்று கற்பனை யிலே ஆழ்ந்திருந்த அவனுக்கு தன்னு டைய எண்ணங் களை நினைத்துப் பார்த்த போது அவனுக்கே வேடி க்கையாய் இருந் தது.

"கிணிங் ... ... கிணிங்..."

மேஜை யருகில் சென்று போனை கையிலெடுத்தான்.

'அவள் முகம் தான் என்ன அழகு!......ஆனல் அந்த அழகை விளங்கச் செய்ய எந்தவிதமான அலங்காரமும் செய்துக் கொள்வ தில்லை போலிருக்கிறதே! ஒருக்கால் தந்தை அந்த நிலையில் இருக்கிருரே

"ஹல்லோ! டாக்டர்தானே!... அப்பாவுக்கு பூரணமாக குண மடைந்து விட்டது என்று தோன்று கிறது. உங்கள் திட்டம் பிரமாதம்! என் நன்றி"...என்று மகிழ்ச்சியால் தடுமாறினுள் வாஸந்தி, போனில்.

"இது நான் எதிர்ப்பார்த்தது தான்! இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?"

"நேற்றெல்லாம் ஒன்றும் சாப்பிடாததால் சாப்பிடும்படி கூறினேன். சரியென்று கீழே சமையலறையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். இதுவரை எப்படியிருந்தார் என்று அவருக்குத் தெரியவில்லை. நானும் முன்ஜாக்கிரதையாக ஒன்றும் நடவாததுபோல் சும்மா யிருக்கிறேன்."

"சரி. நான் அவரைப் பார்க்க இன்னும் சிறிது நேரத்தில் வருகிறேன். மெதுவாக விஷயத்தைக் கூறுவேன். அதிருக்கட்டும் வாஸந்தி, உனக்கு இன்று மற்றோர் நல்ல செய்தி சொல்லப் போகிறேன்!"

"என்னவோ?...அது."

"உம்... அதை இப்போதே சொல்வதற்கில்லை..."

"இல்லை. தயவு செய்து சொல்லுங்கள்"

'முடியவே முடியாது'

'டக்' என்று ரிஸீவரை வைத்து விட்டான் அவன். மாலை ஐந்து மணிக்கு தான் அவனுக்கு ஓய்வு கிடைத்தது. காரை எடுத்துக் கொண்டு முதலியாரின் வீட்டையடைந்தான்.

"நமஸ்காரம்" என்று கூறியபடி உள்ளே நுழைந்த வாலிபனை ஏற இறங்கப் பார்த்தார் முதலியார்.

"வாருங்கள், நீங்கள் யாரென்று தெரியவில்லையே!" என்று கேட்டார் அவர்.

அவர் அப்படி தெளிவாகப் பேசிய போது நேற்றுப் பார்த்த முதலியாரா என்று அவனுக்கே சந்தேகமாக இருந்தது. எதிரில் இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டான் அவன்.

"உங்களுக்கு மிகவும் ஆச்சரியமளிக்கும் விஷயத்தைக் கூறப்போகிறேன்" என்று பீடிகை போட்டு விட்டு நடந்ததெல்லாவற்றையும் கூறினான் அவன். அவர் முதலில் அவைகளைக் கேட்டு விட்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தார். பிறகு அவர் கூறிய செய்தி அவனைத் திகைக்க வைத்தது.

"டாக்டர், நீங்கள் அளித்த பணம் உண்மையிலேயே என்னுடையது தான். கடவுள் தான் அதை கிடைக்கும்படி செய்திருக்கிறார்."

"என்ன, உங்கள் பணம் ஜேப்படியாக அல்லவா போய் விட்டது!" என்று கேட்டான் அவன் ஆச்சரியத்துடன்.

"சொல்கிறேன் கேளுங்கள் இரண்டாயிரம் ரூபாய் 'செக்கை' நான் மாற்றிக்கொண்டு பஸ்ஸில் ஏறியதும் என்னுடனே ஒரு ஆளும் பஸ்ஸில் ஏறினான். அவன் மேல் எனக்கு சந்தேக மாகிவிட்டது. அவன் அடிக்கடி என் பாக்கெட்டையே கவனிப்பதை நான் பார்த்து விட்டேன். பஸ் புறப்பட இன்னும் சிறிது நேரம் ஆகும் என்று தெரியவே பஸ்ஸை விட்டிறங்கி ஓட்டலுக்கு செல்வது போல் சென்று ஒரு வெள்ளைக் கவரில் பணத்தைப் போட்டு முன் பாக்கெட்டில் சாதா

பெண்களைக் குறை கூறுகிறவர்களில் பெரும்பாலோர் ஒரு பெண்ணை மனதிலே வைத்துக் கொண்டே குறை கூறுகின்றனர்.

—நெமிடி கூர்மன்ட்

x x

முட்டாளின் இதயம் அவனுடைய வாயில் இருக்கிறது. அறிஞனின் வாய் அவனுடைய இதயத்தில் இருக்கிறது.

—டீன் இஞ்ச்

ரண கவர் போல் வைத்துக் கொண்டு பஸ்ஸில் ஏறிக் கொண் டேன். நான் அப்படிச் செய்தது ஒரு விதத்தில் நன்மையை அளித் தது. பஸ்ஸை விட்டு இறங்கும் சமயம் பாக்கெட்டை கத்தரித்து காலி பர்ஸை எடுத்துப் போயிருக்கி ருன், அவன். ஆனல்...'' இந்த இடத்தில் சற்று நிறுத்திவிட்டு நன் ருக யோசித்து விஷயத்தை நினை வுக்கு கொண்டுவர முயன்ருர் அவர்.

"பிறகு என்ன நடந்தது?'' என்று கேட்டான் சிவகுமார் ஆவலு டன். "பஸ் போய்விட்டது என்று எனக்கு அப்போதே தெரியாது. நான் வீட்டை நோக்கி வரும்போது லேசாக இருட்டி விட்டிருந்தது. கடைகளும் இல்லாமல் மின்சார விளக்குகளும் எரியாத நேரம்! வயதாகி விட்டதால் கண்களும் சரி யாகத் தெரியவில்லை. செருப்பு அணிந்திருந்தும் வழியில் கல் ஒன்று காலை தடுக்கி விட்டது. குனிந்து அதை தடவியிருக்கும் போதுதான் அந்தக் கவர் கீழே விழுந்திருக்க வேண்டும். அந்தச் சமயத்தில் பின்னல் லாரி ஒன்றும் வந்து விடவே கவர் விழுந்த சப்தம் கூட கேட்டிருக்க முடியாது. சட்டென்று ஒதுங்க வேண்டி வந்து விட்டது. மாடிக்கு வந்து விளக்கைப் போட்டு பார்த்த போதுதான் இரண்டு பாக்கெட்டும் காலியாக இருப்ப தைப் பார்த்தேன். அதன் பின் என்ன நடந்தது என்பது எனக் குத் தெரியாது. அங்கே தவறி விட்ட கவர்தான் உங்களிடம் கிடைத்திருக்கிறது.'' என்று கூறி நிறுத்தினுர் முதலியார். சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. மறுபடி யும் அவரே ஆரம்பித்தார்:—

"எப்படியோ என் பணம் என் னிடம் வந்து விட்டது. உங்க ளுக்கு என்ன கைம்மாறு செய்தா லும் ஈடாகாது. அப்படி ஒரு கைம்மாறு இருப்பதாகவும் தெரியவில்லை'' என்ருர் அவர்.

சிவகுமார் எதிர்பார்த்த சந்தர்ப்ப மும் அதுதானே!

"அப்படி சொல்லாதீர்கள்! கட் டாயம் இதற்கு ஒரு கைம்மாறு இருக்கிறது!''

"என்னிடம் என்ன இருக்கிறது பணத்தைத் தவிர.''

"பணத்தை அல்ல நான் சொல் வது...''

"என்னிடம் இருந்தால் எதை யும் கொடுப்பதில் விருப்பமே! கேளுங்கள்!''

"உங்களிடம் எனக்கு வேண்டி யது ஒன்று இருக்கிறது!''

அப்போதும் அவருக்குப் புரிந் ததாகத் தெரியவில்லை. சந்தேகத் துடன் அவன் முகத்தை நோக்கி ஞர்.

"உங்கள் மகளைத்தான்'' என்று அவன் கூறி முடிப்பதற்குள் அவர் முகம் சட்டென்று கடுமையாக மாறி யது.''

"என்ன? என்ன?'' என்று கேட்டார் அவர் ஆவேசத்தோடு, அவர் அப்படி கேட்டதும் திடுக் கிட்டு போய் விட்டான் அவன்.

"ஏன் உங்கள் மகளை ...'' என்று அவன் மறுபடியும் கூறுவதற்குள் குறுக்கிட்டார் அவர்.

"இதற்குத் தானு பணமும் சிகிச் சையும்! சே, இவ்வளவு மோச மானவனு நீ! அந்த எண்ணத்து டன் மறுபடியம் என் வீட்டில் கால் வைக்காதே. போ வெளியே......''

மறுபடியும் அவருக்கு சித்தம் கலங்கி விட்டதோ என்று எண்ணி ஞன் அவன். அவர் கேட்ட கேள்விகள் வேறு அவனுக்கு ஆத் திரத்தை அளித்தன.

"அவன் கோபத்துடன் படிகளை கடந்து இறங்கினுன். கடைசி படி இறங்கியதும் அவனை மேலே செல்ல வொட்டாமல் தடுத்தது அங்கே நின்ற வாஸந்தியின் கலங் கிய விழிகள்.

"தயைசெய்து கோபம் கொள்ள வேண்டாம், விஷயம் தெரியாமல்''

சிவகுமார் திரும்பிகூட பாராமல்

வேகமாக தெருவிற்கு வந்தான்.

"தயைசெய்து நில்லுங்கள். கோபம் வேண்டாம்! விஷயத்தை கூறுவதற்குள்......"

"எதுவும் என்னிடம் கூற வேண்டாம்!" என்று கோபத்துடன் கூறி காரினுள் ஏறி அமர்தான். அவனுடைய மனத்தை விட கார் வேகமாக நகர்ந்து விட்டது.

x x

மறுநாள் காலை மணி ஒன்பதிருக்கும் சற்று ஓய்வாக இருக்கவே புத்தகம் ஒன்றை கையில் எடுத்தான் சிவகுமார்.

டெலிபோன் மணி அடித்தது! ரிஸீவரை எடுத்தான். வாஸந்தி தான் பேசினுள்.

"தயைசெய்து கோபிக்காமல் எல்லாவற்றையும் கேளுங்கள். அப்பா வெளியெ போயிருக்கிருர். அதனுல் அதற்குள் எல்லாவற்றையும் கூற விரும்புகிறேன். நேற்று உங்கள் சம்பாஷணை முழுவதும் கேட்டேன். உங்களுக்கு எப்படி கூறுவது என்றுதான் தெரியவில்லை. நான்...நான்..." என்று தடுமாறினுள் வாஸந்தி.

"சொல்வதைச் சீக்கிரம் சொல்! எனக்கு வேலையிருக்கிறது!"

"நான்......ஒரு விதவை!"

"என்ன! என்ன!" ரிஸீவர் நழுவிவிடாமல் கெட்டியாக அதைப் பிடித்துக் கொண்டான் அவன்.

"ஆம்! நான் மணமான சில மாதங்களுக் கெல்லாம் கணவனை இழந்த துர்பாக்கியசாலி! படிப்பும் தற்கால நாகரீகங்களும் என் நிலையை மற்றவர்களுக்குத் தெரியாமல் செய்துவிடுகிறது! அதனுல் தான் நேற்று நீங்கள் அப்படி கேட்டதும் அப்பாவுக்கு அதிகமான கோபம் வந்துவிட்டது. ஆனுல்...

அந்த கோபத்தையெல்லாம் போக்கி விடும்படியாக அவருக்கு வேறு ஒரு விஷயத்தைக் கூறியிருக்கிறேன். பத்துமணிக்குமேல் அவர் உங்களைப் பார்க்க வருவார்.

எனக்கு என்னைவிட இரண்டு வயது சிறிய ஒரு சகோதரியும் இருக்கிருள். அவள் சென்னை கலாசாலை யொன்றில் இண்டர் படித்துக்கொண்டு இருக்கிருள். "அவளை சென்ற லீவிற்கு இங்கு வந்தபோது நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்! அவளைத்தான் நீங்கள் மனத்தில் கொண்டு கேட்டீர்கள்" என்று கூறி அவரை சரிசெய்து விட்டேன். இதைக் கேட்ட பின் அவர் உங்களை மரியாதைக் குறைவாக பேசி அனுப்பிவிட்டதற்கு மிகவும் வருந்தினுர்.

ஏன் டாக்டர் இப்போது எல்லாம் சரிதானே?"

"உம்...மைத்துனியின் பேச்சிற்கு இப்போதிருந்தே மறுப்பு சொல்லலாமா? நீ கூறினுல் சரிதான்!"

"அப்படி சொல்லி விடாதீர்கள்! என் தங்கை சுகந்தி எவ்வளவு அழகு என்று உங்களுக்குத் தெரியாது. இதோ லீவும் வந்துவிட்டது இங்கே வருவாள். அப்போது நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்!"

"ஆமாம்! அவள் பெயர் என்னவென்று கூறினுய்? சரியாக கேட்கவில்லை!" என்று கேட்டான் அவன்.

"சுகந்தி!" என்று அவள் மறுபடியும் கூறியதை வாய்விட்டு "சுகந்தி" என்று பாடம் செய்த அவனது பேச்சை மறைவிலிருந்து கேட்ட அவன் தாய் அங்கு வந்தாள்.

"அது யாரப்பா சுகந்தி?" என்று கேட்டாள் அவள்.

"எல்லாம் வரப்போகும் உன் மருமகள் தான்" என்று அவன் நினைவின்றி ரிஸீவரை வைத்துக் கொண்டே தாய்க்கு அளித்த பதிலை போனில் கேட்ட வாஸந்தி மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள்.

குறைந்த விலையில்

சிறந்த பாத்திரங்கள்

போன் : 151 தந்தி : VESSELS.

பெ.சி.சி. சுந்தரம்மாள் & கோ

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக்கடைதெரு, மதுரை.

தேவையான

எவர்சில்வர் பாத்திரம் ★ பித்தளைப்பாத்திரம்

★ செம்புப் பாத்திரம்

★ பித்தளை, செம்புத் தகடுகள்

சகாயமான விலையில் கிடைக்கும்.

ஜாப் வேலைகள், புத்தகங்கள் (பள்ளிப் புத்தகங்களும்), பத்திரிகைகள், மற்றும் எல்லா விதமான அச்சுவேலைகளும் குறித்த நேரத்தில், குறைந்த சார்ஜில், நேர்த்தியாகச் செய்து கொடுக்கிறோம்.

1958-ம் வருட மூவர்ணப்படக் காலண்டர்கள், மாதாந்திர காலண்டர்கள், தினசரி காலண்டர்கள் ஆகியவை ஆர்டர்கள் பேரில் செய்து கொடுக்கப்படும். ஆபிஸ் காலண்டர்கள் விலைக்கும் கிடைக்கும்.

விபரங்களுக்கு :

போன் : 85778

மோகன் ராம் பிரஸ்,

283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு,

சென்னை—5.

இம்பீரியல்

எலக்டிரிக் & ரேடியோ கம்பெனி

G. E. C. ரேடியோ டீலர்ஸ்

&

"IERCO" ஆம்பிளிபயர் தயாரிப்பாளர்கள்,

164, கீழவெளி வீதி, **மதுரை — விருதுநகர்.**

முத்து வீராயிப் பாட்டு

ச. ம. ச. யோகியார்

சென்ற இதழ் தொடர்ச்சி......

'நடையில் நாக்காலி போட்டுக்
கொண்டு காம
நாடக மாடிக் களிக்காமல்
சடை வளர்த்ததும் சங்யாசி
யானதும்
சம்மதமோ முத்து வீராயி'

என்று தன் விரதப் பெருமை யையும், பிரிவாற்ருமைச் சிறு மையையும் விளக்குகின்ருன். இன்று அவன் காமம் மீறிப் போகிறது.

'தென்னை மரத்துப் பாளைக்குள்ளே
ரெண்டு
தேரை இருந்து முழிக்குதுபார்
தென்னல் அடிக்குது என்னை
மயக்குது
தேன்மொழியே முத்து வீராயி'

எனத் தென்னல் அடிக்கிற தென்றும், தன்னை மயக்குகிற தென்றும், தென்னங்கள் ளுண்ட தேரைகள் போல் தன் கண்கள் தேம்பித் தியங்குகின் றன என்றும், இம் மயக்கந்தீர அவளது தேன்மொழிச் செவ்வி தழ்கள் வேண்டு மென்றும் வெறித்துரைக்கிருன். ஆனல் அவளோ தன் தேசிய விர தத்தை மறக்க வில்லை.

'தென்னை மரத்திலே பாளை
கட்டி—நல்ல
தெய்வ லோகத்திலே கள்ளிறக்கி
அள்ளிய.மிர்தம் குடித்திடு
வோம் தேவி
ஆணையைப் பாடி மகிழ்ந்
திடுவோம்'

என, அவர்கள் பருக வேண்டி யது காமக்கள் அல்லவென் றும், உடலாகிய தென்னை மரத் தில் ஊறிய உயிராகிய தெய் வக்கள் என்றும், அது அமிர்த மென்றும், தேசத் தேவியின் ஆணை என்றும் அவனுக்கு நினை வுறுத்துகின்ருள். அவனே ?

'பாக்கு மரத்துப் பாளைக்குள்ளே
ரெண்டு
பட்சி யிருந்து முழிக்குது பார்
பட்சி பறக்குது பாக்கும் துவக்குது
பைங்கிளியே முத்து வீராயி'

என்று மறுபடியும் காமாவேசம் காட்டுகிருன். பாக்குமரப் பாளை மதுவுண்ட அவளது பட்சி(வண்டு)க் கண்கள் வேறெங்கோ பறக்கின்றன; எனவே பாக்கு துவக்கின்றது. இன்னும் தயவில்லையா என்று இரங்குகின்ருன். அவளோ—?

'பாக்குமரத்திலே பாளைவெட்டி-தேச
பக்தி யென்னுங் கள்ளைத்
தானிறக்கி
மீக்குறும் வெற்றிவிளைத்த
பின்னே-யிரு
மேனியும் கூடி மகிழ்ந்திடுவோம்'

என்று மோஹனப் பேச்சுக்கு ஓரேயடியாக முற்றுப் புள்ளி வைத்து விடுகிருள். இத்துடன் பாட்டில் ஒரு கட்டமும் முடி வடைகிறது. பின் இருவரும் நடந்த சேதிகளைப் பேசுகின்ற னர். அவன் தன்னை ஒரு ஆங்கி ல மாது அணைய வந்ததைக் கூறுகிருன்; அவள் காதலால் அணையவரவில்லை; காமத்தாலு மல்ல. கள்ளமாய் உளவு காணவே பசப்பினுள் போலும்.

'வீதியிலே விளை யாடையிலே—ஒரு
வெத்துச்சுருளி எனக் கண்
டெடுத்தேன்
காதலி போலத் தொரசானி
யெந்தன்
கைப்பிடித்தாள் முத்து வீராயீ'

'அப்புறம்' — என்ருள் வீராயி.

'அப்புறம் என்ன? கையைப் பிடித்தாள், கையைக் கொடுத்தேன்; கடிதத்தை ஒளித்தேன்: கன்னத்தைக் கடித்தாள், காதைக் கடித்தாள்!'

'கடிதம் என்னுயிற்று?'

'கொடுத்தேன்!'

'கொடுத்தாயா?'

'ஆம், கொடுக்கா விட்டால் சும்மா விடுவாளா?'

'சீ! கொடுத்தாய், குடியைக் கெடுத்தாய்!'

'அப்படி ஒண்ணுமில்லே, தயாராயிருந்த பொய்யான ஒரு காதல் கடிதத்தை அவளிடம் நீட்டி மெய்யான கடிதத்தை இதோ?'

'பலே'

என்று வீராயி அதை வாங்கிப் படிக்கிருள். பின்னும் அவன்.

'ஓடையிலே நட மாடையிலே—ஒரு
ஓட்டைக் கரண்டகம் கண்டெடுத்
தேன்
நாடுங் கரண்டியை வேருெரு
லேடியும்
நம்மதென்ருள் முத்து வீராயீ

இவ்வாறு உளவறிய ஒற்றப் பெண்கள் தன்னுடன் உறவாட எண்ணியதையும், பின்னும் ஓரிடத்தில், வெள்ளையன் தன்னைக் கண்டு.

'ஓடாதே ஓடாதே சில்லிக்காதா—
உந்தன்
ஓட்டம் பிடிப்பேண்டா சில்லிக்
காதா'

என்று தன்னைத் துரத்தி வந்ததையும், தான்,

காடாகக் காடாகத் தாண்டு
வண்டா—என்னைக்
கண்டு பிடிப்பாயோ குல்லிக்காதா

என்று தன்னைத் துரத்தி வந்ததையும்,

மருதெப் பட்டண வீதியிலே—
வெள்ளை
மாப்பிள்ளையோடு நீ போகையிலே
குருதெக் கோபுர வாசலிலே உந்தன்
கொண்டை கண்டேன் முத்து
வீராயீ,



என்று தன்னை மயக்கி ரகசியம் அறிய வந்த ஆங்கிலப் பெண்டுகளைப்போல் ஒரு வெள்ளைக்கார மாப்பிள்ளையோடு வீராயி சென்ற விநோதத்தையும், பின்

அவதூறு பேசாதே; அதற்கு செவி கொடாதே; அதைப்பற்றி மனத்தினுல் சிந்திக்காதே.

x x x

அனுபவம் ஒரு பேராசிரியன். இத்தகைய பெரிய ஆசானையும் சில சமயங்களில் நாம் அலட்சியம் செய்து விடுகிறோம்.

x x x

தோல்வியைக் கண்டு கலங்குவதில்லை என்ற உறுதி பூண்டவனுக்கு அது ஏற்படாமலேயே போகலாம்.

— சிங்செள.

வேடிக்கையாக அவளது பகல் வேஷப் படாடோபங்களைப் பாராட்டிக் கேலியாக

'குங்குமந் தன்னைச் சுமந்திட்ட மங்
கைதன்
குணத்தைக் கண்டு கொள்ளத்
தரமோ
எங்கணும் சீவிச் சிணுக்கிச்
சிமிட்டுருய்
ஏற்காதடீ முத்து வீராயீ
பெண்டுகள் பூத்தேடி வைக்க
வேணும் வைத்தால்
பிறரறியா திருக்க வேணும்
கொண்டைமேல் கோபுரம் வைத்
தால் வேசியென்று
கூறுவாரே முத்து வீராயீ'
'தன் னடி பார்த்து நடப்பதே
யாவர்க்கும்
சற்குணமா மென்று சொல்வாங்க
அன்ன நடையுடன் முன்னும்
பின்னும் பார்ப்ப
தழகல்ல முத்து வீராயீ.'

என்று கிண்டல் செய்து, சேதி கேட்கிருன்.

'குத்தாலம் போன கொண்டைக்
காரீ வேட்டு
மத்தாளம் வாங்கி நீ வந்தாயோ
சித்தம் தெளியவே கும்பகோணத்
திலே
சேதியைச் சொல் முத்து வீராயீ'
வல்லத்துக் கச்சேரி வடக்காலே
குட்டி
வங்காணக் கச்சேரித் தெற்காலே
எல்லைக்குட் சாடிய மங்கமாரி துரை
எப்போவரான் முத்து வீராயீ'

எனச் சேதிகளைக் கேட்டு, அன்று நம்மவர் இருந்த நிலையை

'ஊரான் ஊரான் தோட்டத்திலே
குட்டி
ஒருவன் போட்டது வெள்ளா
ரிக்கா
காசுக் கிரண்டு விக்கச் சொல்லி
காயிதம் போட்டானும் வெள்ளைக்
காரன்'

என நம்மவர் சொத்தைக் கொள்ளை கொள்ள வெள்ளைக்காரக் கும்பினியான் விலை நிர்ணயம் செய்வதையும்,

'வெள்ளெக்காரன் பணம் வெள்ளிப்
பணம்
வேடிக்கை செய்யுதாம் சின்னப்
பணம்
வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்
பட்டே—நாம
வெக்கங் கெட்டோம் முத்து
வீராயீ'

என்று தேசத்ரோகிகளையும் திருச்சிராப்பள்ளியில்,

'கருங் கருங் கருங் கத்தரிக்காய்
களைக்
காம்பு முத்தின வெள்ளரிக்காய்
திருச்சினுப்பள்ளி நரெச்ச கெளவன்
திருவிக் கொட்டுருன் வீராயீ'

என்று கருப்பர்களாகிய நம்மவர்கள் வெளுப்பர்களாகிய வெள்ளையரிடம் திருச்சிராப்பள்ளியில் படும் துயரங்களையும்.

'இராணிமகன் வரக் கேள்விப்
பட்டுத் தஞ்சை
இராசன் வருவானென்
றெண்ணப்பட்டு
திராணி யுள்ளதேசக் கூட்டமெல்லா
மிப்போ
திரண்டுள்ளார் முத்து வீராயீ'

என்று நம்மவரின் தேசபக்தித் திரட்சியையும், பின் ;

'வாடாத பூவே மருக்கொழுந்தே
உந்தன்
வாசல் ரகஸியம் கண்டேன்டீ
தேடாத நாளிலே தேடி வந்தேனடீ
தேன் மொழியே முத்துவீராயீ'

என்று காரியம் முடியுமுன் தான் வரவேண்டி நேர்ந்ததையும், தன் காதலின் பெருமையையும், தம் இருவருக்குமுள்ள நேசத்தின் அருமையையும், தமக்குள்ள உறுதியையும்

'முல்லே அரும்படி நீ எனக்குச்
-சின்ன
மூக்குத்தி நத்தடீ நானுனக்கு
முல்லே அரும்புக்கும் மூக்குத்தி
நத்துக்கும்
மோசமுண்டோ முத்து வீராயீ
சாந்துப்பொட்டடி நீ எனக்கு-நல்ல
சந்தனப் பொட்டடி நானுனக்கு
சாந்துப் பொட்டுக்கும் சந்தனப்
பொட்டுக்கும்
சண்டை யுண்டோ முத்துவீராயீ'

இதிலிருந்து அவள் 'சாந்து'க் கருப் பென்றும், இவன் 'சந்தன'ச் சிவப்பென்றும் விளங்கவில்லேயா, இதையே,

'குந்து மணிக்கருப்பாயி
உனக்கு நான்
குந்துமணிச் சிவப்பாளனடீ'

என்று அவன் வர்ணிக்கிருன்.

'சுந்தர பாண்டியன் தோகையடீ
உன்னைச்
சொக்காக் கவுனுலே பாத்தேனடீ'

என அவளது பரங்கிக் கார வேஷத்தைப் புகழ்ந்து தன் பேச்சை முடிக்கிருன். அவள் தான் போய்வந்த சேதிகளேக் கூறுகிருள்.

'கூந்தல் பெருத்த கும்பகோணம்
மச்சான்
கொண்டை பெருத்தது
புதுக்கோட்டை
வாரி முடித்தது அம்மாப் பேட்டை
இந்த
வஞ்சி நடந்தது தஞ்சாவூர்'

என்று கும்பகோணத்தில் சொருக்குக் கோடாலிக் கொண்டைக் காரியாகவும், புதுக்கோட்டையில் பெரிய குந்தாணிக் கொண்டைக் காரியாகவும் அம்மாப் பேட்டையில் பின்னல் பிச்சோடாக் காரியாகவும், தஞ்சாவூரில் கொடி போலக் குழைந்து நடக்கும் வஞ்சியாகவும் பல மாறு வேஷங்களில் பசப்பியதையும், அப்போது மதுரையில்,

சுமைதாங்கியைப் போல் உழைக்காமல் உழைக்க வேண்டும். வெயிலேயும், குளிரையும் பாராட்டக் கூடாது. எப்போதும் ஆனந்தமாக இருக்க வேண்டும். இம்மூன்றையும் கழுதையிடம் கற்றுக் கொள்.

— சாணக்கியன்

x x

நான் திருமணம் செய்து கொள்ளும் முன்பு குழந்தைகளே எப்படி வளர்ப்பது என்பது பற்றி 6 சித்தாந்தங்கள் என்னிட மிருந்தன. இப்பொழுது அவை என்னிடம் கிடையா. ஆனல் எனக்கு 6 குழந்தைகள் இருக்கின்றன.

— ரோஸ்டர் பிரபு

'என்னடீ யக்கா தெற்கத்தியா
உனக்கு
எந்நேரம் பாத்தாலும் தொள்ளக்
காது ?'

என்று எவளோ கேட்டதை யும், அதற்கு

'தெக்கத்திச் சீமையில் தக்கை
போட்டுச் சேதி
தேடித் திரிந்த சிரிப்பாணி'

எனத் தான் சேதி தேடிய வல்லபத்தையும், அவ்வாறு தேடுங்கால்

'வயிற்றுப் பசிக்குக் கஞ்சியில்லே—
தெரு
வாசக் கிணத்திலே தண்ணி
யில்லே
அறுத்த விரலில் ரத்தமில்லே—
இந்த
அறிவுக் காரிக்கும் வெக்க
மில்லே'

என்று தான் பட்ட பாடுகளையும், தொண்டை நாட்டிலே, சென்னைக் கோட்டையில் வெள்ளையர்கள் குடித்து வெறி கொண்டு களிப்பதை,

'தேங்கா யுருளத்தினை உருள—
அங்கே
தேங்காய்க் கள்ளும் அலைமோத
மாங்காய் திராட்சையுருளுதடீ—
அந்த
மகராஜன் தொண்டமான் சீமை
யிலே'

என்று பலப் பல சேதிகளையும் சொல்லி முடிக்கிருள். பின் இருவரும் மேல் நடக்க வேண்டியதைப்பற்றி யோசிக்கின்றனர். எவனே ஒரு துரைமகன், கும்பினித் தலைவன் வீராயியை நாடி வருவானும்; அவன் நம் நாட்டான் மாதிரி வேஷம் போட்டு வருவானும்; அவனிடம் ஏமாற வேண்டாம் என்பதை

'கந்தக் கோட்டைக்குப் போவா
ராம்—துரை
கம்பி வேட்டி கட்டி வருவாராம்
இடையில் கட்டி மயக்குவாராம்—
துரை
ஏமாந்து போகாதே வீராயீ'

என ஜாக்கிரதைப் படுத்துகிருன். கும்பினியாரின் பொக்கிஷம் கொண்டு வரும் மற்ருெரு துரையை மடக்கிப் பறிக்க இருவரும் திட்டம் போடுகின்றனர்.

'சிவிங்கிக் கோட்டைக்குப் போவா
ராம்—துரை
செண்டுப்பூக் கொண்டு வரு
வாராம்
கவர்ந்து கொள்ளுவோம் காசு
பணமெல்லாம்
கண்மணியே முத்து வீரயீ'

பின், இக்கொள்ளையடிப்புத் திட்டம் நிறைவேறியதும் இருவருமாகக் கோட்டை மீதேறி நின்றதை,

'உச்சிதக் கோட்டைக் கோர்
கொம்பானேம்-அந்தக்
கொம்புக் கிரண்டு கிளியானேம்
பச்சைக் கிளி வந்து இச்சகம் பாடுது
பாரடியோ முத்து வீராயீ'

என்றும் இன்னும் தங்களது தேசியச் சபதம் நிறைவேறிய பிறகே காதல் என்று 'அற்றைத் திங்கள், அவ்வெண் நிலவில்' 'இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவில்' என்ற பாரி மகளிரின் பரணியில்

'இந்த நிலாவும் நிலாவுமல்ல நம்ம
இன்பத்துக் கேற்ற நிலாவுமல்ல
சொந்தமாக வெற்றி கண்டபின்னே
வரும்
அந்த நிலாவில் மகிழ்வமடீ!'

என்று இருவரும் பிரிகின்றனர், வெற்றி கண்டுமறுபடியும் சந்திக்க. வீராயி தன் காதலனது பிரிவுக்காக வருந்துகிருள்.

'என்னடீ யக்காத் துரைமகன்
கோட்டெப்
பளிச்சுப் பளிச்சின்னு மின்னுதடீ
என்னக்கிக் கோட்டை பிடிப்பாரோ
-நான்

என்னக்கி மஞ்சள்
குளிப்பேனே ?
என்று தன் தோழியிடம் சொல்ல அவள் காதலன் எல்லாம் சீக்கிரமே நல்லா முடியுமென்று சமாதானம் செய்கிறான்.

'நேரமா மென்றும் விசாரம் வேண்
டாம் கொஞ்ச
நேரத்தில் வந்துனைக் கூட்டிக்
கொண்டு
தூரமான மதுரைப் பட்டணம்
போகவே
துணை வாரேன் முத்து வீராயி'

என்கிறான். இவ்வாறு இத் தேசிய கீதம் முடிவடைகின்றது.

இதன் கவிதைப் பெருமைகளையும், செய்யுள் நயங்களையும், ஸ்லேட்டை அருமைகளையும் பற்றி அடியேன் இங்கு ஒன்றும் குறிப்பிடவில்லை. இது ஒரு தேசியப் பாடல் என்பதை வலியுறுத்தும் அளவில் பாட்டோடு பாட்டை இணைத்துக் காட்டியுள்ளேன். கவி நயங்களைக் கூறினால் கட்டுரை நீண்டு விடும். இவற்றை மற்றொரு சமயம் பார்ப்போம்.

குறிப்பு: முழு நூலிலும் 120 கண்கள் இருந்ததாகச் சொல்வர். யாரிடமாவது இருப்பின் அதை அனுப்பி வைத்தால் மிகவும் நன்றியுள்ளவர்களாய் இருப்போம்—ப—ர்

பிறநாட்டுப் பழமொழிகள்

ஏமாறாது சரக்கு வாங்க வேண்டுமானால் ஏழு கடைகளில் விசாரித்த பின்னர் வாங்கு !

—சீனப் பழமொழி.

வாங்குபவனுக்கு நூறு கண்கள் வேண்டும். விற்பவனுக்கு ஒரு கண் போதும் !

—டச்சுப்பழமொழி.

பிறருக்குக் கொடுக்க வேண்டியதை கொடுத்து விட்ட பின்னர் தான், உன் நிலைமை (பொருள் நிலைமை) உனக்கு நன்றாகத் தெரியும்.

—ஸ்பானியப் பழமொழி.

எதையும் தெரிந்து வீணாக்கும் பழக்கம், விரைவில் அதையே தேடி அலையச் செய்யும்.

— ஸ்காட்லாந்து பழமொழி.

தேவையற்றதை வாங்காதே ; தேவையானதை விற்காதே.

—அமெரிக்கப் பழமொழி.

புதுமை வாழ்க

'புதுமை'யினைக் கண்டவுடன் பூரித்தேன் நான் ;
புத்தமுதம் பொழிகின்ற மலராய்க் கண்டேன் ;
மதுரமிகு கவிதையொடு கதைகள் தாங்கி
மக்கள்நலம் பேசுகின்ற பெருமை கண்டேன் ;
விதம்விதமாய் ஓவியங்கள் விளங்கி எங்கும்
வீசுகின்ற அரசியலை ஆய்ந்து காட்டும்
இதுபோலும் 'புதுமை'யினைக் கண்டதில்லை
என்றென்றும் 'புதுமை'யிதழ் வாழ்க வாழ்க !

மாதர்குல மணிவிளக்காம் ஜான்ஸிராணி
மாவீரப் பேரரசி குதிரை ஏறித்
தீதறவே போர்செய்யும் தீரம் கண்டேன்.
தேசபக்தர் பலரங்கே வாழ்த்தக் கண்டேன் ;
ஓதுபுகழ் பாரதி, வா. வே. சு. ஐயர்
உயர்திலகர், வ. உ. சி, குமரனோடு
பூதலத்தில் பொன்றாத புகழைக் காத்த
புண்ணியர்தம் படமெல்லாம்
பொலியக் கண்டேன்.

அரசியலும் கலையறிவும் அமையப் பெற்றான்,
அஞ்சாத நெஞ்சத்தான் ஆண்மை மிக்கான்,
உரைவளஞ்சால் ஆசிரியன், உள்ளத்துள்ளே
உணருகின்ற உண்மைகளை எடுத்துக் கூறும்,
பெருமைபெறு கோசல்ராம் கலைகளெல்லாம்
பேணுகின்ற உளத்துடனே கொண்டுவந்த
விரையாரும் புதுமை மலர் சிறந்து வாழ்க !
மேன்மேலும் தழைத் தோங்கி வாழ்க நன்றே !

பா சொலி

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

—:●:—

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகாரவகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், சாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாய மாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு

நாவலப்பிட்டிய.

—:●:—

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோச நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதரூஸ்.

&

37, ஹைரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்.

விறகுவெட்டியின் கிளி

அடங்காப்பிடாரியை மனைவியாகக் கொண்டான் பாவம்!
ஆனால், அவன் அதிர்ஷ்டக்காரன்தான்.
உண்மை அவன் பக்கம் நின்றது.

கலைச் செல்வி

ஒரு ஆற்றங்கரை. அதன் ஓரத்தில் ஒரு விறகு வெட்டியும் அவனது மனைவியும் ஒரு குடிசையில் வசித்து வந்தார்கள். விறகு வெட்டி மிகவும் நல்லவன். காலையில் எழுந்து காட்டுக்குச் செல்வான். அங்கு விறகை வெட்டி நகரத்தில் கொண்டுபோய் விற்று வருவான். ஒரு பைசாகூட அவன் செலவிற்கு எடுத்துக் கொள்ளமாட்டான்.

ஆனால் அவன் மனைவியோ பெரிய அடங்காப்பிடாரி. சுடுமூஞ்சுக்காரி. விறகு வெட்டியை எப்போதும் 'கன்னா பின்னா' வென்று திட்டிக் கொண்டேயிருப்பாள்.

விறகு வெட்டிக்கு நண்பன் ஒரு கிளிதான். அவன் வளர்த்துவந்த அந்தக் கிளி அவனுக்கு ஆறுதல் அளித்தது. பக்கத்தில் உட்கார்ந்து அதன் அழகையும் அமைதியான குணத்தையும் நினைத்து ஆனந்தமடைவான். சில சமயங்களில் அந்தக் கிளி அவனுடைய தோளில் உட்கார்ந்து "கீச் கீச்" என்று ஏதோ சொல்லும்! விறகு வெட்டியிடம் அப்படிப் பழகுவதைப் பார்த்த அவன் மனைவி பொருமைப்பட்டாள். அவளுக்கு மனதில் பெரிய எரிச்சல் ஏற்பட்டது. கிளியை ஒழித்துக் கட்ட தகுந்த சமயத்தை எதிர்பார்த்திருந்தாள்.

ஒரு நாள் விறகு வெட்டி காட்டிற்குப் போய்விட்டான். அவனுடைய மனைவி சமையல் செய்து கொண்டிருந்தாள். சில காய்கறிகளை அரிந்து கொண்டிருந்தாள். கிளி அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு "கீச் கீச்" என்றது. அதுதான் சமயம் என்று எண்ணி அவள் அதைப் பிடித்து கையில் வைத்திருந்த கத்தியால் அதன் நாக்கின் நுனிப்பாகத்தை வெட்டிவிட்டாள். கிளி துடியாய்த் துடித்தது. ரத்தம் சொட்டிற்று. குடி

சைக்கு வெளியே பறந்து வந்தது. குடிசையைச் சுற்றிச் சிறிதுநேரம் பறந்துகொண்டிருந்தது. கொஞ்ச நேரங்கழித்து எங்கேயோ பறந்துபோய் விட்டது.

விறகு வெட்டி வீட்டிற்கு வந்தான். கிளியைக் காணுமல் வருந்தினுன். அவன் மனைவி அதனுடைய நாக்கை அறுத்து அதை விரட்டி விட்டதாகக் கூறினுள். கையிலிருந்த கோடரியினுல் அவளுடைய தலையைப் பிளந்து விடலாமா என்று எண்ணினுன். ஆனுல் அவ்வளவு தைரியம் அவனுக்கு ஏது?

மாதங்கள் பல சென்றன. வழக்கம்போல் ஒரு நாள் விறகு வெட்டி காட்டிற்குச் சென்றுன். "காலை வந்தனம், ஐயா" என்று ஒரு குரல் அவனை வரவேற்றது. நிமிர்ந்து பார்த்தான். ஒரு மரக்கொம்பில் அவனுடைய அருமைக் கிளி உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஆனந்தமடைந்தான். இப்பொழுது அது மனிதர்களைப் போல் பேசும் சக்தி பெற்றிருந்தது. விறகுவெட்டி வியப்பில் மூழ்கினுன்.

விறகு வெட்டியை கிளி அதனுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றது. மூங்கிலால் செய்யப்பட்டிருந்தது அந்த வீடு.

கிளியின் மனைவி விறகு வெட்டியை மிகவும் அன்புடன் வரவேற்றது. மரத்தினுல் செய்யப்பட்ட ஒரு முக்காலியின் மேல் விறகு வெட்டி

உட்கார்ந்தான். ஆண் கிளி பக்கத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் பெண் கிளி ஓர் இலையில் மா, பலா, கொய் யாக்கனிகளைக் கொண்டுவந்து விறகு வெட்டியின் முன்னுல் உள்ள மேஜை மீது வைத்தது. களைப்புத் தீர அவைகளை விறகு வெட்டி சாப்பிட்டான். ஒரு மூங்கில் குழாய் நிறைய காட்டுத் தேனைப் பருகினுன். இரவைத் தங்கள் வீட்டிலேயே கழிக்கும்படி விறகு வெட்டியை இரண்டு கிளிகளும் கேட்டுக் கொண்டன. அவர்கள் உபசரிப்பில் மெய்மறந்து போனுன் விறகு வெட்டி. ஒரு இரவு என்ன, ஐந்து இரவுகள் அங்கேயே தங்கியிருந்தான்.

ஆருவது நாள் விறகு வெட்டி வீட்டிற்குப் புறப்படத் தயார் ஆனுன். அப்போது ஆண் கிளி இரண்டு கூடை களை அவனிடம் கொண்டு வந்தது. ஒன்று கனமாகவும், மற்ருென்று கனமற்றதாகவும் காணப்பட்டது.

“ஐயா, இந்த இரண்டு கூடைகளில் தங்களுக்குப் பிடித்தமான கூடையைத் தாங் கள் எடுத்துக்கொண்டு போங் கள்” என்றது கிளி. விறகு வெட்டி கனமில்லாத கூடையை எடுத்துக் கொண் டான். கிளிக்குத் தன் நன்றி யைச் செலுத்திவிட்டுப் புறப் பட்டான்.

தன் மனைவி என்ன சொல் லுவாளோ என்று பயந்து கொண்டே போனுன். மனம் “திக், திக்” என்று அடித்தது. திரும்பவும் கணவனைப் பார்த் ததும் அவளுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. முகத்தில் கோபம் துள்ளி விளையாடிற்று. கண்களில் நெருப்புப் பொறி கள் பறந்தன. வசைமாரிப் பொழிந்தாள். விறகு வெட்டி யின் கையிலிருந்த கூடை தான் அவனைக் காப்பாற்றிற்று. அதைப் பார்த்ததும் அவள் திட்டுவதை நிறுத்திஞள். கூடையைப் பிடுங்கி, அதைத் திறந்து பார்த்தாள்.

அவள் கண்ட காட்சி என்ன! கூடை நிறைய முத்து, பவளம், வைரம், வைடூரியம், கோமேதகம், மரகதம், தங்கம், வெள்ளி முதலியன நிரம்பி யிருந்தன. உடனே அவளு டைய கோபம் பறந்துபோ யிற்று.

கிளியிடம் தான் சென்றி ருந்த விஷயத்தை விறகு வெட்டி தன் மனைவியிடம் கூறினுன்.

முப்பது வருடமாகச் சிரிக் காத அவள் புன்முறுவல் பூத் தாள். தன் கணவனைப் பாராட்டினுள். அன்று அவ னுக்கு அறுசுவை அன்னம் அளித்தாள்.

மறுநாள் விறகு வெட்டியின் மனைவி காட்டிற்குப் புறப்பட் டாள். பேராசை அவளைப் பற்றிக் கொண்டது. கணவன் எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை. காட்டில் கிளியைச் சந்தித்தாள். முன்பு அதனிடம் அவள் கொடுமை யாக நடந்ததற்கு வருந்துவதா

கக் கூறினுள்; மன்னிப்பும் கோரினுள். கிளி அவளையும் நன்கு உபசரித்தது. அவளுடைய கணவனுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதைகள் எல்லாம் அவளுக்கும் கொடுக்கப் பட்டன. அன்று சாயங்காலமே அவள் வீட்டிற்கு திரும்ப நினைத்தாள். தன் கணவனுக்கு கொடுத்த மாதிரி தனக்கும் ஒரு கூடை வெகுமதியாகக் கொடுக்கும்படி அவள் கிளியிடம் கேட்டாள். கிளி உள்ளே போய் இரண்டு கூடைகளைக் கொண்டுவந்தது. அவைகளில் மிகவும் கனமான கூடையை விறகு வெட்டியின் மனைவி எடுத்துக்கொண்டாள். கிளிக்கு நன்றிகூடச் செலுத்தாமல் கூடையைத் தலையின் மேல் வைத்துக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தாள்.

வீட்டிற்குள் வந்ததும் கணவனைப் பார்த்து "இதோ பார், நீ கொண்டுவந்த கூடையைப் போல் இரண்டு மடங்கு கனமான கூடையை நான் கொண்டு வந்திருக்கிறேன்" என்று பெருமையாகப் பேசினுள்.

அவசரம் அவசரமாக அவள் கூடையின் மூடியைத் திறந்தாள்...... "உஸ், புஸ், கஸ், கிஸ், கர், புர்" என்ற சத்தம் கேட்டது. பாம்பு, பல்லி, பூரான், எட்டுக்கால் பூச்சி, தவளை, தேள், நண்டுத்தெறுக்கால் இவைகள் ஒவ்வொன்றிலும் பத்துப் பதினைந்து கூடையிலிருந்து கிளம்பின. ஒரு தவளை அவளுடைய வாய்க்குள் நுழைந்தது. ஒரு பல்லி அவளுடைய காதைத் துளைத்துக்கொண்டிருந்தது. மற்றொரு காதுக்குள் இரண்டு பூரான்கள் குடிபுகுந்தன. அவளுடைய கழுத்தை நெறிப்பதில் இரண்டு பாம்புகள் போட்டியிட்டன. அவளுடைய கண்ணில் ஒரு தேள் கொட்டிற்று.

"ஐயோ! அப்பா! ஆண்டவனே, என்னைக் காப்பாற்று" என்று அவள் அலறித் துடித்தாள். கொஞ்ச நேரத்தில் அவள் இறந்துவிட்டாள்.

தன் மனைவியைக் காப்பாற்ற முடியாத நிலையில் சிலைபோல் நின்றுகொண்டிருந்தான் விறகு வெட்டி.

❀

கிளிப் பிள்ளை

தமிழழகன்

கிளியாரே, என் கிளியாரே!
கீச்சுக் கீச்சுக் கிளியாரே!
பழியாய் ஒன்றை உன்மேலே
பலரும் சொல்றார் கிளியாரே!
சொன்னதைச் சொல்லும்
கிளிப்பிள்ளை ;
சொந்த மூளை அதற்கில்லை!
என்னும் சொல்தான் அதுவாகும்!
ஏனோ அச்சொல், கிளியாரே!
அக்கா அத்தான் பேசுவதை
அப்படியே கேட்டுவந்து
திக்கா மலே பலரிடமும்
திறமை யாக ஒப்புவிப்பாய்!
தங்கத் தாலே கூண்டமைத்துத்
தவறா மல்பால் பழமும் தான்
திங்க உனக்குத் தந்தாலும்
தேடு வாய் நீ விடுதலைதான்!
பச்சைப் பட்டை உன்னுடம்பில்
பரிவாய்ப் போர்த்தி விட்டது [யார்?
மெச்ச கழுத்தில் மணியாரம்
உனக்குப் போட்டது யார்?
பாதி சிவந்த மிளகாயின்
பழம் தான் கொத்தித் தின்றா [யோ?
சேதி என்ன? உன் மூக்கு
சிவந்த தேன்? சொல்
என்னிடமே!

கிளியாரே, என் கிளியாரே!
கேட்டுப் போடா, கிளியாரே!
வெளியார் உன்னைக் கேலிபண்ண
விடுவாயோ நீ கிளியாரே?

V.V.S. நல்லெண்ணெ

உபயோகியுங்கள்!

வே.வ.சண்முகநாடார் & சன்ஸ்

விருதுநகர்

எங்களிடம் தயாராகிற

நயம் நல்லெண்ணெ

நயம் உளுந்து

துவரம் பருப்புகளை

வாங்கி உபயோகியுங்கள்

மேலான

குணம்

மணம்

நிறைந்தது!

எங்கும்

கிடைக்கும்.

V.V. ஷண்முக நாடார் & சன்ஸ்

விருதுநகர்

போன்: 44... தந்தி: VEEVEEYES...

சந்திப்பு

ஜி. சதாசிவம்

புல்லாங்குழல் வாசித்து ஒருவர் பிச்சை எடுக்க, மற்ருெருவர் லட்சக்கணக்கான பணத்தைச் சம்பாதிக்கிருர்; இவர்களின் வாழ்க்கையின் மர்மம் என்ன?

ஜனப்புழக்கம் அதிகமாக உள்ள கடைத் தெருவில்தான் அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆனுலும், அவனைச் சுற்றி ஒரு சிறு கூட்டமே இருந்தது. அவன் முன் விரிக்கப்பட்டிருந்த அந்த கந்தைத் துணி பறந்துவிடாது மூன்று பக்கங்களிலும் கற்களும், ஒரு மூலையில் அவனது ஒரே ஐசுவரியமான உருத் தெரியாது நசுங்கிப்போன தகரக் குவளையும் வைக்கப் பட்டிருந்தன. கந்தத் துணியில் பல காலணுக்களும் ஒன்றிரண்டு அரையணுக்களும் கிடந்தன. அவைகள் அவனுக்குக் கிடைத்த பிச்சைக்காசு.

அவன் ஒரு பிச்சைக்காரன். தலை நரைத்து, உடல் தளர்ந்த வயோதிகன். வயது அதிகமாகாவிட்டாலும் வறுமை அவனை அக்கோலத்திற்கு உள்ளாக்கியிருந்தது. அவன் கையில் ஒரு புல்லாங்குழல் இருந்தது. அதைத்தான் அவன் ஊதிக் கொண்டிருந்தான். கூட்டத்தினரும் அவனது சங்கீதத்தைக் கேட்டு மகிழாவிட்டாலும், பச்சாதாபப்பட்டு காலணு -அரையணுக்களை கந்தையில் வீசிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். அது சமயம் அந்தப் பக்கமாக வந்தது ஒரு 'டாக்ஸி'. அது கூட்டத்தை நெருங்கியதும் சட்டென்று நின்றது. காரின் பின் ஆசனத்திலிருந்த இளைஞன் ஒருவன் பிச்சைக்காரனின் புல்லாங்குழல் வாசிப்பை சில நிமிடங்கள் மெய்மறந்து கேட்டான். 'பாவம், திறமை இருந்தும், வாழமுடியாது வறுமையில் வாடுகிருன்' என்று கூறியபடி ஒரு வெள்ளி ரூபாயை எடுத்து அந்தக் கந்தைத் துணியில் வீசினுன்.

காலணுக்களும் அரையணுக்களும் நடுவில் வந்து விழுந்த வெள்ளிக் காசைக் கண்ட பிச்சைக்காரனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அவன் பிச்சை எடுக்க ஆரம்பித்து அந்த இருபது வருஷங்களில், அதிகபட்சம் ஒரு அணுவுக்குமேல் பிச்சை போட்ட தர்மப் பிரபுவையே அவன் பார்த்து அறியாதவன். ஆச்சரியத்தால் கண்களை அகல விரித்தபடி தனக்கு ஒரு ரூபாய் பிச்சை போட்ட புண்ணியவானைப் பார்க்கத் தலை நிமிர்ந்தான். ஆனுல் அவன் பார்ப்பதற்கு முன் அந்தக் கார் அங்கிருந்து பறந்து மறைந்துவிட்டது.

சுதாகரன் பிரபல புல்லாங்குழல் வித்வான். 'வேணுகான சக்ரவர்த்தி' என அவன் பெயரும் புகழும் எங்கும் பரவியிருந்தன. அவனை வேணுகான கோபாலன் என்றே அனைவரும் பாராட்டினர். அவனுடைய கச்சேரியைக் கேட்க கூடும் கூட்டம் வேறு எதற்கும் கூடுவதில்லை. அவ்வளவுக்கும் சுதாகரன் இருபதே வயது நிரம்பப் பெற்ற வாலிபன்தான். அன்று அந்நகர் முழுவதும் அவனது பேச்சாகவே இருந்தது. காரணம், அவனது கச்சேரி அன்று அந்நகரில் ஏற்பாடாகி இருந்தது.

அயல்நாட்டில் தன் திறமையை வெளிப்படுத்த அவர்கள் அழைப்பின் மேல் அவன் பிரயாணமாகிக்



கொண்டிருந்தான். வழியில் அந்த நகரில் ஒரே ஒரு கச்சேரி மட்டும் செய்ய ஒத்துக் கொண்டிருந்தான். போதாதற்கு அவன் அந்நகரில் செய்யும் முதல் கச்சேரி அதுதான். கூட்டத்தைப்பற்றி கேட்கவா வேண்டும்? தனக்கு முழு ரூபாய் பிச்சை அளித்தவர் அந்த மகா வித்வான் தான் என்பதையும் மற்ற விஷயங்களையும் பிச்சைக்காரன் விசாரித்து அறிந்து கொண்டான். அன்று மாலை சுதாகரன் கச்சேரி நடக்கும் கொட்டகை முன் போய்ப்பிச்சை எடுப்பதென அவன் முடிவு செய்து கொண்டான். தனக்குப் பணமும் நிறைய கிடைக்கும். அத்துடன் வித்துவானின் வாசிப்பையும் தான் கேட்க முடியும் என்பதே அவன் எண்ணம்.

மாலை ஆறரை மணிக்குத் தான் சுதாகரனின் கச்சேரி ஆரம்பம். ஆனல் பிற்பகல் மூன்று மணி முதலே கொட்டகை வாசலில் கூட்டம் தாங்கவில்லை. ரஸிகர்கள் டிக்கெட்டு வாங்க 'நான், நீ' என்று முண்டி அடித்துக்கொண்டு நின்றனர். டிக்கெட் கிடைக்காத பலர் ஏமாற்றத்துடன் நின்றுகொண்டிருந்தனர். 'வேணுகான சக்ரவர்த்தி'யைப்பார்த்து விட்டாவதுபோவோம் என்று சிலரும் கொட்டகைக்கு வெளியே நின்ருவது சுதாகரன் வேணுகானத்தைக் கேட்டுவிட்டுப் போவோம் என்று பலரும் காத்திருந்தனர்.

பிச்சைக்காரன் கொட்டகைக்கு எதிரில் இருந்த ஆலமரத்தடியில் தன் கந்தையை விரித்துவிட்டு புல்லாங் குழல் வாசிக்க ஆரம்பித்தான். அவனைக் கவனிப்பாரையே அங்கு காணேம். நெருங்கிவந்த ஒன்றிரண்டு ஆசாமிகளும் அவன் ஏதாவது கொடுத்தால் வாங்கிக் கொள்ளக் கூடிய புள்ளிகள். பிச்சைக்கா

கண்டு பிடியுங்கள் :—

கீழே தரப்பட்டவைகளை கண்டு பிடித்தவர்கள் யார்?
அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?

(1) ஆகாய விமானம்.
(2) சைகிள்.
(3) கோடக் கேமிரா.
(4) பவுண்டன் பேனா.
(5) கிராமபோன்.
(6) ரேடியோ.
(7) ரிவால்வர்.
(8) டெலிபோன்.
(9) டெலிவிஷன்.
(10) ஐஸ்செய்யும் இயந்திரம்.

(விடை வேறு பக்கம் பார்க்க)

T. மார்ட்டின்

ரன் உற்சாகமிழந்து விட்டான் என்பது அவன் வாசிப்பிலே வெளிப்பட்டது. பத்து நிமிஷங்களுக்குப் பிறகு அவன் வாசிப்பை நிறுத்திவிட்டான். தன் எதிரே நின்ற கொட்டகையையும், கூட்டத்தையும் வெறிக்க வெறிக்கப் பார்த்தான். அவனிடமிருந்து நீண்ட பெருமூச்சு ஒன்று வெளிப்பட்ட்து. கண்களில் நீர் தாரை தாரையாக வடிந்தது. அவனும் ஒரு காலத்தில் எப்படியெல்லாமோ தான் நினைத்தான். ஆம்; அவன் மனத்திரையில் ஓடிய கடந்தகால நிகழ்ச்சிகள் தாம் அவனை அப்படிக் கண்கலங்க வைத்தன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற சம்பவங்கள். அப்பொழுது இந்தப் பிச்சைக்காரன் சுந்தரம் என்ற அழகிய வாலிபன். சுந்தரம் ஒரு அனாதைச் சிறுவன். தன் குறுகுறுத்தப் பார்வையினாலும். புத்தி சாதுர்யத்தினாலும் ஊராரின் பச்சாதாபத்திற்கு ஆளாகி அவர்கள் அரவணைப்பில் முன்னுக்கு வந்தவன். ஊரில் அந்தக் காலத்தில் பிரபலமாக இருந்த ஒரு கிழ வித்வானிடம் புல்லாங்குழல் பயிற்சி பெற்று இருபது வயதானபொழுது புல்லாங்குழல் வாசிப்பதில் சிறந்து விளங்கினான். இவனது வாசிப்பைக் கேட்டவர்கள் ஒரு காலத்தில் அவன் உலகம் புகழும் வித்வானாக விளங்குவான் என்று கூறினார்கள். அவனும் நம் கச்சேரியைக் கேட்கத் தேர் திருவிழாக் கூட்டம் வரும், நாம் பெயரும், புகழும், பொருளும் அடைவோம் என்று மனப்பால் குடித்தான். ஆனால், மனிதன் நினைக்கிறபடியெல்லாம் நடந்து விடுகிறதா?

அந்தக் காலத்தில் மதுரையில் நாகராஜன் என்பவர் நடத்திவந்த சங்கீத இசைப்பள்ளி பிரசித்தமாக விளங்கி வந்தது. அதில் பல மாணவ, மாணவிகள் பயின்று வந்தனர். சுந்தரம் தன் திறமையைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்த நாகராஜன் அவனைத் தமது வித்யாலயத்தில் புல்லாங்குழல் போதகராக வேலைக்கு அழைத்துக்கொண்டார். அப்படி அவர் அவனை வேலைக்கு அழைத்துக் கொண்டதற்கு சுயநலக் காரணம் ஒன்றும் இருந்தது. அவருக்கு கோமளம் என்ற ஒரு பெண்

இருந்தாள். அவளை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து வித்யாலயத்தையும் அவனிடம் ஒப் படைத்துவிட நினைத்திருந்தார் அவர்.

கோமளம் அழகிதான். கொஞ் சம் துடுக்கானவள். அவள் தந்தை வித்யாலத்தில் சங்கீதப் பகுதியில் சங்கீதம் கற்றுக் கொண்டிருந்தாள். அவள் கூடவே ஸ்ரீமதி என்ற மற் ெருரு பெண்ணும் ஜோடியாக சங்கீ தம் கற்றுக்கொண்டு வந்தாள். ஸ்ரீமதி மிகவும் அழகியில்லா விட் டாலும் குணவதி. மிகவும் ஏழ்மை ஸ்திதியிலுள்ள குடும்பத்தைச்சேர்ந் தவள். அவளுக்கு சங்கீதத்திலுள்ள திறமையையும், அக்கலை மீதுள்ள ஆர்வத்தையும் கண்டு நாகராஜன் இலவசமாகத்தமது வித்யாலயத்தில் அவளுக்கு சங்கீதம் கற்பிக்க ஏற் பாடு செய்திருந்தார். வித்யாலயத் தின் தலைவரின் மதிப்பைப்பெற்றவர் என்ற முறையில் சுந்தரத்திடம் எல் லாப்பெண்களுமே நெருங்கிப் பழகி வந்தனர். அவர்களில் கோமளமும், ஸ்ரீமதியும் அவனைக் காதலனுக அடைய எண்ணினுர்கள். ஆனுல், சுந்தரம் ஸ்ரீமதியைத்தான் காதலித் தான். கோமளத்திடம் ஒரு சகோதரனைப்போலவே நடந்து கொண்டான்.

சுந்தரம் வித்யாலயத்தில் சேர்ந்து வருஷம் ஒன்று ஓடி மறைந்தது. வித்யாலயமும் நல்ல முன்னேற்ற மடைந்து மேலும் பிரபலமாகி விட்டி ருந்தது. நாகராஜன், சுந்தரத்தின் சேவையைப் பாராட்டிப் பேசியவர் பேச்சோடு பேச்சாக தம் அந்தரங்க ஆசையையும் வெளியிடத் தவற வில்லை. அவன் அதை மறுப்பான் என்று சிறிதும் அவர் எதிர்பார்க்க வில்லை. ஆனுல், சுந்தரமோ தான் கோமளத்தைத் தன் சகோதரியா கவே கருதி யிருப்பதாகக் கூறி மறுத்து விட்டான். அவன் ஸ்ரீமதி யையே மணக்கப் போவதாக சொன்னதும் அவர் கோபம் பன் மடங்காகிவிட்டது. அவன் அவ ரது கோபத்தைப் பொருட்படுத் தவே இல்லை.

சுந்தரம் தன் விருப்பப்படியே ஸ்ரீமதியை அதிக ஆடம்பரமின்றி மணந்துகொண்டான். கல்யாணத் திற்கு நாகராஜனே அல்லது கோம ளமோ போகவில்லை. சுந்தரம் அதை அவ்வளவாகப் பொருட் படுத்தவேயில்லை. கல்யாணம் முடிந்த நான்காவது நாளே, நாக ராஜன் தமக்கு வந்தக் கோபத்தில் சுந்தரத்தை வேலையைவிட்டுவிலக்கி விட்டார். அவர் அவ்வளவு கீழ்த் தரமாக நடந்துகொள்ளமாட்டார் என்றுதான் அவன் நம்பினுன். அதற்காக அவன் மனம் தளர்ந்து போய்விடவில்லை. தன்னிடமுள்ள வித்தையைக் கொண்டு பிழைத்துக்

உங்களுக்குத் தெரியுமா ?

(1) உலகத்திலே பெரிய சினிமா கொட்டகை.
(2) உலகத்திலே உயர்ந்த கோபுரம்.
(3) உலகத்திலே அதிகமாக மழை பெய்யும் இடம்.
(4) உலகத்திலே மிக நீளமான ஆறு.
(5) உலகத்திலே பெரிய பூங்கா.

(விடை வேறு பக்கம் பார்க்க)

கொள்ளலாம் என்ற தைரியம் அவனுக்கு.

மதுரையிலேயே இருக்க மன மில்லாமல் சுந்தரம் ஸ்ரீமதியையும் அழைத்துக்கொண்டு சென்னை வந்துசேர்ந்தான். அங்கு, அவன் எதிர்பார்த்த அளவில் அவன் வித்தைக்கு ஆதரவோ மதிப்போ கிடைக்கவில்லை. இரண்டொரு இடங்களில் பாடம் சொல்லிக் கொடுப்பதில் சொற்ப சம்பளமும், ஒன்றிரண்டு நாடகங்களுக்கு வாசிப்பதில் சில ரூபாய்களுமே வருமான மாகக் கிடைத்தன. அந்த மிகச் சொற்ப வருமானத்தைக் கொண்டு இருவரும் கஷ்டப்பட்டு ஜீவனம் செய்து வந்தனர். சுந்தரமும் ஸ்ரீமதியும் கஷ்ட தசையினால் ஆளே உரு மாறிப் போனார்கள். இதன் மத்தியில் ஸ்ரீமதி ஒரு ஆண் மகவுக்குத் தாயானாள். குழந்தை சுதாகரனின் முகத்தைக் கண்டு பெற்றோர் மகிழ்ந்து ஆறுதலடைந்து காலம் கடத்தி வந்தனர்.

துன்பம் வந்தால் தொடர்ந்து வரும் என்ற மொழிப்படி சுதாகரன் ஆறு மாதக் குழந்தையா யிருக்கும் போது ஸ்ரீமதிக்கு உடல் க்ஷீணம் ஏற்பட்டது. டாக்டர் அது கொடிய க்ஷயம் என்ற வியாதி என்றும், உடனே வைத்தியம் செய்யவேண்டு மென்றும் கூறிவிட்டார். சுந்தரம் மனமுடைந்து போனான். ஒரு தர்ம ஆஸ்பத்திரியில் கொண்டு போய் அவளைச் சேர்த்துவிட்டு கைக் குழந்தையுடன் மிகவும் அல்லல் பட்டான். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மூன்றாவது மாதமே ஸ்ரீமதி தன் அருமைக் காதலனையும், குழந்தையையும் தவிக்கவிட்டு இறந்து போனாள்.

சுந்தரத்தின் நிலை மேலும் மோசமாகிவிட்டது. குழந்தை சுதாகரின் முகஜாடை ஸ்ரீமதியைப் போலவே இருந்தது. குழந்தையைப் பார்க்கும் போது ஸ்ரீமதியை எண்ணிப் பெருமூச்சு விடுவான். குழந்தை வளர்க்கத் தெரியாது தடுமாறினான். இந்தச் சங்கடங்களினால் அவன் புல்லாங் குழல் கற்றுக் கொடுத்துவந்த

கண்டு பிடியுங்கள் :

(விடை)

(1) ரைட் சகோதரர்கள்—அமெரிக்கா.
(2) மேக்மில்லன்—ஸ்காட்லாந்து.
(3) ஈஸ்ட்மென்—அமெரிக்கா.
(4) வாட்டர்மென்—அமெரிக்கா.
(5) பெர்லினர்—அமெரிக்கா.
(6) மார்க்கோனி—இத்தாலி.
(7) கோல்ட்—அமெரிக்கா.
(8) பெல்—அமெரிக்கா.
(9) பெயர்டு—ஸ்காட்லாந்து.
(10) கொரு—அமெரிக்கா.

T. மார்ட்டின்.

இடங்களுக்கும் ஒழுங்காக போக முடியாமல் அந்த இடங்களிலும் அவனை நிறுத்திவிட்டார்கள். அப்பொழுதுதான் வேறு விதியின்றி பிச்சை எடுக்கத் தொடங்கினான், சுந்தரம். அப்போதும் தன் வித்தையை மறக்காது புல்லாங்குழல் வாசித்து கூட்டம் சேர்த்தேப் பிச்சை எடுக்கலானான்.

ஊர் ஊராக, தெருத் தெருவாக, வீடு வீடாக பச்சிளம் குழந்தையுடன் அலைந்து திரிந்து பிச்சை எடுத்துப் பிழைக்கலானான். அப்படிச் சுற்றிவரும் சமயம்தான் ஒரு நாள் அவன் தன் குழந்தையைப் பிரிய நேரிட்டது. ராமேஸ்வரத்தில் கோயிலுக்கு முன்னால் ஒரு பக்கத்தில் துணியை விரித்து குழந்தையை அதில் கிடத்திவிட்டு குழல் ஊதிக் கொண்டிருந்தான் அவன். அன்று காலை முதல் அவனுக்கு எதுவும் கிடைக்கவில்லை யாதலால் குழந்தை பசியால் துடித்துக் கொண்டிருந்தது; குழந்தைவேண்டி ராமேஸ்வரம் வந்திருந்த ஒரு தம்பதியின் பார்வையில் தற்செயலாக விழுந்தது, குழந்தையின் பரிதாப நிலையும். அதன் தந்தையின் வறுமை நிலையும், அவர்களுக்கோ திரண்ட ஐசுவரியம் இருந்தும் அதை ஆள ஒரு குழந்தை யில்லை.

அந்த தம்பதிக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. சுந்தரத்தை அணுகி, குழந்தையைத் தங்களிடம் கொடுத்து விடும்படியும் தாங்கள் வளர்ப்பதாகவும் கூறினார்கள். குழந்தையைப் பிரிய முதலில் அவன் மனம் இடங்கொடுக்கவில்லை; தீரயோசித்தான். 'நம் விதி, நாம் தான் கஷ்டப்படுகிறோம், குழந்தை யாவது சௌகரியமாக வளரட்டுமே! உலகம் புகழும் வித்வானாக விளங்க வேண்டுமென்று நான் கண்ட கனவு தான் நினைவாகவில்லை. என் மகனுக்காவது அந்த அதிருஷ்டம் கிட்டட்டுமே' என்று எண்ணியது அவன் உள்ளம். தன் கதையை உள்ளது உள்ளபடி அந்தத் தம்பதியிடம் கூறினான் சுந்தரம். தன் மகனுக்குப் புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக் கொடுத்து அவனைச் சிறந்த வித்வானாக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையுடன் குழந்தை சுதாகரனை அவர்களிடம் ஒப்படைத்தான். அதன்பின் இருபது வருஷங்கள் ஓடி மறைந்துவிட்டன. பிறகு அவன் எங்கெல்லாமோ சுற்றி அலைந்து காலம் கடத்தினான்.

உங்களுக்குத் தெரியுமா ? விடை.

(1) ஹவன்னாலில் உள்ள ப்ளேன்க்யுட்டா தியேட்டர்.

(2) பிரான்ஸ் தேசத்தில் உள்ள எப்பேல் கோபுரம்.

(3) அஸ்ஸாம் மாகாணத்தில் உள்ள சிரபுஞ்சி.

(4) வட அமெரிக்காவில் உள்ள மிசௌரி மிசிசிப்பி நதி.

(5) அமெரிக்காவில் உள்ள எல்லோஸ்டோன் தேசிய பூங்கா.

இவ்வளவு நிகழ்ச்சிகளும் பிச்சைக்காரனின் நினைவுத் திரையிலே ஓடி மறைந்தன. அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. இன்று பிரபலமாக விளங்கும் அந்த சுதாகரன்தான் தன் மகன் சுதாகரனாக இருப்பானோ என்ற எண்ணம்தான் அது. 'எவ்வளவு பயித்தியக்கார ஆசை' என்று அவன் மனம் இடித்துக் காட்டியது என்றாலும் அவனுக்கு ஏற்பட்ட எண்ணம் விச்வ ரூபமெடுத்தது. 'ஏன் இந்தச் சந்தேகம். ஆளைப்பார்த்துத் தெரிந்துகொள்ளேன்' என்று உள்ளுணர்வு கட்டளைப் பிறப்பித்தது. அவ்வளவுதான். தன் கந்தையைச் சுருட்டிக் கொண்டு கொட்டகையை நோக்கி ஓடினான்.

அவனுக்கிருந்த மனத்துடிப்பிலே அது போக்குவரத்து நிறைந்த ரஸ்தா என்பதையும் மறந்தான். அதே சமயம் கொட்டகையை நோக்கி வேகமாக வந்தகார் ஒன்று பிச்சைக்காரனை மோதிக் கீழே தள்ளியது. அவன் கையிலிருந்த கந்தையும், குழலும் மூலைக் கொன்றாக விழுந்தன. கார் சட்டென நின்றது. கூட்டம் கூடிவிட்டது. காரிலிருந்து இறங்கி வந்தான் வேணுகான சக்ரவர்த்தி சுதாகரன். நல்ல காலமாக பிச்சைக்காரனுக்கு பலமான அடி ஒன்றுமில்லை. அதிர்ச்சியால் மயக்கம் அடைந்திருந்தான். யாரும் எதிர்பாராவண்ணம் சுதாகரன் பிச்சைக்காரனைத் தன் கைகளில் தூக்கிக் கொண்டான். கூட்டத்தை விலக்கிக் கொண்டு கொட்டகைக்குள் நுழைந்தான்.

பிச்சைக் காரன் சௌகரியமாக சோபாவில் படுக்க வைக்கப்பட்டான்.

சிறந்த இரு டாக்டர்கள் அவனுக்கு சிகிச்சை செய்துகொண்டிருந்தனர். சுதாகரன் கவலையோடு அவன் முகத்தைப் பார்த்தபடி இருந்தான். பல நிமிஷங்களுக்குப் பின் பிச்சைக்காரன் கண்ணைத் திறந்தான்.

பிச்சைக்காரன் முகம் பிரகாசமடைந்தது. அவன் கண்கள் ஆச்சரியத்தினால் அகல விரிந்தன. அவன் நாத் தழுதழுத்தது. அவன் கண்களில் பட்ட அந்த முகம், சுதாகரனின் முகம், அவனுக்கு அவன் மனைவி ஸ்ரீமதியின் முகத்தையே ஞாபகப்படுத்திற்று. 'ஆம். சந்தேகமில்லை. நீ என் மகன் சுதாகரனேதான். சந்தேகமில்லை. என் அபிலாஷை நிறைவேறி விட்டது. என் அபிலாஷை நிறை வேறிவிட்டது'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூவினான். அந்த அதிர்ச்சியில் அவன் கண்ணையும் மூடிவிட்டான். கூடியிருந்தோர், சுதாகரன் உட்பட அனைவருமே அவன் ஒரு பயித்தியம் என்றும் மரண சமயத்தில் ஏதோ பிதற்றுகிறான் என்றுமே எண்ணினார்கள்.

கவலையற்றிருத்தலே வீடு. களியே அமிழ்தம். பயன் வருஞ்செய்கையே அறமாம். அச்சமே நரகம். அதனைச் சுட்டு நல்லதை நம்பி நல்லதே செய்க.

—பாரதி

உண்மையில் உறுதியாக,
குறைந்த செலவில்
உங்கள் வீட்டை கட்ட
இதோ நவீன முறை!



நிரந்தரமானது
இணைக்க சுலபம்
பார்வைக்கு
திருப்தி
கொடுக்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு &
ப்ளெயின் ஷீட்டுகள்

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

கலைப்பகுதி

முத்தமிழ் கலைஞர்கள்

கடந்த 16—8—57 வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு ராஜாஜி மண்டபத்தில் தமிழ் மக்களும், அமைச்சர்களும் கூடி முத்தமிழ் கலைஞர்களைக் கௌரவித்தார்கள். தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார், நாடகப் பேராசிரியர். ப. சம்பந்த முதலியார், இன்னிசைச் செல்வி கே. பி. சுந்தராம்பாள் இம் மூவருக்கும் சென்னை கவர்னர் அரசாங்கத்தின் சார்பில் அரசாங்க சின்னம் பதிக்கப் பெற்ற தங்கப் பதக்கங்களையும், சித்திர வேலைப்பாடுகள் அமைந்த தஞ்சாவூர்த் தட்டுகளையும் பரிசாக வழகினார்

நாடகத் துறையில் அரிய சேவை செய்தவர் ப. சம்பந்த முதலியார். எண்பத்தைந்து நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். நாடகத்தின் மூலம் நாடகத் தமிழை வளர்த்த பெரியார் அவர். மு. வரதராசனர் தமது எழுத்து வன்மையால் ஏராளமானவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர். இதயத்தை தொட்டு எழுதுபவர். அவர் எழுத்தோவியங்கள் தெவிட்டாத தீங்கனியாக விளங்குகின்றன. தமிழ் இசையின் உறைவிடம் கே. பி. சுந்தராம்பாள் இன்னிசை மழை பொழியும் ஆற்றல் வாய்ந்தவர். அவர் பாடும்போது கல்லும் கரைந்து விடுமே!

நம் முத்தமிழ்க்கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். நாம் பெருமை அடைகின்றோம். சென்னை அரசாங்கம் செய்த இந்த நல்ல காரியத்தைப் பாராட்டுகின்றோம். வாழ்க தமிழ் மொழி!

தமிழ் முழக்கம் செய்த கலைஞர்கள்

அன்று தமிழ் மன்னர்களின் புலிக் கொடி எங்கும் பறந்தது. கடாரம் வென்றான் ஒரு தமிழ் மன்னன். ஜாவாவில் பொற்கோயில் சமைத்தான் மற்றொரு மன்னன். இன்று கலைக்கொடியே வெற்றிக் கொடியாக மலேயா நாட்டில் நாட்டிவிட்டுத் தாயகம் திரும்பியுள்ளார்கள் டி. கே. எஸ். நாடகக் குழுவினர்.

இவர்கள் சென்ற இடமெல்லாம் வரவேற்புகள், வாழ்த்துகள். மலேயா மக்கள் நாடகங்களை நன்கு ரசித்தார்கள். ஏராளமான பரிசுகளுடன் டி. கே. எஸ். குழுவினர்கள் திரும்பி உள்ளார்கள். அவைகளை வைத்து ஒரு கண் காட்சி சாலையே அமைத்து விடலாம். தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் கற்பூரப் பெட்டகம் பரிசுப் பொருள்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. தம் நலை நகரின் தெருவெலாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்து, இப்போது தேமதுரத் தமிழோசையை மலேயா நாட்டில் பரவச் செய்து விட்டு நம் நாடு திரும்பியிருக்கும் டி. கே எஸ். நாடகக் குழுவினரை நாம் போற்றுகின்றோம்.

பட விமர்சனம்

பத்தினித் தெய்வம்

கதை :

மகேந்தரனும் குலசேகரனும் இணைபிரியாத நண்பர்கள். பல நாட்கள் பிரிந்திருந்த பிறகு ஒரு நாள் குலசேகரன், மகேந்திர மன்னன் விருந்தினனாய் வருகிறான். மகேந்திரன், தன் மனைவி குலசேகரனை அன்புடன் உபசரித்துப் பேசுவதைக் கண்டு அவள் மீது சந்தேகம் கொள்கிறான். குலசேகரனை கொல்லமுயல்கிறான். ஆனால் மதியூகியின் துணையால் குலசேகரன் தப்பித் தன் நாட்டை அடைகிறான். மகேந்திரன் மனைவியை சிறை வைக்கிறான். கருவுற்றிருந்த அவள் சிறையிலேயே ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். அக் குழந்தையையும் காட்டிலே விட்டு விடும்படி கட்டளையிடுகிறான் மன்னன். தன் மனைவியை 'விபச்சாரி' என்று குற்றம் சாட்டி மரண தண்டனை விதிக்கிறான். ஆனால் குழந்தையும் தாயும் உயிர் தப்பி விடுகின்றனர். பெண் குழந்தை யாதவன் ஒருவனால் வளர்க்கப்பட்டு பருவ மடைகிறாள். ராணியும் காட்டில் ஒரு ஆஸ்ரமத்தில் இருந்து வருகிறாள்.

குலசேகரன் மகன் ராஜேந்திரன் யாதவனால் வளர்க்கப்பட்டு வரும்

ராஜகுமாரியை காண்கிறான்; காதல் கொள்கிறான். இதன் முடிவு, ராஜேந்திரன் அரசை வெறுத்து பொன்னியுடன் மருத நாட்டை அடைகிறான்.

மகேந்திரன் தன் மனைவி நிரபராதி என்று உணர்ந்து திருந்துகின்றான். தன் மனைவியையும், மகளையும் தேட மார்த்தாண்டனை அனுப்புகிறான். அவன் ஒரு நாட்டியக் காரியை அரசகுமாரி என்று கூறி அரசனை ஏமாற்றி விடுகிறான்.

ராஜேந்திரன் மருதநாட்டு போலி இளவரசியின் அந்தப் புரக் காவலனாக நியமிக்கப் படுகின்றான். மார்த்தாண்டன் ராஜேந்திரனின் வில்லனாகத் தோன்றுகிறான். மகேந்திரன் பொன்னி தன் பெண் என்பதை உணர்கிறான். பிரிந்த மனைவியும்—மகளும் கிடைத்து விடுகிறார்கள். மங்களகரமாக முடிகிறது. இதுதான் கதை.

உப்பு சப்பற்ற-பழைய காலத்து ராஜாராணிக் கதை. நம்ப முடியாத சம்பவங்களை பொருத்த மற்றக் கதைப் பின்னலுடன் சேர்த்து எடுக்கப்பட்ட படம்.

வசனம் :

கே. எம். கோவிந்தராஜன் வசனம் எழுதியிருக்கிறார். அந்தோ பரிதாபம்! 'கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி'' என்ற பாட்டு நினைவு வருகிறது. பாவம்!

நடிப்பு :—

ஜெமினி கணேசன், சாவித்திரி வீரப்பா, சந்திரபாபு முதலியவர்

கள் நடித்திருந்தும் இந்தக் கதை சோபிக்கவே யில்லே. வில்லனுகத் தோன்றி தன் வரையில் கச்சிதமாக நடித்து நற்பெயர் பெரும் விரப்பாவும், காதல் ஜோடிகள் ஜெமினி கணேசன்–சாவித்திரியும் இதில் ஏன் இவ்வளவு மோசயாக போய் விட்டார்கள் என்பது புரியவே யில்லே. இதில் நடிப்பை காணவே முடியவில்லே. எல்லோரும் வந்து வந்து போகின்ருர்கள். மூன்றுமணி நேரம் மகிழ்ச்சியாக இருந்து போவோம் என்றுவந்தவர்களுக்குவெறுப்பை வாரி வழங்கும் படம்.

தமிழ்நாடு படங்களே எண்ணிக்கையில் அதிகமாக்க கற்றுக் கொண்டதே தவிர, உண்மையான கலேயை வளர்க்க இன்னும் கற்றுக் கொள்ளவில்லே என்பதற்குப் **பத்தினித் தெய்வம்** ஓர் எடுத்துக் காட்டு. இதில் பத்தினியும் இல்லே. தெய்வமும் இல்லே. வெறும் கேலிக் குறிய நிகழ்ச்சிகள் தான் நிறைந்திருக்கின்றன.

பாடல்கள்: தஞ்சை ராமையா தாஸ் எழுதியிருக்கிருர். சுமாராக உள்ளன.

சங்கீதம்: அவ்வளவு சிறப்பாக சொல்லுவதற்கில்லே.

ஒலியும், ஒளியும்: திருப்திகரமாக இல்லே.

ஆர்ட்: அதில் இருப்பதாகவே தெரியவில்லே.

எடிட்டிங்: மிகமோசமாக இருக்கிறது.

நடனம்: குசல குமாரியின் நடனம் சுமாராக இருக்கிறது. மற்றவை பார்க்கச் சகிக்கவில்லே.

டைரக்ஷன்: இது மிகமிக மோசம். அவர் தானே இந்தக் குறைக்குப் பொறுப்பு.

இரு சகோதரிகள்

கவி தாகூர் சிருஷ்டித்த 'இரு சகோதரிகள்' பிரசித்தமான கதை. இது வட நாட்டுச் சரக்கு என்று நம்மவர்கள் ஒதுக்கி விடலாம். ஆனல் இரண்டு சகோதரிகள் தமிழ் எழுத்துலகிலே பல உருவங்களில், பல கோணங்களில், பல விதமாக நமக்கு அறிமுகப் படுத்தப் பட்டிருக்கிருர்கள். திரையுலகிலும் இவர்கள் நமக்குப் பரிசயமானவர்கள் தாம்.

திரு நரசு அவர்கள் இப்போது மீண்டும் 'இரு சகோதரிகளே'ப் படமாக்கியிருக்கிருர். மூலக் கதை என்னும் தலேப்பிற்குக் கீழே சதாசிவப் பிரமம் என்ற பழக்கமான பெயர் திரையில் ஓடுகிறது. திரைக் கதை டைரெக்ஷன்: வேதாந்தம் ராகவய்யா. இவரது மேற் பார்வையில் தயாரான படங்கள் சில வெற்றி பெற்றிருக்கின்றன.

'இரு சகோதரிகள்' படத்தை பிலிம் சுருள்களுக்குள் அடக்குவதற்கு முன் கதைக் கருவைப் பற்றித் தீர்க்கமாக அவர் சிந்தித்து எடை போட்டுப் பார்க்கவில்லே என்பதை இப்படம் நிதர்சனமாக நிருபித்து விட்டிருக்கிறது. கதைக் கருவில் 'கனம்' இல்லே; புதுமை கிடையாது!

ஒரு தாய். அவளுக்கு வாத்தியாரம்மா உத்தியோகம். அவளுக்கு இரண்டு பெண்கள்; சகோதரிகள். அவர்களுக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் பாடு ஆபத்தாகிறது. காரணம், அவர்களேச் சமாதானப் படுத்துவதற்குத்தான் பொழுது சரியாக இருக்கிறது. அத்துடன், அவருக்கு போட்டிக் கூப்பன் எழுதுவதற்கும் இதன் விளேவாகத் தன் ஆருயிர் மனேயாட்டியிடம் 'அர்ச்சனே' பெறுவதற்கும் வேறு நேரம் தேவையாகிறது.

அந்தத் தாய் சாகும்போது, இளேய பெண்ணே மூத்த பெண்ணிடம் ஒப்படைத்துச் செல்கிருள். இருவரும் எஸ். எஸ். எல். ஸி. தேர்வு பெறுகிருர்கள். குடும்பத்தின் சிரமத் திசையில் காலேஜில் படிக்க முடியவில்லே. ஆகையால் தன் தங்கையைப் படிக்க வைக்கி

ருள் மூத்தவள். இதற்காக, அவள் வேறு ஊரில் வேலைக்காரியாகவும் பணி புரிகிருள். ஆனல் கல்லூரி வாசலை மிதித்த தங்கையோ, புது வாழ்க்கைப் பாதையில் திரும்ப நேரிடுகிறது. அவளுக்குக் காதல் பிறக்கிறது; குழந்தையும் பிறக்கி றது. நம்பிக்கை கொண்டிருந்த வன் நட்டாற்றில் விடுகிருன். தங்கை அபலையாகிருள். அக்காள் வேலை பார்த்த எஜமானர் வீட்டுப் பிள்ளையைக் காதலிக்கும் கட்டம் வளர்கின்றது. காதல் வெற்றி பெறும் தருணத்தில் தங்கை குழந்



'பதிபக்தி'யில் ஜெமினி கணேசனும், டி. எஸ். பாலையாவும்.

தையும் கையுமாக வந்து நிற்கிருள். காதலன் டாக்டர் சுந்தருடன் வீட்டை விட்டு வெளியேறுவதா கப் போட்டிருந்த அவளுடைய திட்டம் சிதைகிறது. தங்கையோடு தமக்கை ரகசியமாக வெளி செல் கிருள்.

காதலியைப் பிரிந்த டாக்டர் மனம் நொந்து போகிருன்; அவ ளது இருப்பிடம் அறிந்து அவளேச் சந்திக்கும் போது, அங்கு தூளியில் கண் வளர்ந்த பச்சைப் பாலகனே யும் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத் திக் கொடுத்திருக்கிருர் ஆசிரியர். காதலியைத் தவருகப் புரிந்து கொண்ட டாக்டர் அவளே மறப்ப தற்கு மதுவை நாடுகிருன். கடைசி யில் குழப்பங்கள் ஒரு மாதிரியாகத் தீர்வு காணுகின்றன. சகோதரி கள் இருவரின் வாழ்வும் வளம் காண்கிறது.

தமக்கையாக சாவித்ரியும், தங்கை யாக கிரிஜாவும், கிரிஜாவின் காதலன் வில்லஞக நம்பியாரும், சாவித்ரியின் காதலஞக ஜெமினி கணேசனும், சங்கித உபாத்தியா ராக டி. எஸ். துரைராஜூம் படத் தில் காட்சியளிக்கின்றனர். வி. கே. ராமசாமி, சட்டாம்பிள்ளே வெங்கட் ராமன், ஆகியோரும் முத்துலக்ஷமி யும் வருகிருர்கள்; போகிருர்கள்.

படத்தின் ஆரம்பத்தில் சகோதரி கள் ஆடும்போதும், பாடும்போதும் அவர்களிடையே போட்டியும் பூச லும் நிலவுகிறது. இந்தக் கட்டத் தில், டைரக்டர் படம் பார்ப்பவர் களுக்கு எரிச்சலே மூட்டுகிருர். கிரிஜா நடித்த பிற திரைச் சித்திரங் களேக் காட்டிலும் இதில் ஓரளவு நன்ருகத் தன் பாகத்தைச் செய் திருக்கிருர் என்றுதான் கூறவேண் டும். ஆனுல், அந்த ஆந்திர நடிகை யிடம் தமிழ் கொலையாவதை படத் தயாரிப்பாளராவது தடுத்திருக்கக் கூடாதா? சாவித்திரி கடமைக்கும் பாசத்துக்கும் மத்தியில் போராடும் போதும், காதல் விளேயாட்டில் ஊசலாடும் சமயத்திலும், வேலேக் காரியாக நடிக்கும் போதும், தன் தங்கை தன்னே வேலேக்காரி என்று வில்லனிடம் அறிமுகப்படுத்திய துடன் நிற்காமல் அவளே அறையும் கட்டத்திலும் நட்சத்திர நடிகையின் நடிப்பு சோபிக்கிறது. நம்பியாரைப் பற்றிப் புதிய செய்தி எதுவும் இல்லே; ஏனென்ருல், அவருக்குத் தரப்பட்டுள்ள பாகம் பழையது தானே! ஜெமினியின் நடிப்பு குறை சொல்ல இடமின்றி இருக்கிறது. காதலியைப் பிரிந்த சமயங்களில் அவர் படும்பாட்டை நன்கு படம் எடுத்திருக்கிருர்கள். டி. எஸ். துரைராஜுக்குத்தான் இந்தத் திரை ஓவியத்தில் அதிகப்படியான அலுவல். நம்மைச் சிரிக்க வைக் கிருர். அவருக்கு அனுசரணேயாக சிஷ்யப்பிள்ளே ஒருவனும் வரு கிருன்; அந்த மாணுக்கனுக்கு எத் தனே வயசு தெரியுமா? —சுமார் அறுபது இருக்கும். முத்துலக்ஷ்மி, துரை ராஜின் மனேவி—படத்தில்! போட்டிக் கூப்பன், இவர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய் பரிசளித்து விடுகிறது. துரைராஜ் உருமாறி விடுகிருர். இவருடைய சிஷ்ய னிடம் 'பாஸ்' என்று உத்தரவிடும் போதும், அந்த 'பாஸ்', "எஸ், பாஸ்" என்று உத்தரவுக்குக் கீழ்ப் படியும் போதும் சிரிப்பு வழிகிறது— கொட்டகையில்! ஒரு சமயம் தனக்கு ஆதரவளித்த சகோதரி களுக்குக் கடைசிவரை கடமை புரிந்து அவர்களின் வாழ்வில் இன் பம் மிளிர அவர் முயற்சி செய்து வெற்றிபெறும் கட்டங்கள் உணர்ச்சி பூர்வமாகத் தோன்றுகின்றன.

சகோதரிகள் இருவரும் வீணே வாசிக்கும்போது, அவ்விருவரின் முகங்களேயும் 'குளோஸப்பில்' காட்டும் போது ஒளிப்பதிவு நேர்த் தியாகயிருக்கிறது. நம்பியாருக்கு அவரது முறைப்பெண்ணேத் திரு மணம் முடிப்பதாகச் சொல்லி, கடைசியில் பார்த்தால் அந்தப் பெண் அவன் கைவிட்ட கிரிஜா

என்பது புலனுகிறது. எல்லாம் சகோதரிகள் செய்த ரகசியத் திட்டம் என்று தப்பித்து விடுகிறுர்கள். ஆனுல், அந்த இடத்தில் இன்னும் தெளிவாகச் சம்பவங்களைக் கையாண்டிருக்க வேண்டும். அடிக்கடி ரயிலும், காரும் தோன்றி 'போர்' அடிக்கின்றன. துரைராஜ் ஜவுளி வியாபாரம் செய்யப் போக தஞ்சைக் கவிராயர் இரண்டாயிரம் அடிக்கும் பாட்டாகப் பாடியுள்ளது, கடைசியில் நம் தலை வலிப்பதுதான் கண்ட பலனுகிறது.

வசனம்——பாடல்கள்: ராமையா தாஸ் அவர்கள். தமாஷ் பகுதிகளைக் கருத்துடன் எழுதியிருக்கிறுர். உள்ளத்தைத்தொடும் கட்டங்கள் ஒன்றிரண்டு வருகின்றன; ஆனுல் அவ்விடங்களில் வசனங்கள் உள்ளத்தைத் தொடவில்லை. டப்பாப்பாட்டுக்கள் 'இரு சகோதரி'களையும் விதி விலக்காக்கி விடவில்லை! தொடக்கப்பாட்டு ஒன்று பொருள் செறிந்து, கேட்கவும் இனிப்பாக இருக்கிறது.

டைரக்ஷன் திறமையைப் போற்றும்படியான கட்டங்கள் எதையும் அறிமுகப் படுத்தவில்லை இந்தச் சலனப்படம். 'துளி விஷம்', 'போர்ட்டர் கந்தன்' போன்ற படங்களுக்குக் கிடைத்த சராசரி வரவேற்புத்தான் இதற்கும் கிடைக்க முடியும்!

★

சந்தா விகிதம்

தனிப்பிரதி 25 ந. பை.
6 மாதச் சந்தா ரூ. 1. 50
வருடச் சந்தா ரூ. 3

விளம்பர விகிதம்

மேலட்டை : பின்பக்கம்

மூன்று கலர்	ரூ.	250
,, உட்பக்கம்	ரூ.	150
உட்பக்கம் :		
முழுப்பக்கம்	ரூ.	100
½ பக்கம்	ரூ.	60
¼ பக்கம்	ரூ.	30
1 கலம் 1 அங்குலம்	ரூ.	10

★

15-8-57௳ இதழ் பற்றிய விமர்சனத்துக் கான **பரிசு** முடிவு *1-10-57௳* இதழில் வெளியிடப்படும்.

விமர்சனங்கள் *15-9-57௳*வரை அனுப்பலாம்.

ஆ-ர்.

★

பெண்ணே ஓடிப்போ!

—சுகி—

இன்னும் ரயில் வரவில்லை. அதிகமான கூட்டமும் இல்லாத மேலக்கல்லூர் நிலையம். இரண்டொரு பிரயாணிகள் தூங்கி வழிந்துகொண்டிருந்தபோது மஞ்சள் குங்குமம் பளிச்சிடும் பெண்மணி —பாட்டி என்று சொல்லக்கூடிய— சொன்னால் கோபித்துக்கொள்ளக் கூடிய உருவம் ஒன்று என் பெஞ்சியில் வந்து உட்கார்ந்தது.

"எங்கே போகவேண்டும் பாட்டி?" என்றேன். 'ஆமாம், பாட்டி' என்பதை குரல் தாழ்த்திச் சொன்னேன்.

"நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டாள்.

"நான் மணியாச்சி."

"நான் தூத்துக்குடி" என்றாள்.

"நீங்கள் மட்டுமா?"

"ரெயிலில் தனியாக போகக் கூடாதோ?"

"போகலாம்" என்று சொல்லிவிட்டு கையிலிருந்த பத்திரிகையை பார்த்தேன். சுத்த கர்நாடகமான அம்மாளிடம் என்ன பேச்சு வேண்டியதிருக்கிறது. பிளாட்பாரத்தின் கோடியில் பச்சை தெரிந்தது. யாரோ ஒரு பெண் வேகமாக வர வேண்டிய வழியாக வராமல், குறுக்குப் பாதை பிடித்து ஓடி வந்தவள் நிதானமாக நடந்து வந்தாள். என் பார்வை அங்கே இருந்தது. வந்தவள் பயந்த மானைப்போல் திருதிருவென விழித்தாள். கண்கள் சிவந்திருந்தன; கன்னங்களிலே உவர்க்கோடுகள்; முகம் சற்று சிவந்திருந்தது. அழுது தாங்கமாட்டாத வருத்தம் பிரதிபலித்தது. என்ன கவலையோ, துக்கமோ?

எங்களுக்குப் பின்னால் நின்ற வேப்ப மரத்தடியில் அந்தப் பெண் வந்து உட்கார்ந்தாள். அவளுக்கு அருகாக யாரோ ஒரு அம்மாள் உட்கார்ந்திருந்தாள். இருவரும் ஏதோ பேசினார்கள். பெண்கள் இயல்பாகக் கேட்கும் கேள்விகள் பல அவர்களுக்குள் மடங்கி எழுந்தன.

"நீ செய்ததுதான் சரியம்மா" என்று பாராட்டுப் பத்திரம் வாசித்தாள். பாட்டி அத்தனையையும் கவனித்துக்கொண்டே சும்மா இருந்தாள்.

"ஆமாம் அம்மா. எத்தனை நாள் நாம் பணிந்து போகிறதாம்" என்றாள் வந்த பெண்.

எனக்கு 'யாருக்கு பணிந்து போகிறதாம்?' என்று கேட்க ஆவல். அவ்வாறு கேட்கும் வயதை நான் அடையவில்லை; வாலிபன்.

"அநியாயம் கொஞ்ச நஞ்சமா? என்னால் சகிக்க முடியவில்லை. என் அம்மா வீட்டுக்குப் போகிறேன்." என்று ஏதோ பெரிய வெற்றியை சாதிப்பவள் போன்று சொன்னாள்- என்னைவிட பாட்டியின் செவியில் அத்தனை தகவலும் பரிபூரணமாக விழுந்திருக்கவேண்டும். பெண் அல்லவா? உதட்

டசைப்பே வைத்து வார்த்தைகளை கண்டுகொள்பவர்கள் அவர்கள்.

"நாலு மாசம் என்ன, நாலு வருஷம் என்றாலும் வராதேயம்மா. காலிலே வந்து விழுந்து கெஞ்சிக் கூத்தாடினாத்தான் இந்த ஆம்பளை கள் சரியாக வருவாங்க. அதனாலே, சொல்றதைக் கேளு. வீட்டோட வாசலாக இருந்துவிடு. புருஷன் எத்தனை நாளைக்கு பெண்சாதியில் லாமல் வாழ்வான்? அடிக்கிறது. உதைக்கிறது. கொஞ்சமும் மரி யாதை காட்டுவதில்லை. பாடம் சொல்லற மாதிரி இப்படித்தான் செய்து காட்டவேண்டும்." என்ப தாக ஆக்ரோஷத்தோடு அந்த நடுத்தரப் பெண்மணி சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் வாழ்க் கையில் இத்தகைய கஷ்டம் வந்தி ருக்கலாம். தன் வழியைப் பின் பற்றவேண்டும் என்பது துறைத் தனமட்டுமா? குடித்தனத்திலும் இதே பாடந்தான். தன்னைப் போல் தன் புத்திமதியைக் கேட்டு உலகம் நடந்தால் என்ற கட்சியைச் சேர்ந்த பெண்மணியின் வீர வாச கத்தைக் கேட்டபோது எனக்குக் கூட முதுகிலே சவுக்கால் அடி விழுவதுபோல இருந்தது.

யார் செய்துள்ள புண்ணியமோ, புத்த போதனை செய்துள்ள அம் மாள் போகின்ற ஊருக்கு, தென் காசி போகும் ரெயில் வந்ததும் ஓடிப் போய் ஏறிக்கொண்டாள். ஆனால் ஞாபகமாகத் தான் சொன் னபடி "நாலு வருஷம் கம்முன்னு இருந்துபோடு" என்று எச்ச ரிக்கை கொடுத்தாள்.

எனக்கு எல்லா விபரங்களும் சொல்லாமலே விளங்கிவிட்டன. அந்தப் பெண் பாவம், பால்யம். கோபித்துக்கொண்டு வந்திருக்கி றாள். குடும்பத்துச் சண்டைக்காக தனியாக ரெயில் ஏறி ஊருக்குப் போகிறாள். போகிற இடம் வசதி யுள்ள இடமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஓட மனம் வராது தானே. அதற்குள் வாழ்க்கை கசந்து போகிறதென்றால் காரணம் எதுவாக இருந்தாலும் பண்பின் மீது பாரத்தைப் போட்டபோது அது நியாயமா என்ற எண்ணம் தோன்றியது. ஆணாக இருக்கும் வரையும் பெண் செய்கின்ற தவறு தலை மனம் மன்னிக்க சம்மதம் கொள்ளாது; பெண்ணாக இருக் கின்றபோது ஆண் செய்கின்ற தவறுதலை மன்னிக்க மனம் இடம் கொடுக்காது.

மிரள மிரள விழித்துக்கொண் டிருந்த அப்பெண்ணை நோக்கிக் கூப்பிட்டாள் பாட்டி.

"இந்தாம்மா மீனாட்சி, இங்கே வா" என்றாள்.

பாட்டி பெயர் வைத்தமாதிரி கூப்பிட்டதும் நான் அயர்ந்து போனேன்.

"என் பெயர் மீனாட்சி இல்லை".

"மீனாட்சியில்லை. ஏதோ காமாட்சி. வா இப்படி" என்றாள்.

அவள் புலியிடம் சிக்கிய மானைப் போல நடந்து வந்தாள். அந்த இடத்தில் யாராவது ஒரு பெண் துணையில் தான் இருக்க வேண்டுமென்ற எண்ணம் அவள் இதயத்தைப் பொசுக்கி யிருக்கவேண்டும்.

"நீ எந்த ஊருக்கு அம்மா போகணும்?"

"மதுரைக்கு"

"மதுரையிலே உன் அம்மா அப்பா இருக்கிறாங்களா?"

"இருக்கிறாங்க"

பாட்டி தன் அருகாக இடம் ஒதுக்கிவிட்டு அந்த பெண்ணை உட்காரச் சொன்னாள். சொல்லி விட்டு, "ஏன் தம்பி நீ பெண் சாதியை அடிப்பது உண்டா?" என்றாள்.

நான் என்ன சொல்வது? இல்லையென்றாலும் சங்கடம்;

ஆமாம் என்றுலும் கேவலம்.

"உம்" என்றேன்.

பாட்டி சிரித்துக்கொண்டாள்.

"இந்தாம்மா உம்பேரு என்னவாகவேணும் இருக்கட்டும். பெண்சாதியைக் கண்டு பல்லை இளிக்கிறதும் உண்டு; பல்லை உடைக்கிறதும் உண்டு; அதுக்காக கோபங்கொண்டது சரிதான். அப்படி பழி வாங்கினுத்தான் ஆண்களுக்குப் புத்தி வரும். நீ ரொம்ப கெட்டிக்காரி. கையிலே எவ்வளவு பணம் வைத்திருக்கிருய்?"

அந்தப் பெண் ஏதோ கொஞ்சம் பணம் இருப்பதாகச் சொன்னுள்.

"இது எத்தனை நாள் காணும்?"

"என் மனம் கசந்துபோச்சு இனிமேல் பிச்சையெடுத்தாலும் இங்கே வரப்போவதில்லை."

"என்னை மாதிரித்தான் நீயும். ரொம்ப துனிச்சல் காரி."

எனக்கு திக்கென்றது. பாட்டி இந்த வயசிலே இவ்வளவு

துணிச்சல் உள்ளவள் இல்லை; சின்னஞ்சிறு பெண்ணாக இருக்கும்போதே துணிச்சல்காரி.

"சொல்லுங்கள். அப்படி என்ன வீரத்தனம் செய்தீர்கள்?" என்றேன்.

"சரிதான்; ஆண் பிள்ளைகள் என்ன வீரத்தனம் செய்ய முடியும்? அப்பாவி பெண் சாதியை நாலு அடி அடிக்கலாம். வேறு யாரையாவது அடிக்க முடியுமோ? அதிலே தான் ஆண்கள் தீரர்கள்."

நான் ஏன் பேசுகிறேன்? காரணம், சென்ற மாதம் எனக்கும் என் மனைவிக்கும் நடந்த சச்சரவில் ஓங்கி கன்னத்தில் அடித்துவிட்டு ஒருவாரம் கண்ணீர் உகுத்திருக்கிறேன். காரணம் கட்டிய மனைவியை அடிப்பது பாவமென்பதல்ல; அநாகரீகமென்பதால். அதனுல் எனக்கு சுருக்கென்றது.

"உங்கள் கணவரும் கோபக்காரர்போலும்."

"ரொம்ப இளக்காரம். பெண்கள் என்ருல் கிள்ளுக்கீரையாக எண்ணுவது"

கேட்டுக்கொண்டிருந்த அந்தப் பெண் கலகலவென்று துக்கத்தை மறந்து சிரித்தாள். மறு கணம் என்ன வரப்போகிறதென்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

பாட்டி சொல்லுவாள்:

x x

முப்பது வருஷத்துக்குமுன் இந்தப் பாதையிலே வண்டிகள் உண்டு. ரெயில்கூட இல்லை. அப்போது எனக்கும் என் கணவருக்கும் சண்டை வந்துவிட்டது. நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். பொறுத்தவர் பூமியாள்வார் என்பார்கள். அவர் என் முதுகை புளிய மிலாறு கொண்டுதான் ஆண்டு வந்தார். என்ன செய்கிறது? அக்கம் பக்கத்துக்காரர்கள் 'பொறுமையாக இரு பார்வதி, கடவுள் நன்மை செய்வார்' என்ருர்கள். அடிபடுகிறவளுக்குப் பொறுமையாக இருப்பதில் லாபம் இருந்தால் அவள் பொறுமையாக இருக்கமாட்டாளா? என் பொறுமை ஒரு நாள் எல்லை மீறிவிட்டது. கிணற்றிலே ஓடிப்போய் விழுந்துவிட்டேன். இத்தனைக்கும் அற்பமான காரணம்.

அவருக்குப் பிடித்தமான கீரைக் குழம்பு வைக்கவில்லை. அதற்கு பதிலாக வேறு எதையோ வைத்துவிட்டேன். எப்போது பெண்சாதியிடம் பிரியம் போய்விட்டதோ, அடிபிடிக்கும், கட்சி கட்டுவதற்கும் காரணமே வேண்டாம். எரிந்துகொண்டிருந்த கொள்ளிக்கட்டையைக் கொண்டு என்னை அடிக்க வந்தார். நெருப்பு பட்டு என் உடலே வெந்தது. அப்படியும் அடிப்பதை விடவில்லை. உனக்கு இருப்பதைப்போல எனக்கும் அண்ணு, தம்பி, அப்பா, அம்மா இருந்தார்கள்.

நான் கிணற்றில் விழுந்தது பயமுறுத்த என்று சொல்லி மறுவாரமே எதற்கோ சண்டை வந்தது. பிடிக்காத மனைவி கால் பட்டால் குற்றம்; கை பட்டால் குற்றந்தானே. ஆக எங்களுக்குள் எப்போதும் சண்டையும், சச்சரவும் இருக்கும்.

இரவோடு இரவாக நான் கிளம்பிவிட்டேன். பகல் என்

ருல் எனக்குப் பயம். எங்கே போனாலும் அது கிராமம். இன்னார் சம்சாரம் போகிறாள் என்பார்கள். அவருக்குத் தெரிந்துவிடும். அதனால் இரவு புறப்பட்டேன். ஒத்தடித்தடம். வெறும் இருட்டு. என்னமோ ஒருவெறி. வீட்டுக்கு வெளியே வந்து விட்டேன். இப்போது நினைத்தாலும் பயமாக இருக்கிறது. எங்கும் பனைமரக்காடு. திருட்டுப் பயல்கள் நடமாடுகிற இடம். வெளியே வந்தவளுக்கு பாதித்தூரம் வந்த பின்னர்தான் தெரிந்தது தவறு என்று. என்ன செய்ய? ஏதோ ஒரு போக்கு வண்டியில் ஏறினேன். அந்த வண்டிக்காரன் கொஞ்சம் நல்லவன். என்னைக்கொண்டு சேர்த்தான். அந்தக்காலத்து ஆண்பிள்ளைகள் போல இந்தக் காலத்து ஆண்பிள்ளைகள் துணையை நம்பி வெளியே போக முடியாது; முடிந்தாலும் கூடாது அம்மா. அப்படி இருக்கிறது உலகம். அன்று ஏதோ தர்மம், நம்பிக்கை என்ற பண்புகள் இருந்தன.

வீட்டுக்கு வந்தபோது, உன் அப்பா எப்படியோ? என் அப்பா என்ன செய்தார் தெரியுமா? வெளியே சொன்னால் வெட்கம். செருப்பை எடுத்துக்கொண்டு வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டார். நான் தனித்து வந்தது இரவு; ஓடி வந்தது தவறும். எப்படியிருக்கிறது. அங்கேயே அடிபட்டுக்கொண்டு செத்திருக்கலாமே யென்று இருந்தது. எப்படியிருக்கும் எனக்கு?

"அப்பா, நீங்கள் இன்னும் என்ன செய்தாலும் உங்களை விட்டு நான் போகமாட்டேன்". என்று உட்கார்ந்துவிட்டேன். அழுத அழுகையையும் அடக்கிக்கொண்டேன்.

"என் குடும்பத்தின் பெயருக்கு களங்கம் வந்தால்?" என்றார் அப்பா.

நான் அடிபட்டுச் சாகலாம்; இவர்கள் குடும்பம் பெரிதாம். எப்படி இருக்கிறது உலகம்! சுத்த முட்டாள்தனமான உலகம்! ஒருவாறு என் தகப்பனார் கோபந்தணிந்து என்னை அழைத்துக்கொண்டு போய் கணவர் வீட்டில் விடுவதாக முற்பட்டார். தாமே நேரில் வந்து சமாதானம் செய்வதாகவும், மாப்பிள்ளை தாம் சொன்னபடி நடப்பார் என்றும் சொன்னார். இத்தனைக்கும் அவரும் மிகவும் நல்லவர்தான். என் தலைவிதி அப்படி அமைந்தது. ராசிப்பொருத்தம் அப்படி.

ஒரு மாதத்திற்குப்பின் என்னை அழைத்துக்கொண்டு வண்டி நிறைய பட்சண பலகாரங்கள் செய்துகொண்டு போனார். அங்கே என்ன நடந்தது தெரியுமா? என் தகப்பனார் முகம் கரியாகப் போய் விட்டது.

"எவண்டா, நீ பெற்ற தகப்பனு? ஒரு பெண் இரவிலே என் வீட்டை விட்டு ஓடிப் போனவள் மீண்டும் வருவதற்கு என்ன யோக்கியதை? அவளுக்கு ஜீவனாம்சம் எவ்வளவோ அதை வாங்கிப்போ." என்று வாசலை மறித்துக் கொண்டு நின்றார். என் தகப்பனார் கையெடுத்துக் கும்பிட்டார்; நான் அவர் காலைப் பிடித்து மன்னிப்புக் கேட்

டேன்; என்ன இதயமோ இந்த ஆண்கள் இதயம். இரும்பைவிடக் கடினமான இதயம். ஊரே வந்து என்னவோ சொல்லிற்று. இதற்கு அவர் சொன்ன பதிலைச் சொல்லக்கூட கூசுகிறது.

"இவள் என் பெண்சாதி ஐயா. இவளை வைத்து இந்தக் கூட்டத்தில் ஒரு பயலும் வாழப் போவதில்லை. நான் வாழ்கிறவன். என் மனம் சரியாக இல்லை. நீங்கள் நியாயம் பேசலாம். என் மனச்சாட்சி ஒத்துக்கொள்ளாது."

எனக்கு மாசு கற்பித்து மறைமுகமாகப் பேசிவிட்டார்: அதை எண்ணினால் நெஞ்சு வெடித்தது. நான் பணிவாக நடந்ததுபோல எவள் நடந்திருப்பாள்?

"அப்பா, வாருங்கள். இங்கே இருப்பதைவிட நரகத்தில் இருக்கலாம்." என்றேன். நான் என் அப்பாவை வண்டிக்கு இழுத்து வந்தேன். பாவம்! அவர் குனிந்த தலை நிமிராமல் வண்டிக்குள் வந்து ஏறினார். நாங்கள் கொண்டுபோன பட்சணத் தவலைகள் இரண்டு மூன்று இருந்தன.

அதை அந்த ஊரை விட்டு வருகிற வழியிலே உள்ள தெப்பக்குளத்தில் தவலையோடு தூக்கி எறிந்தார். அவசரத்தில் அதற்குள்ளே இறங்கவும் துணிந்து விட்டார்.

வண்டிக்காரன் தைரியசாலி. நீந்திப்போய் அவரை எடுத்துக் கொண்டு வந்து வண்டியிலே போட்டான். மெதுவாக வண்டி ஊருக்கு வந்தது. அன்று படுத்தவர் அப்படியே பக்கவாதம் வந்த மாதிரி வாய் பேச முடியாமல் படுத்து விட்டார். என்னால் அப்பா பட்ட மனத் துயரில், என்னோடு பேசுவதையும் அம்மா நிறுத்திக் கொண்டாள். அப்போது அங்கே வந்த டாக்டர்—இளம்பிள்ளை அவர்— என் தகப்பனார் நோயைக் குணப்படுத்தவந்தார். பின்னிட்டுத்தான் அவர் கண் என் மீது இருப்பது அறிந்தேன்.

"நீ சம்மதம் சொன்னால் உன் தகப்பனார் நோயைக் காப்பாற்றுவேன். இல்லாவிட்டால் பாதியில் வைத்தியம் நின்றுவிடும்." என்று ரகசியமாகச் சொன்னார்.

என்ன நினைக்கிறாய்? பெண்ணே, கணவனைப் பிரிந்து வாழ வந்துவிட்டால் இப்படித் துணிவாக எந்த முட்டாளும் பேசுவான். நாளை முதல் டாக்டர் வராவிட்டால் அப்பா பிழைப்பது கடினம். இதை வெளியே சொன்னாலும் எனக்கு ஆபத்து. தனிமையில் வெளியே சொல்ல முடியாத இந்த அபவாதத்தை மனதிற்குள் எண்ணி எண்ணி அழுது துடித்தேன். வீட்டிலே என் கணவனை எண்ணி நான் அழுவதாக எண்ணினார்கள்.

ஆபத்து எவ்வளவு கடினமாக வளர்ந்து விட்டது!

அம்மா, "டாக்டர் வரக்காணோம். நீ போய் மருந்து வாங்கி வா" என்று அனுப்புகிறாள். பெண் புருஷனைக் கோபித்துக் கொண்டு வந்து விட்டால் பெற்ற தாய்க்கும் பிள்ளை மீது அன்பு கிடையாதா? எதைச் சொல்வது எதைச் செய்யலாம் என்ற எண்ணமும் போய்விடும் போலும் தலைவிதியை எண்

ணிக் கொண்டு நான் பேசாதிருந்தேன்.

நல்ல வேளையாக என் பெரிய தகப்பனார் அன்று ஊரிலிருந்து வந்திருந்தார். அவர் போய் டாக்டரை அழைத்து வந்தார். பெரியப்பா ஊருக்குப் போய் விட்டால், என்ன ஆகும்? என் பாடு மிகவும் கஷ்டமாகப் போய் விட்டது.

அதிகம் வளர்த்துவானேன். அந்த டாக்டரின் சொல் என்னை ஊசியாகத் தாக்கிற்று. காரணம் நான் வாழாவெட்டி. அதனால் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். என்ன அக்கிரமம்! பீஸ் கேட்டு விட்டார். எங்களிடம் அதிகமான பணம் இல்லை. அம்மா தவிக்கிறாள்.

"அடியே, உன்னால் நானும் நடுத்தெருவில் நிற்கும்படி செய்து விட்டாயே." என்று துடிக்கிறாள். நான் வாழாமல் வந்ததைகூட அம்மா கவனிக்கவில்லை. எங்கு விதவையாகத் தவிக்க வேண்டியது வருமோ என்று எண்ண ஆரம்பித்து விட்டாள்! தாய்கூட விரும்பாத நிலையைச் செய்துவிட்டேனா? ஊரிலே என்ன பேச்சு? 'தாயைக் கொல்ல வந்த பாவி; தந்தையை கொல்லுகின்ற பாவி; புருஷனை வெறுத்த புண்ணியவதி' என்ற பட்டங்கள். அங்கே இருந்த சூழ்நிலையில் இக்காலத்தைப் போல இல்லை. என்னிடம் யாரும் பெண்கள் பேசுவதில்லை. பிறர் பேச்சுக்கொடுப்பதே தவறு என்று எண்ணிக் கொண்டனர்.

என்னிடம் இறக்கம் காட்டி யாராவது பேசினால், அவர்கள் தாரம் இழந்த ஆண்கள்; அதுவும் மனசிற்குள்ளே குரோதங் கொண்டு பேசுவார்கள்.

சை. என்ன உலகம்! கணவனை மதிக்காத போது உலகம் அந்த பெண்ணையும் மதிப்பதில்லையா? எனக்கே, ஊருக்குத் தீ வைத்து, ஒவ்வொரு ஆண்மகனையும் நெருப்பிட்டுக் கொளுத்திவிட வேண்டும் என்ற ஆத்திரம் எழும். ஆனால் எப்படியும் தனித்து வாழ்வது என்று முடிவு கட்டிவிட்டேன். என் பெரிய தகப்பனார் மகன் எனக்கு அண்ணா. அவன் எனக்குத் துணையாக ஆறுதல் சொன்னான். தன் வீட்டோடு வந்து இருக்கச் சொன்னான். நிம்மதியாகப் போனேன். ஆனால் அங்கே எனக்கு நாளுக்கு நாள் வேலைக்காரி அந்தஸ்து வந்தது. அதற்குமுன் நாத்தி யென்ற மரியாதை தந்த அவன் மனைவி கேவலமாக எண்ணினாள்.

அப்புறம் என்ன செய்கிறது? இந்தப் பெண் அப்பா அம்மா நல்லவர்கள் என்று ஓடுவதைப் போல நான்போனேன். ஆனால் நமது முன்னால் இரக்கம் காட்டுகிறார்கள். பெண், புருஷன் வீட்டிலிருந்து ஒய்வாக நாலு மாதம் வந்தாலும் தாய் தந்தையர் மதிக்கிறார்கள். நிம்மதியாக ஓடி வந்துவிட்டால் மறைமுகமாக காறித்துப்புகிறார்கள். உலகம் செய்கின்ற பரிகாசங்கள், கணவன் செய்துள்ள கஷ்டங்களைவிட அதிகமாக இருக்கவே நான்கு ஆண்டுகள் சுற்றிவிட்டு அங்கேயே போய்ச் சேர்ந்தேன். அவர் காலடியில் கிடந்து ஒரு வழியாக குடும்பத்தோடு வாழ்ந்தேன். எனக்கு வரவிருந்த கெட்ட

பெயர்கள் எத்தனை எத்தனை என்பதைஎன்னைப்போல அனுபவித்தவளுக்குத்தான் தெரியும். மற்றவர்கள் சிறிதும் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாது.''

அந்தப் பெண் பெரிய மூச்சு விட்டாள். அவள் கண் கலங்கி நின்றது.

'' உங்கள் அப்பாவா செருப்பால் அடித்தார்?'' என்றாள்.

''ஆமாம். என் அம்மா என்னிடம் பேசவேயில்லை.''

'' அம்மாவா அப்படி நடந்து கொண்டாள்?''

'' சொன்னால் நம்பமாட்டாய். நீ அதிர்ஷ்டக்காரியாக இருந்தால் வேறுவிதமாக இருக்கலாம்.''

அந்தப் பெண், ''அம்மா, நான் திரும்பிப் போகலாமா? உங்களுக்கு நேரிட்ட துன்பங்கள் எனச்கும்வந்தால்?''என்று கேட்டாள்.

''இந்தக் காலத்தில் மறுமணம் வந்திருக்கிறதே?''

''அம்மா, அந்தவார்த்தையை மட்டும் சொல்லாதீர்கள்'' என்றவள் அந்த பிளாட்பாரத்தில் ஓடிக்கொண்டிருந்தாள். அவள் எந்த திக்கிலிருந்து ஓடி வந்தாளோ அந்த திக்கு நோக்கி ஓடினாள்; ஓடினாள்

ரெயிலும் வந்துகொண்டிருந்தது. எங்கள் பெஞ்சுக்கு அருகாக பெரியவர் ஒருவர் கைத்தடியை வைத்துக்கொண்டு வந்தார்.

அவரைக் கண்டதும் பவ்வியமாக எழுந்து நின்றாள் பாட்டி. பெரியவர் கைத்தடியை ஊன்றிக்கொண்டே, '' ஸ்டேஷன் மாஸ்டர் ரொம்ப நல்லவன். காப்பி பலகாரம் கொடுத்து உபசாரம் செய்தான். பேசிக் கொண்டிருந்தேன்'' என்றார்.

பாட்டி பதில் சொல்லவில்லை.

''இவர்தான்'' என்று தயங்கினேன்.

''இவர்தான். இவருக்கு நான் தான்'' என்று பதிலுக்கு சிரித்துக்கொண்டு பதில் சொன்னாள்.

'என்ன பேசிக் கொண்டிருந்தாய்? நீங்கள் எங்கே போகிறீர்கள்?'' என்றார்.

''அடேயப்பா, பெரிய கதை சொன்னார்கள், பாட்டி''

''என்ன கதை? இவள் பேஷா கதை சொல்லுவாள். நான் கேட்டால் மட்டும் இன்றும் நாணம் வந்துவிடும். என்ன பார்வதி?''

'' ஒன்றுமில்லை. ஒரு அசடு புருஷனிடம் கோபித்துக் கொண்டு ரெயிலடிக்கு வந்து விட்டது. அதுக்கு கொஞ்சம் பயங்காட்டுவதற்கு நிறைய புளுகி வைத்தேன், அத்தனையும் என் வாழ்க்கையில் நடந்ததுபோலே.''

எனக்கு தூக்கிவாரி போட்டது. அப்பப்பா.....பெண்கள் தான் எவ்வளவு பொல்லாதவர்கள் என்று எண்ணியபடி ரெயிலுக்குள் ஏறினேன்.

'' நீங்கள் ஒருநாள் கூட கோபித்ததில்லையே. அந்தப் பெண்ணுக்கு நீங்கள் பெரிய கிராதகர் என்று கதை கட்டினேன்.''

'' போகிறது. நான் வம்பு அளந்துகொண்டிருந்தேன். நீ யாவது நல்ல காரியம் செய்தாயே'' என்று முதுகிலே தட்டிக்கொடுப்பதைப் பார்த்த போது நாணத்தாற் முகஞ் சிவப்பதைக் கண்டேன். மாலை சூரியன்கூட அவ்வளவு அழகாக இருந்ததை நான் பார்த்ததில்லை.

★

உழவுக்கும் தொழிலுக்கும்



வந்தனை செய்வோம்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிட்.
மதுரை • திருச்சி - திருநெல்வேலி
புதுக்கோட்டை • சேலம் - கோயம்புத்தூர்

மதறாஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிட்,
மதறாஸ் — பெங்களூர்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.
மதறாஸ்-6

டி.வி.எஸ்.
ஸ்தாபனங்கள்

TVS

தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.
மதறாஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
புதுக்கோட்டை — மதறாஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸஸரீஸ்
பிரைவேட் லிட்.
மதறாஸ்-2

சுந்தரம்ஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிட்.
மதறாஸ்-2

197686

மனத்திற்கு !

பேயா யுழலுஞ் சிறுமனமே
 பேணு யென் சொல் இன்று முதல்
நீயா யொன்றும் நாடாதே
 நினது தலைவன் யானே காண்
தாயாம் சக்தி தாளினிலும்
 தரும மென யான் குறிப்பதிலும்
ஓயாதே நின்றுழைத்திடுவாய்
 உரைத்தேன் அடங்கி உய்யுதியால்

(வேறு)

சென்றதினி மீளாது, மூடரே, நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலை யெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர் ! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவீர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி யின்புற்றிருந்து வாழ்வீர்;
தீமையெலாம் அழிந்துபோம், திரும்பிவாரா.

—மகாகவி பாரதியார்.

அறிவிப்பு

ஆயிரக்கணக்கான நேயர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய விரைவில் 'புதுமை' மாதம் இரு முறையாக வெளிவரும்.

—நிர்வாக ஆசிரியர்.

தந்தி : 'ஜுவல்லர்ஸ்' போன் : 49



பவுன், தங்கம், வெள்ளி,
வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி

கிளைகள் : **சென்னை, காயல் பட்டணம்,**
யாழ்ப்பாணம் & கொழும்பு.

விரைவில் வருகிறது
புத்தா பிக்சர்ஸ்
பதிபக்தி
தமிழ்
கதை, வசனம்
சோலைமலை
சங்கீதம்
விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன்
A.பீம்சிங்
பூரண உரிமையாளர்
S.K.பிக்சர்ஸ் திருநெல்வேலி
சென்னை-24

Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah,
Manager, Mohan Ram Press,